1000 ரூபாய்

ரொக்கப் பரிசு

பிரவேசக் கட்டணம்

இல்லை.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
20 DEC 1933
MADRAS

விவரத்தை

அடுத்த மாதம்

இதே இடத்தில் பாருங்கள்.

நல்ல சந்தர்ப்பத்தை

நழுவ விடாதீர்கள்.

சென்னை
JL
23 TA
N33:4.12

சகல மேக சித்தாதி எண்ணெய்

இந்த எண்ணெயைக் காலையில் ஒரு தேக்கரண்டி அல்லது அரை அவுன்சு எடுத்துக்கொண்டு 1/8 படி பசும்பாலில் கலந்து சாப்பிட வேண்டும். இரண்டு மூன்று தரம் மலம் தள்ளும். மேக வாய்வு, கை கால் பிடிப்பு, உடம்புவலி நீங்கும். வயிற்றில் தங்கிய வாய்வையும் வெளிப்படுத்துவதுடன், பெண்களுக்குண்டாகும் சூதக வாய்வு, சூதக வலி, பித்த குன்மம், வெள்ளை வியாதி, மூலம், பவுத்திரம், குஷ்டம் இவைகளைப் போக்கும். வயிற்றிலுள்ள இரணங்களை ஆற்றும்.

இந்த எண்ணெய் சாப்பிடும்போது தயிர் சாதம் அல்லது மோர் சாதம் சாப்பிட வேண்டும். எண்ணெயை இரண்டு நாளைக்கு ஒரு

மூறை சாப்பிட வேண்டும். பாரிச வாய்வுக்கு இது உயர்ந்த எண்ணெய். வாத சரீரம் இளைத்துவிடும்.

சில அபிப்பிராயங்கள்

திரு. டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு எழுதியது: நான் ஒரு வருட காலமாய்ப் பல வைத்தியர்களிடம் எண்ணெய்களும், லேகியங்களும், ஆங்கில மருந்துகளும், இன்ஜெக்ஷன்களும் கொடுத்து என் மனைவிக்குச் சிகிச்சை செய்து ஒன்றும் பயன்படவில்லை. கடைசியில் சென்னைக் கோபாலாசாரியார் உங்களைப் பற்றிக் கூறினர். அவர் வார்த்தைக்கிணங்கி தங்களிடம் வந்து சகல மேக சித்தாதி எண்ணெயை வாங்கிக் கொண்டுபோய் 5-நாள் கொடுத்தேன். முதல் நாளிலேயே கணுக்களில் இருந்த மேக நீரிலுண்டான வீக்கங்கள் நீங்கிவிட்டன. மூன்றும் நாள் சம்பூரண சுகத்தைத் தந்தது. நீங்கள் கூறியபடி 3-ஆம் நாள் எண்ணெய் சாப்பிடும் வரையில் தயிரன்னத்தை இரவு பகலாகக் கொடுத்து வந்தோம். இப்போது என் மனைவி உலாவி வருகின்றுள். இனி என்ன மருந்து கொடுக்கலாம் என்பதைத் தெரிவிக்கவும்.

சென்னை
15—5—30

இப்படிக்கு.
அண்ணுவையங்கார்.

கனம் டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு,

தாங்கள் எனக்குக் கொடுத்த சகல மேக சித்தாதி எண்ணெயை இரண்டு நாள் சாப்பிட்டேன். என் முழங்கால் வீக்கமும் பிடிப்பும் நீங்கிவிட்டது. இடுப்பு வலியும் போய்விட்டது. வயிற்றில் சப்தித்துக்கொண்டிருந்த வாய்வும் நீங்கிவிட்டது. இன்னும் ஒரு வேளை எண்ணெயைக் கையிருப்பாக வைத்திருக்கிறேன். இந்த லெட்டர் கொண்டுவரும் பிராம்மண விதவை மிகவும் ஏழை. கால் குடைச்சலினல் அனேக நாளாய்க் கஷ்டப்படுகிறுள். கிருபை கூர்ந்து ஒரு ரூபா வாங்கிக்கொண்டு இரண்டு வேளை எண்ணெய் கொடுத்தனுப்பவும். நான் தங்களை வந்து பார்க்கிறேன்.

இப்படிக்கு,
கீழ்வீதி சீனிவாச ஐயங்கார்,
சைவ முத்தையா முதலி வீதி, சென்னை.

இத்தகைய இன்னும் எண்ணிறந்த நற்சாட்சிகள் பெற்ற

சகல மேக சித்தாதி எண்ணெய்

புட்டி 1-க்கு விலை ரூபா 5.



அயத்தங்க திராவகம்

நண்பர்களே! இந்த மருந்தானது மலேரியா என்னும் விஷ சுரத்தினாலாவது அல்லது வேறு எந்த சுரத்தினாலாவது சரீரம் இளைத்து இரத்தம் குறைந்து சோகை போலும் வெளுத்துக் காணப்படும் இளைத்த தேகிகளுக்கு ஒரு ஆச்சரிய அபூர்வ மெனவே காட்டும்.

இதைச் சாப்பிடுபவர்களுக்கு மயிர் கறுத்து வளரும்; பசியின்மை நீங்கும்; மலம் தாராளமாய்க் கழியும்; தாதுவிருத்தி உண்டாகும்; பரிசுத்த இரத்தம் பெருகும்; நல்ல பசியுண்டாகும்; முகம் வசீகரமாய்க் காணும்; மேனி சிவக்கும்; நரம்புகள் தடிக்கும்; பசி யதிகரிக்கும். இம்மருந்தை சாப்பிட்டவர்கள் வீரர்களாகவும், பலசாலிகளாகவும், இரத்த சுத்தியும், இரத்தப் பெருக்கும் பெற்று பித்த சோகை, பித்த பாண்டு, ஊதுகாமாலை, எனும் புருக்கி முதலிய நோய் நீங்கப் பெறுவார்கள்.

இம் மருந்தால் மலமும் தாராளமாய்க் கழியும். இம் மருந்தைச் சாப்பிட்டவர்கள் பயில்வான்களாவார்கள். திடகாத்திர புத்திரர் களைப் பெறுவார்கள்; இன்பத்தையும் அடைவார்கள்.

இம் மருந்தைப் பால்யர் முதல் வயோதியர் வரை ஆண் பெண் இருபாலர்களும் எந்தக் காலத்திலும் சஞ்சீவியைப்போல் உபயோகித்து வரலாம்.

மக்கள் சுகம்பெற வெண்ணியே குறைந்த விலைக்கு விற்கப்படுகிறது.

உபயோகிக்கும் விதம்:—ஒரு அவுன்சு ஜலத்தில் பெரியவர்களுக்கு 2 துளி முதல் 5 துளி வரையிலும், சிறுவர்களுக்கு 1 முதல் 3 துளி வரையிலும் காலை மாலை கொடுக்கலாம். யாதொரு பத்தியமும் இதற்கு வேண்டுவதில்லை.

சில அபிப்பிராயங்கள்

OFFICE OF THE REGISTRA
20 DEC 193
ADRAS

அன்புள்ள மாசிலா திலக !

தாங்கள் முந்தி யனுப்பிய வி. பி. வந்து பெற்றுக்கொண்டேன். சாமான் திருப்தியாக யிருக்கிறது. நானும் ஒரு அனுபவ வைத்தியனாதலால் விலை குறைவு செய்து அனுப்பினால் தங்கள் மருந்தை அதிகம் செலவு செய்வேன். பின்பு தங்களுதவி கண்டு தங்களுக்கு சிலோன் ஏஜண்டுமானாலு மாவேனாதலால் அதை யனுசரித்த அரை டஜன் அயத்தங்க திராவகம் (ஆறு போத்தல்) வி. பி. பார்சலில் அனுப்ப வேண்டுகிறேன்.

S V. அக்னீஸ்வரன்.

ஐயா!

தாங்கள் எனக்கு ஒன்றரை மாதங்கட்கு முன் அனுப்பிய அயத்தங்க திராவகத்தை உபயோகித்ததில் மிகவும் குணமடைந்தேன். ஆதலின் நான் அதனைத் தொடர்ச்சியாகக் கையாட விரும்புகிறேன். எனவே தொடர்ச்சியாய்ச் சாப்பிடுவதினால் குணக்கேடு உண்டாகாதென்று தாங்கள் கருதுவீர்களாயின், உடனே வி. பி. மூலமாய் இன்னும் இரண்டு மருந்து புட்டிகளை அனுப்பக் கோருகிறேன். ஏனைய மருந்துகட்கும் அட்டவணை சாபிதா இருந்தால் அனுப்பவும்.

இங்ஙனம்

20—6—30, கண்ணாபுரம். திரு. பி. எஸ். கணேஸ்வரன்.

நான்கு மாதம் சாப்பிடக் கூடிய மருந்து விலை அணா 12.

தபால் கூலி பிரத்தியேகம்.

வியாபாரிகள் விவரம் எழுதித் தெரிந்துக்கொள்ளலாம்.

மென்தா மவுத்வாஷ்

இம் மருந்தானது வாயிலுள்ள நோய், ஈர்வளர்தல், பல்வலி, இரத்தம் கொட்டல், சீழ் வருதல், வாய் நாற்றம் இவைகளைப் போக்கிச் சதா வாயுக்குக் கம கம வென்ற ஒரு மணத்தைக் கொடுக்கும். 4-மாதம் உபயோகிக்கக் கூடிய மருந்து விலை ரூபா 2.

தலைவலிச் சூரணம்

இந்தச் சூரணத்தில் ஒரு சிட்டிகை எடுத்து வாயில் போட்டுக் கொண்டு ஜலம் சாப்பிட்டால் 5-நிமிஷத்தில் தலைவலி நீங்கும். தவிர உடம்புவலி கை கால்வலி இவைகள் போம். எத்தகைய சுரமானாலும் ஒரு சிட்டிகை மருந்து சாப்பிட்டவுடன் வியர்வை விட்டு சுரம் நீங்கும். மருந்து உபயோகிக்கும் முறை மருந்துடன் அனுப்பப்படும். இம் மருந்து வீட்டிலிருப்பின் எந்தப் பாமும் எவ்வித அஞ்சனமும் வேண்டியதில்லை. புட்டி 1-க்கு விலை அணா 8.

கூழ்ப்பாண்ட லேகியம்

இந்த லேக்கியத்தில் ஒரு கெச்சக்காய் அளவு காலை மாலைகளில் சாப்பிட பலம் தரும், மலம் தள்ளும், சரீர உஷ்ணம் நீங்கும். மலச்சிக்கல் நீங்குவதும் கணைச்சூடு விலகுவதும் இம்மருந்தின் முக்கியகுணம். எலும்புறுக்கி நோயால் இளைக்கும் தேகத்தைப் பலப்படுத்தும். குழந்தைகள் முதல்

யாவரும் சாப்பிடலாம். யாதொரு பத்தியமும் இல்லை. எண்ணெய் ஸ்நானம் செய்யும் தினம் மருந்தை நிறுத்த வேண்டும், சுரம், தலைவலி யிருக்கும் காலத்தில் மருந்து சாப்பிடலாகாது. மருந்து குளிர்ச்சியைத் தரக்கூடியது.

சில அபிப்பிராயங்கள்

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு, கூழ்ப்பாண்ட லேகியம், மீன் எண்ணெயைக் காட்டிலும் குணம் செய்கின்றது. கணச்சூட்டுக்கு மேன்மையாய்த் தெரிகின்றது. க்ஷயரோகம் வாராதபடி தடுக்கவும் மேலானதாய்க் காணப்படுகின்றது. மலச்சிக்கல் நீங்குகின்றது. ஆனபடியால் எங்கள் எல்லா ஷாப்புக்கும் மாதா மாதம் 10 பவுன் அனுப்பவும். இந்த லெட்டர் கொண்டுவரும் ஆள்வசம் 3 வீசை கூழ்ப்பாண்ட லேகியம் கொடுத்தனுப்பவும்.

M. C. நஞ்சுண்டராவ். B. A., M B. &. C. M. மைலாப்பூர்.

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு, தங்களைப் பார்த்து வெகுநாளாய் விட்டது. நான் இளையாளை மணந்த பிறகு 'டனுக்கு' என்னும் ஊருக்கும் ஜில்லா முனிசிப்பாக இருக்கின்றேன். தங்கள் கூழ்ப்பாண்ட லேக்கியத்தினால்தான் என் குழந்தை பெருத்து நன்றாக பலத்து இருக்கது. இப்போது எனக்குக் கூழ்ப்பாண்ட லேகியம் 5 பவுன் வி. பி. யில் அனுப்பவேண்டியது.

இப்படிக்கு,

C. ராஜகோபாலாசாரியார் B. A., B. L.,
District Munsiff, Tanuku.

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு, 2 பவுன் கூழ்ப்பாண்ட லேகியம் வி. பி. யில் அனுப்பவும். இப்போது என் மனைவியின் தேக காந்தம் குறைந்திருக்கின்றது. அத்துடன் சிவப்பிரகாச பற்பொடி 1 டசன் அனுப்பவும்.

வியாசராவ் M. A., B. L., District Munsiff, Bellary.

ஒரு பவுன் விலை ரூபா 2.

கிடைக்குமிடம்:—

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார்,
31, வைத்தியநாத முதலிதெரு, சென்னை.

அன்பே ஆண்டவன்

தமிழரசு

ஒரு செந்தமிழ் மாத வெளியீடு

OFFICE OF THE REGISTRAR OF
20 DEC 1933
MADRAS

'எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன்...'

ஆசிரியர்: டாக்டர் மே. மாசிலாமணி முதலியார்

மலர்	ஸ்ரீமுக௵ மார்கழி௴ 1௳	இதழ்
4	1933௵ டிசம்பர்௴ 15௳	12

கடவுள் வாழ்த்து

உலகம் யாவையும் தாமுள வாக்கலும்
நிலைபெ றுத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகி லாவிளை யாட்டுடை யாரவர்
தலைவ ரன்னவர்க் கேசரண் நாங்களே.

—கம்பர்.

குறிப்பு:—'தமிழர'சில் வெளிவரும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களாகும். அவை யாரையும் குறிப்பிடுவன வல்ல.

கட்டுரையாளர்களின் கருத்துகளுக்கும், அபிப்பிராயங்களுக்கும் ஆசிரியர் ஒரு சிறிதும் பொறுப்பாளி யாகார்.

நம்பிப் பிரசுரிக்கும் கட்டுரைகள் முன்னரே உரிமை செய்யப்பட்டவையின் அதற்குப் பத்திராதிபர் உத்தரவாதியாக மாட்டார்.

ஆசிரியர் குறிப்புகள்

மிராசுதாரர்கள் துன்பம்

'தொழுதூண் சுவையின் உழுதூண் இனிது' என்று சொல்லிய ஔவை இப்போது இருந்தால் இந்த வாக்கியத்தை மாற்றிச் சொல்லி இருப்பாள் என்பது திண்ணம்! பொதுவாகச் சென்னை இராசதானி யில் உள்ள மிராசுதாரர்களும் சிறப்பாகத் தஞ்சாவூர் திரிச்சிராப்பள்ளி யிலுள்ள மிராசுதாரர்களும் இப்போது படுந் துன்பம் கொஞ்சமல்ல. ஒரு ரூபாய் செலவு செய்தால் இப்போது விவசாயத்தில் அரை ரூபாயே கிடைக்கின்றது. கௌரவமான குடித்தனங்க ளெல்லாம் கண்ணீர் விட்டுக் கலங்குகின்றன. இதைப்பற்றி ரெவினியூ அதி காரிகள் கவனித்து நன்மை செய்ய வேண்டும் இன்றேல் பல குடி கள் கடனில் முழுகி ஆடிக்காற்றில் அகப்பட்ட பஞ்சுபோல் பறந்து விடும். பிறகு யோசிப்பதில் பலன் இல்லை. இவ் வகையில் உழைப் புக்குத் தகுந்த பலனடையாது வருமாயால் வாடும் மிராசுதாரர்கள் பலமாகக் கிளர்ச்சி செய்யவேண்டும். ஏதோ ஒரு மூலையில் கூட் டங் கூடித் தீர்மானம் செய்வது போதாது. நியாய வழியில் பல மாகக் கிளர்ச்சி செய்து அக் கிளர்ச்சியை அரசாங்கத்தினர் ஏற்றுக் கொள்ளச் செய்யவேண்டும்.

திரு. திவான்பகதூர் பாலசுந்தரம் நாயுடுகாரு

இவர்கள் சென்னை ஷெரிபாகச் சென்னை அரசாங்கத்தாரால் நியமிக்கப்பட் டிருக்கின்றார்கள். இவர்கள் கண்ணியமும் பெருந் தன்மையும் வாய்ந்தவர்க ளாவார்கள். இவர்கள் இப் பதவியைப் பெற்றதைக் குறித்து நாம் பெரிதும் சந்தோஷப் படுகின்றோம்.

அஜாக்கிரதையா? அநியாயமா?

எவ்வகை முயற்சி செய்தும் பலனடையாமல் சென்ற நவம்பர் மாதம் 21-ந்தேதி தூக்கிலிடப்பட வேண்டுமென்னும் தீர்ப்பைப்பெற்ற கைதி ஒருவர் லாகூர் சிறையில் இருந்தார். கைதியின் தகப்பனார் தாம் தமது பிள்ளையின் விடுதலைக்காகப் பிரிவி கௌன்சிலுக்கு அப்பீல் செய்து கொள்ளப் போவதாகத் தந்தி மூலம் பாஞ்சால அரசாங்கத்

208531

திற்குத் தெரிவித்தார். உடனே பாஞ்சால அரசாங்கத்தார் கைதியைத் தூக்கிலிட வேண்டாமென்று சிறைச்சாலை அதிகாரிக்கு உத்தரவு அனுப்பினர். ஆனால் அந்த உத்தரவைச் சிறை அதிகாரி 21வ முடியும் வரையில் பிரித்துப் பார்க்கவே இல்லை! அந்தோ! கைதி தூக்கிலிடப்பட்டார்! பிறகு தமக்கு ஒழிந்தபோது சிறை அதிகாரி கடிதத்தைப் பிரித்துப்பார்த்தார்! என்ன செய்வது? இக்குற்றத்திற்காகப் பாஞ்சால அரசாங்கம் வருந்துகிறது! வருந்தினால் போன உயிர் வருமா? இத்தகைய அதிகாரிகளால் இன்னும்பல தவறுகள் நடைபெறா வென்று கூற முடியுமா?

புதுவை வாலிபர் மகாநாடு

இம் மகாநாடு புதுவையில் இந்த மாதம் மூன்றாம் தேதி நடைபெற்றது. பிரபல அறிஞராகிய திரு. சௌரிநாதன் அவர்கள் மகாநாட்டுக்குத் தலைமை வகித்து அதைச் சிறப்பாக நடத்தினார்கள். கூட்டத்திற்கு 'தமிழரசு' ஆசிரியர் டாக்டர் மே. மாசிலாமணி முதலியார், வித்வான் T. P. மீனாட்சிசுந்தரம் பிள்ளை எம். ஏ. பி. எல்., டாக்டர் வரதராஜுலு நாயுடு முதலியவர்கள் சென்றிருந்தார்கள். இவர்கள் ஆற்றிய சொற்பொழிவுகள் சிறந்து விளங்கின. வழக்கம் போல் மாமிச ஆகாரம் சாப்பிடுவதனால்தான் மக்களுக்கு வீரம் இருக்கிறது என்று டாக்டர் நாயுடு அவர்கள் பேசினார்கள். இந்தியாவின் ஜனத்தொகையில் பெரும்பாலார் மாமிசமே சாப்பிடுகின்றனர். அடிமைகளாய் வீர மிழந்து அவர்கள் இருக்கக் காரணம் யாது? பிரசித்திபெற்ற வீரனாகிய நெப்போலியன் மாமிசம் அடிக்கடி சாப்பிடுவதில்லை. அவன் வீரனாய் விளங்கியதற்குக் காரணம் என்னவோ? புதுவை வாலிபர் மகா நாட்டில் புதுவை வாலிபர்கள் கலந்து நன்றாக அதைப் பெருமையடையச் செய்தனர். வித்வன் மனோரஞ்சனி சபையார் மேற்படி மகா நாட்டில் கலந்து அரிய தொண்டாற்றினர். வாலிபர் உலகம் வாழ்வதாக !

ஏஜண்டுகளுக்கு

தமிழரசு பத்திரிகையை வாங்கும் ஏஜண்டுகள் கேட்ட அளவே ஆர்டர்படி நாங்கள் பத்திரிகையை அனுப்பி வருவதால் விற்காத காபிகளை வாபீஸ் எடுத்துக்கொள்ள முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

விகடகேசரியின் கடிதங்கள்

காந்தி அடிகளார்

மகாத்மா காந்தி அடிகளார் சென்னைக்கு நாளது இருபதாந் தேதி காலையில் வரும் விஷயம் அனைவரும் அறிந்ததே! அடிகளார் இரு முறை உண்ணுவிரத மென்னும் கொடிய நோன்பை இயற்றி அதில் வெற்றி பெற்றுச் சென்னைக்கு வருகின்றார்! அவரது வரவு நல்வரவாகுக! அக்காலத்தில் வைஷ்ணவமத காவலராகிய ஸ்ரீமத் இராமானுஜர் எந்த வகுப்பாருக்கு ஆலயப்பிரவேச உரிமை யளிக்கப் பாடுபட்டு, உரிமை யளித்தாரோ அதே வகுப்பாருக்கு அதே உரிமையைத்தான் இப்போது நமது அடிகளார் வழங்க விரும்புகின்றார். தமது தந்தையாரின் திவசத்தின்போது ஜாதி வித்தியாசம் பாராட்டாமல் பரமபாகவத பக்தராகிய சங்கீத ஞானச்சாரியர் தியாகபிரம்மம் எந்த வகுப்பு ஏழை ஸ்திரிக்கு உணவளித்தாரோ அந்த வகுப்பு ஏழைகளுக்கே பாடுபட உறுதிகொண்ட காந்தி அடிகளாரின் வருகையை நம்மனோர் அனைவரும் நல்வரவாகக் கருதி மகிழ்வார்களாக!

வைஸ்ராய்!

ஐயனே, நின் வருகையும் நல்வருகையாகுக! எதிர் பார்த்தபடி உமது வருகை மிக ஆடம்பரத்தோடுதான் விளங்கியது. தங்களை நான் ஒரு விஷயம் கேட்டுக் கொள்ளுகிறேன்: தாங்கள் சென்னையை விட்டுச் செல்லுமுன்னர், தாங்கள் கவர்னராய் இருந்த காலத்தில், தங்கள் ஆதரவில் பிரபலயடைந்து வளர்பிறைபோல் வளர்ந்துகொண் டிருக்கும் கிண்டி குதிரைப் பந்தயத்தை ஒரு முறை பார்த்துவிட்டுச் செல்லுங்கள்! ஆனால் அங்கு வருகிறவர்களைக் கொண்டு எல்லோரும் பணமுடையவர்களாய் இருக்கிறார்கள் என்று தாங்கள் நினைத்துவிட மாட்டீர்கள் அல்லவா? ஆண்டவனே! தாங்கள் தயை செய்து தென்னாட்டு விவசாயிகளின் குறைகளையும் கவனியுங்கள்! என்னுடைய முதல் வேண்டுகோளைத் தாகங்ள் அவசியம் நிறைவேற்றுவீர்கள் என்று நான் நம்புகிறேன்—ஆனால் என்

னுடைய இரண்டாவது வேண்டுகோள் நிறைவேறினல் பார்த்துக் கொள்ளட்டுமா?

வேலையில்லாத் திண்டாட்டம்

முப்பது வருடம் 'சர்விஸ்' ஆனவர்களுக்கும் 'அவர்கள் மணலைக் கயிருய்த் திரிப்பவர்கள்' என்று அரசாங்கம் சலுகை காட்டி அவர்களைப் பின்னும் வேலையில் வைத்துக்கொண் டிருக்குமானல்—பெரும் பணக்காரர்களுக்கும் வேலை கொடுத்துக்கொண் டிருக்குமானல்—மற்றவர்களுக்கு—முக்கியமாக ஏழைகளுக்கு—அவர்கள் எவ்வளவு அறிவும் கல்வியும் உடையவர்களானலும் சரியே—வேலை எங்கிருந்து கிடைக்கும்? நான் இந்தியாவின் சர்வாதிகாரியாய் இருந்தால் இருபத்தைந்து வருட சர்வீசுக்கு மேல் யாரையும் அரசாங்க இலாகாவில் வேலையில் இருக்கவிட மாட்டேன்: குடும்பப் பொறுப் பில்லாதவர்களுக்கு வேலை கொடுக்க மாட்டேன். தனி ஓதாவிலும் அவர்கள் தங்களுக்கு வேண்டிய அளவுக்குமேல் சம்பாதிக்க விடமாட்டேன். நபர் ஒன்றுக்கு சுமார் பத்தாயிரம் ரூபாய்க்குமேல் ஆஸ்திஉடையவர்களுக்கு உத்தியோகங்களை அளிக்க மாட்டேன். அவர்களை அவர்கள் பணத்தைக் கொண்டு வியாபாரம் செய்யச் சொல்லுவேன்: காலேஜிகளை இன்றுமுதல் இன்னும் பத்துவருடங்கள் வரையில் மூடிவைத்து விடுவேன். விவசாயிகளின் இலாபத்தின்மீது, இன்கம்டாக்ஸ் வரி வாங்குவது போலத்தான், தீர்வை வாங்குவேன்! வரவு செலவில் பணம் துண்டு விழுமானல் உயர்ந்த உத்தியோகஸ்தர்களுடைய சம்பளத்தைக் குறைப்பேன்! இப்படிச் செய்வதால் ஊர் கஷ்டமும் வேலை இல்லாத் திண்டாட்டமும் ஒழியாதென்று நினைக்கின்றீர்களா? நன்ருய் யோசித்துப் பாருங்கள்!

கிட்டப்பா!

அந்தோ அந்தகனே! நீ அந்தகன்தான்! இல்லாவிட்டால் அரும்புகழ் வாய்ந்த நடிகர் கிட்டப்பாவை இவ் வுலகிலிருந்து அகற்றி இருப்பையோ! கிட்டப்பாவுக்கு வயது இருபத்தெட்டுதான் என்கின்றனர்! அப்படியானல் கிட்டப்பா நாடக மேடையில் முதன் முதல் தோன்றி நடிக்க ஆரம்பித்தது அவரது ஏழாவது வயதிலன்று; பத்தாவது வயதில்தான் என்று விகடகேசரியால் உறுதியாய்ச் சொல்ல முடியும்! முதன் முதல் சுமார் பதினெட்டு வருடங்களுக்கு

முன்னால்கிட்டப்பா 'இராயல்தியேட்ட'ரில் நடித்தபோது அவர்பாடிய 'வாழையடி வாழை' 'படமுடியாது இனித் துயரம்' என்னும் பாட்டுகளை இப்போதுதான் கேட்டது போல் இன்னும் விகடகேசரிக்கு நினைவிருக்கின்றது. அக் காலத்தில் அவர் அரிச்சந்திர நாடகத்தில் தேவதாசனாக நன்றாய் நடிப்பதுண்டு. அவர் செங்கோட்டையில் சங்கீதம் பயின்ற குடும்பத்தில் பிறந்தவர்! அவர் பிரக்கியாதிக்கு மூலகாரணரா யிருந்தவர் நாடக சிரோமணி காலஞ்சென்ற கன்னையா அவர்களே யாவர்! கிட்டப்பா அவர்கள் இந்த மாதம் இரண்டாந் தேதி செங்கோட்டையில் உள்ள தமது வீட்டில் நெடுநாள் வருந்திய நோய் காரணமாக மரண மடைந்தார் என்பதைக் கேட்டு வருந்துகிறோம். அவர் ஆன்மா சாந்தி அடைவதாக. அவர் குடும்பத்தாருக்கு என் அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். முயற்சி யிருந்தால் முன்னுக்கு வரலாம் என்பது கிட்டப்பாவின் வாழ்க்கையில் இருந்து தெரிகிறது போலவே அஜாக்கிரதையாய் நடந்து கொண்டால் அகால மரணம் நேருமென்பதையும் அவர் வாழ்க்கையி லிருந்து அறிகின்றோம்.

பிரகலாதா (தமிழ்ப் பேசும் படக்காட்சி)

பொதுவாக 'சீன்கள்' நன்றாய் இருந்தன. ஸ்ரீமதி சாரதாம்பாள் நடிப்பு இரண்டொரு இடங்களைத் தவிர மற்ற இடங்களில் 'பரவாயில்லை' என்னும் அளவுக்கு இருந்தது. திரு. ஸ்ரீனிவாச பாகவதர் மற்றொரு முறை படக்காட்சியில் நடிப்பாரானால் இன்னும் நன்றாய் நடிப்பாரென நம்புகிறேன். பிராமண வாலிபன் கிருஷ்ணமூர்த்திக்கு லகர ளகர பேதம் தெரியாது போலும்! கண்டக்டராவது அதைக் கவனித்து இருக்க வேண்டும். கிருஷ்ணமூர்த்தி கலாசாலையில் படிக்கும்போது தமிழை வெறுத்துச் சமஸ்கிருதத்தைமட்டும் படித்திருக்க வேண்டுமென்று விகடகேசரி கருதுகிறான். பிரபந்த பாட்டுகள் இரண்டொன்று அவனிடம் அகப்பட்டு விழித்தன! பொதுவாக அவன் நடிப்பு நன்றாய் இருந்தது.

கிண்டி குதிரைப் பந்தயம்

குடியைக் கெடுக்கும் கிண்டி குதிரைப் பந்தயத்தைப் பற்றி உங்களுக்குத் தெரியுமல்லவா? அதனால் வருடந்தோறும் அநேகர் ஓட்டாண்டிகளாகி வருகின்றனர்! அதனால்தான் சில பத்திரிகாசிரி

யர்களுக்கும் அந்தப் பைத்தியம் பிடித்துப் போட்டிப் பந்தயம் நடத்த முன் வருகின்றனர். 'பசியா திருக்க வரம் தருகிறேன். கொஞ்சம் பழைய திருந்தால் போடுங்கள்' என்னும் கதைப்படி சிலர் ஜெயிக்கும் குதிரைகளைத் தெரிவிக்கிறோம் என்று 'டிப்' போட்டு விற்று வருகினறனர். ஜெயிக்கும் குதிரை தெரிந்தால் இவர்களே பணம் கட்டி எல்லாப் பணத்தையும் வாரிக்கொள்ளலாமே! இவர்கள் ஏன் இந்த வேலை செய்யவேண்டும்! பரோபகாரமா? சிலர் இங்கிலீஷிலும் தமிழிலும் ஜெயிக்கும் குதிரைகளைக் கண்டுபிடிப்பதற்குப் புத்தகம் போட்டு விற்கின்றனர். எல்லாம் வீண் சங்கதி! குதிரைப் பந்தயத்தில் யாராலும் ஜெயிக்கும் குதிரையைச் சொல்ல முடியாது. பணம் போகவேண்டுமானல் அதற்கு அது நல்ல வழிதான்!

சர். உஸ்மான்

சர். உஸ்மான் சாகேப் அவர்களைப் பல வருடங்களாகச் சென்னை மாகாண வாசிகள் அறிவர். சமீபத்தில் சென்னை கவர்னர் பதவி ஆக்டிங்காக அவருக்கு வரும்போ லிருக்கின்றது. யாரோ ஒரு வெள்ளைக்காரர் வருவதைவிட ஒரு இந்தியருக்கு அப்பதவி வருமானல் விகடகேசரி தனக்கே அப்பதவி வந்ததுபோல மகிழ்ச்சி அடைவான். இந்தியர் என்னும் ஹோதாவில்—அனுபமுடையவர் என்னும் வகையில்—அவருக்கு அப்பதவி வருவதை நம்பனோர் விரும்புவர் என்பதில் தடை இல்லை. அப்படியே நடைபெற ஆண்டவன் அருள் புரிவானக! சர்க்கார் இவ்வகையில் சிறப்பாக நடந்து கொள்வது நல்லதே!

டிரைவர்:—(ரிபேர் செய்தவனைப் பார்த்து) மோட்டார் பிரேக் திடீரென்று போட்டவுடனே பிடிக்குமா?

கம்பனிகாரன்:—ஓ! ஏதாவது ஆபத்து வந்தால் பிரேக்கைப் போடு. உடனே பிடிக்கும். அப்படிப் பிடிக்காவிட்டால் மறுபடியும் இங்கே கொண்டு வா. ரிபேர் செய்து தருகிறேன்.

—G. சுப்பைய ராஜு

காதலா வாருமே!

[திரிச்சி. கே. வீ. எஸ். வாஸ்]

அகன்ற நெற்றியும், வளைந்த புருவமும், மிரண்ட விழியும், மெல்லிய கழுத்தும், பருத்துப் பூரித்த கொங்கையும், அதன் பாரம் தாங்காது தள்ளாடும் சிறுத்த இடையும், வாழையை யொத்த தொடையும், ஒய்யார நடையும், பத்தரை மாத்துத் தங்கங்கத்தை யொத்த காந்தியுமுள்ள மின்ன லொளியாள் ஸரஸாவை நேரில் கண்டுவிடில் முனிவர்களும் ஒழுக் கத்தைக் கைவிட்டுக் காமுறுவரெனில் கேவலம் தக்க யௌவன தசையி லுள்ள கேசனைப் பற்றிக்கேட்க வேண்டியதே யில்லை யன்றோ! ஸரஸா ஒருநாள் மெல்லிய ஈரப்புடவையுடன் ஒரு கையில் குடமும் மற்றொரு கையில் ரவிக்கை யுமாகக் குளக்கரையினின்றும் திரும்புகையில் கண்டது முதல் கேசனது உள்ளம் ஒவ்வொரு நிமிடமும் விரகதாபத்தால் தவி

த்துத் துடித்துக் கொண்டிருந்தது. 'கண்ணே! என் காதற் சுடரே! ஆவியே! ஓர் முத்தம் தாமாட்டாயா? கண்ணாட்டி, கருணை புரிவாய்!

எனதுள்ளத்தைக் கொள்ளை கொண்ட பூங்கோதாய், உன்னை எண்ணியெண்ணி உருகுகின்றேன்!' என்று வாய்க்கு வந்தபடி ஒவ்வொரு இரவும் பிதற்றலானன்.

ஒருநாள் பொழுது புலரும் சமயம் கேசன் திடீரெனக் கண் விழித்துக் கொண்டு கட்டிலிலிருந்து துள்ளி எழுந்து, 'ஸரஸா! வேண்டாம்! போகாதே!! சற்று நில்! சற்று நில்!!' என்று கத்திக் கொண்டே அருகில் நின்ற வேலைக்காரி பேச்சியாயியைக் கட்டி ஆலிங்கனம் செய்து மாறி மாறி அவளது கன்னங்களில் முத்த மழையாகப் பெய்தான். பேச்சியாயியைப் பற்றி நம் வாசகர்கள் சிறிது அறிய விரும்புவார்கள். கருத்த சதையும், சப்பை மூக்கும், ஒட்டிய மார்பும், அகன்ற இடையுமுள்ள அழகியே யானாலும் வயதில் கேசனுக்கு ஒன்றிரண்டிற்கு மேல்தானிருக்கும். ஆளை மயக்கி வசப்படுத்துவதில் பலே பேர் வழி.



வெகு நாட்களாகத் தன் யஜமானன் யாரையோ கண்டுவிட்டு உருகுகின்றானெனத் தெரிந்திருந்த போதிலும் அவருக்கு உதவி செய்யத் தானாகவே ஆரம்பிக்கக் கூடாதென்றே இவ்வளவு காலமாகக் காத்திருந்தாள். இன்று காலை வழக்கம் போல் கேசன் எழுந்திருக்கு முன்னர் அறையைக் கூட்டுவதற்கு உள் நுழையவே எதிர்பாராது நேர்ந்த சம்பவத்தைப் பார்த்து முதலில் சற்று ஆச்சரியப் பட்டாளே யாயினும் அவன் கட்டினின்றும் விலகச் சற்றும் எத்தனிக்கவில்லை.

'ஸரஸா! கருணைபுரிய மாட்டாயா? என்னை ஏன் மணந்து கொள்ள மறுக்கிறாய்? கட்டிக் கரும்பே! இப்படி நிற்கிறாயே! கட்டிலில் உட்காரம்மா! கால் நோவுமே!' என்று காதல் ததும்பும் கண்ணியமான குரலில் கூறியவாறு பேச்சியாயின் இடது கரத்தைப் பற்றினான். இதற்குள் பேச்சியாயி எலெக்ட்ரிக் விசையை வலது கரத்தால் திருப்பவே சற்று இருட்டாக விருந்த அறையில் திடீரென பிரகாசம் உண்டாயிற்று. கேசன் சட்டென்று உண்மையை யறிந்து வெட்கித் தலை குனிந்து நின்றான். பேச்சியாயி கொல்லென்று நகைத்தவாறு, 'ஓஹோ! ஸரஸா, தூக்கத்தில் கூட வர ஆரம்பித்து விட்டாளோ!' என்றாள். கேசனுக்கு என்ன செய்வதென்று விளங்கவில்லை.

'பேச்சி! தயவுசெய்து என் மானத்தைக் கெடுத்து விடாதே!' என்று கெஞ்சினன் கேசன்.

'அப்படியெல்லாம் சொல்லாதீங்கோ! முத்தமிட்டா அதுக்கு ஒரு கோவமா? வேணுன்ன இன்னும் முத்த இட்டுக்குண்டு போங்களேன்!' என்று குரும்பாகப் பதிலளித்தாள் பேச்சியாயி.

கேசனின் முகத்தில் ஈயாடவில்லை. 'ஏதடா இந்தச் சங்கடத்தில் அகப்பட்டுக் கொண்டோமே' யென்று பெருமூச் செறிந்தான். பேச்சியாயி சிரிப்பது மேலும் மேலும் கேசனைக் கலவரப்படுத்தியது. எங்கே தன் தாயாரிடம் கூறிவிடுவாளோ அல்லது குடிகாரன் குப்பனிடம் (பேச்சியின் கணவன்) சொல்லி மானபங்கம் செய்து விடுவாளோ வென்று ஒவ்வொரு நிமிடமும் நடுங்கினன்.

'யசமானே! என்னைச் சந்தேகிக்காதீங்க. நெசத்தைச் சொல்லுங்க. இரண்டு நாளில் உங்களுக்கு அதை முடிச்சுத்தாரேன்! பேச்சியை மட்டும் நம்பினுக்கே உங்க காரியம் முடியாமலா போவும்!' என்று மெள்ள ஆரம்பித்தாள் வேலைக்காரி. கேசனே மௌனம் சாதித்தான். மேலும் அவள் தொடங்கி, 'யசமாங்க விஷயம் எனக்குத் தெரியாமலா போகும். தினம் மாடியிலிருந்து அந்தக்குட்டி குளத்திலிருந்து வீட்டுக்குப் போவதை நீங்க பாத்துண்டிருப்பது எனக்கா தெரியாமல் போய்டும்!' என்றுள்.

கேசனுக்குச் சற்று தைரியம் பிறந்தது. உண்மையில் பேச்சியை நம்பலாமென்று கண்டு கொண்டதே, 'சரிதான் பேச்சி, அவள் யார் உனக்குத் தெரியுமா?' என்றான் கேசன்.

'எனக்கோ தெரியாது! ஹூம்! நான் அன்னிக்கே தெரிஞ்சுட்டு வந்துட்டேனே. மலைக்கோட்டைத் தெருவிலிருக்காங்க அந்த அம்மா. அவங்க வீட்டிலே அந்த அம்மாளும் வயசான ஒரு கிளவியும்தான் இருக்காங்க. நானும் இரண்டு நாளாக அவங்க வீட்டுக்கு சாயங்காலம் வேலை செய்ய ஒப்புக்கொண் டிருக்கேன்!' என்றுள் பேச்சி.

'அந்தப் பெண்ணுக்குக் கண்ணாலம் ஆயுட்டுதா?' என்றான் கேசன்.

'ஆயுட்டுதாம். புருஷன் வேண்டாம்னு தள்ளி வைச்சுட்டானும். அவங்க தூத்துக்குடிக்கு அப்பாலே நாலு கல்லுக்கு அந்தாண்டே ஒரு கிராமத்திலே யிருந்து இங்கே வந்திருக்காங்களாம். தாயும் பொண்ணும் வந்து பத்து நாளுதான் ஆச்சு! பொண்ணு இருக்கே, அது தங்கக் கம்பிதாங்க. என்ன அயகு! என்ன ஜோர்! நீங்க என்ன அதிர்ஷ்டந்தான் பண்ணினீங்களோ?' என்று பிரமாதமாக ஆரம்பித்தாள் பேச்சி.

'என்ன பேச்சீ, என்னென்னவோ சொல்றயே! அந்தப் பொண்ணு அழகாயிருந்தால் எனக்கென்ன அதிர்ஷ்டம்!' என்றான் கேசன்.

'இல்லாட்டி எனக்கா அதிர்ஷ்டம்! பேச்சியாயிட்டே ஒரு வார்த்தை சொல்லிவிட்டா இனிமேல் அந்த பொண்ணு உங்க மனைவிதான்' என்றாள் பேச்சீ.

* * *

கேசனுக்கு அன்று பொழுது போவதே மிக்க கஷ்டமாயிருந்தது. மறுநாள் பொழுது எப்போ விடியுமென்று துடித்துக்கொண்டிருந்தான். இரவு முழுவதும் உறக்க மின்றிப் படுக்கையில் அங்குமிங்கும் புரண்டு கொண்டே காலத்தைக் கழித்தான். மணியும் காலை ஐந்தடித்தது. ஒவ்வொரு விநாடியும் பேச்சியாயின் வரவை ஆவலுடன் எதிர்பார்த்த வண்ணமா யிருந்தான். கதவும் திறக்கப்பட்டது. பேச்சியாயி புன்னகையுடன் உள் நுழைந்தாள்.

'பேச்சி! காயா பழமா!! சட்டென்று சொல்!!!' என்றான் கேசன்.

'பேச்சியாயியைச் சாதாரணமாக எண்ணிக் கொண்டீங்களோ! கருப்பாயி மவள் இல்லையா!' என்று சொல்லிக்கொண்டே தன் இடுப்பினின்று ஓர் கடிதத்தை எடுத்துக் கொடுத்தாள்.

கேசன் மனம் பூரித்தது. ஆநந்தத்தால் மனம் வெடித்து விடுமோவென அஞ்சினாள் பேச்சீ. பயித்தியம் பிடித்தவனைப்போல் அதை மாறி மாறி முத்தமிட்டான் கேசன்.

'ஏது, இந்தக் கடுதாசியையே இந்தப்பாடு படுத்திரீங்களே, பாவம் அந்தப் பொண்ணு..........!' என்று ஏதோ ஆரம்பிக்கவே, 'பேச்சீ! உன்னை என்றும் மறவேன்!' என்று நன்றி யறிதலுடன் கூறியவாறு அக் கடிதத்தைப் பின் கண்டவாறு படித்தான்.

'என் ஆசைக் கண்ணாளா,

தங்களை ஒவ்வொரு காலையும் காணும்போ தெல்லாம் என் மனம் படும்பாட்டை எழுத வியலவில்லை. தங்களை என் மனப்பூர்வமாகக் காதலிக்கிறேன். பெண்களுக் குரிய வெட்கமே என்னை இதுகாறும் தங்களிட மிருந்து பிரித்து வைத்திருந்தது. இன்று மாலை 4-30 மணிக்கு என் தாயார் ஆலயத்திற்குப் போய்விடுவாள். தவறாமல் வந்து என்காதற் பிணியைத் தீர்க்கவும்.

தங்களையே யெண்ணி யெண்ணி வாடும்,

ஸரஸா.

* * *

மாலை மணி நாலரையாயிற்று. கேசன் மலைக்கோட்டைத்தெரு 10-ம் நெ. வீட்டின் வாசற்படி யேறிச் சற்றுத் தயங்கி நின்றான்.

'காதலா, வாருமே!' என்ற குயிலினு மினிய குரல் கேட்டு நிமிர்ந்து நோக்கினான். மின்னல் போல் பிரகாசமான யௌவன நங்கை யொருவள் புன்னகை தவிழ்ந்த வதனத்துடன் அவன் முன் தோன்றி, அவர் கரத்தைப் பிடித்து உள்ளே இட்டுச் சென்றாள். கேசன் ஸரஸாவின் ஸ்பர்சத்தால் ஆநந்தக் கடலில் மூழ்கி மீள வழி யறியாது தவித்தான்.

'காதலா, ஏன் மௌனம் சாதிக்கின்றீர்கள்? இதற்கா இவ்வளவு தூரம் வந்தீர்கள்!' என்று இனிமையாகக் கூவினாள் ஸரஸா.

அதே நிமிடம் சமயலறைக் கதவு திறக்கப்பட்டது. 'ஓஹோ! மாப்பிள்ளையா? வாங்கோ, வாங்கோ! என்னை அடையாளம் தெரியறதா?....ஹூம் தெரியாது! ஐந்தாறு வருஷ மாச்சோனே, தெரியாது!!' என்று சொல்லிக் கொண்டே ஒரு ஆடவன் சமயலறையினின்றும் வெளிவந்தான். ஸரஸா சட்டென்று ஒரு புறமாக விலகி நின்றாள். கேசன் ஒன்று மறியாது விழித்தான்.



'ஏன் மாப்பிள்ளே, அப்படிப் பார்க்கிறீர்களே! நான் உமது ஏழை மச்சினன் இல்லையா! அவள் தான் உங்க ஆம்படையாள் சந்திரா! எது சாத்தூர் கிராமத்திலிருந்து வந்ததுக்கு அப்புறம் ரொம்ப மாறிப் போய்டீங்களே. சந்திரா, ஆம்படையானை நினைச்சு நினைச்சு உருகினையே! இதோ வந்துட்டாரம்மா!' என்றார் அம்மனிதர்.

கேசன் கண்கள் கோபத்தால் கோவையைப்போல் சிவந்தன. உதடுகள் துடிதுடித்தன. 'அடீ சண்டாளீ! சந்திரா இங்குமா வந்துவிட்டாய்! கள்ளக் காதலனையும் அழைத்துக்கொண்டு இவ்வூருக்கு வர என்ன தைரியமடி உனக்கு! ஏ துரோகி! உன்னை விடேன்!' என்று படபட வென்று பல்லைக் கடித்துக் கொண்டு கர்ஜித்தான் கேசன்.

'அத்தான்! அத்தான்!!' என்று சந்திரா ஆரம்பிக்கப்போகவே, 'சீ! விபசாரக் கழுதை! எட்ட நில்!' என்று சீறினன் கேசன்.

'மாப்பிள்ளை கோபம் வேண்டாம்! உண்மையை அறிந்து கொண்டால் பின்னர் நீங்களே வருத்தப் படுவீர்கள். சந்திராவின் கள்ளக்காதலனென நீங்கள் சந்தேகிப்பது அவள் சகோதரனை என்னையே! நான் வெகுகாலமாக கொளம்பு தேசத்திலிருந்ததால் தாங்கள் என்னை நேரில் அறியமாட்டீர்கள். அன்று நான் ஊரினின்று திரும்பிவந்து என் தங்கையுடன் பேசிக்கொண் டிருப்பதைக் கண்டு என்னையவள் கள்ளக்காதலனுக வெண்ணி சந்திராவைச் சந்தேகித்தீர்கள்!' என்றுர் அம்மனிதர்.

'ஹா! நீங்கள் என் மைத்துனரா? இது உண்மைதானு?' என்று படபடப்புடன் வினவினன் கேசன்.

'ஆம்! ஆம்!!' என்றுர் அம்மனிதர். கேசன் முகம் உடனே மாறுபட்டது. சந்திராவை யணுகி அவளது கரத்தைப் பிடித்துக் கொண்டு, 'சந்திரா! கண்ணே, என்னை மன்னிப்பாயா?' என்று கண்ணீருதிர்த்த வண்ணம் வினவினன் கேசன்.

'நாதா! நாம் சிறிது காலம் பிரிந்திருக்க வேண்டுமென ஈசன் விருப்பமாயின் அதை யார் தடுக்கக்கூடும்! இனி நம்மை ஒருவரும் பிரிக்க மாட்டார்கள்?' என்று கூறி கேசனது கரங்களை ஆவலுடன் பற்றினள் சந்திரா.

கேசன் அன்புடன் அவளை ஆலிங்கனம் செய்து கொண்டு சிவந்த அதரங்களில் மாறி மாறி முத்த மழையாகப் பெய்த வண்ணம், 'கண்ணுட்டி! இனி நம்மை ஒருவராலும் பிரிக்க வியலாது!' என்றுன்.

கல்கியின் கனவு

[உண்மை உணர்ந்தோன்]

V

திருவண்ணாமலை தீபம் மலையில் ஏற்றுவதைப் பார்க்க வருகிறவர்களிடத்தில் 30—11—33 வெள்ளிக்கிழமை காலை 4 மணிக்கு ஆலயத்தில் பரணி தீபம் என்ற தீபம் கொளுத்தி அபிடேகம் செய்வதைப் பார்க்கப் பிரவேச கட்டணம் நபர் ஒன்றுக்கு அணா எட்டு விகிதம் வாங்கும்படியாக அண்ணாமலை சாமிகள் ரிசீவர்களுக்குச் சொர்ப்பனத்தில் வந்து சொன்னாராம். ஆகவே, அதுபோல ரிசீவர்களும் பிரவேச டிக்கட்டு 0—8—0 விகிதம் விற்றுச் சுவாமிக்குப் பொருள் சேகரித்தனர். இம் முறையைக் கையாண்டதால் சுமார் 700 ரூபாய் சாமிக்கு வசூலாய் இருக்குமாம். இதனுடன் காலை வருமானம் தீர்ந்தபின் மலைக்கு நெய்கொண்டு போவதற்குக் குடம் ஒன்றுக்குக் கூலிக்காரனுக்கு 4 அணாவும் சாமிக்கு 8 அணாவும் கட்டி இரசீது பெற்று நெய்யை மலையிலுள்ள கொப்பரையில் கொட்ட வேண்டும். அதன்படி சாமிக்கு வந்த வரவு சுமார் 1000 ரூபாய் இருக்கும்.

மாலை தீபதரிசனத்திற்குக் கோயிலில் 3 மணிக்குள் ஜனங்கள் அடைந்து விட்டனர். கோபுர வாசல்படியும் சாற்றப்பட்டது. முறையே நின்ற போலீசார் மக்களை ஒழுங்காக நடத்தினர்கள். சாமிதரிசனத்திற்காக அதிகாரிகள் முதலில் பிராமணப் பெண்பிள்ளைகளையும், புருடர்களையும், உத்தியோகஸ்தர்களையும் கோயில் தளத்தின்மேல் ஏறவிட்டனர். பிறகு நகரத்தார்களை ஏற அனுமதித்தனர். மற்ற ஜாதியார்களின் பெண்மக்களும், ஆண்மக்களும் தளத்தின் மேல் ஏற நெருங்குவதும் போலீசார் அவர்களைத் தடுப்பதும் ஆகிய காரணத்தால் நெருங்குண்ட பெண்மக்களை அண்ணாமலை சாமி கண்ணால் கூட பார்க்கவில்லை. சாமிக்கே மனமில்லாதபோது மற்றும்

யார் கவனிக்கப் போகின்றனர் என்பதை நீங்களே யோசித்துப் பாருங்கள்.

காலையில் 8 அணு கொடுத்துத் தூர நின்றவர்களும் மலைக்கு நெய் வாங்கிச் சேர்க்க கட்டணம் கட்டியவர்களும் ஆகிய இவர்களும் கோயிலில் நெருக்குண்டார்கள். பணச் செலவில்லாமல் தரிசனமும், போஜனமும், மற்றவைகளும் அனுபவிப்பவர்களாகிய மேல் ஜாதியினர்கள் ஏகபோக அனுபவஸ்தர்களாகவும், ஆலயங்களுக்குப் பணம் கொடுக்கும் ஜாதியினர் அடிமைகளாகவும் இருந்தால் அடிமைகள் கோயிலில் அடி உதை நெருக்கு முதலிய துன்பங்கள் அனுபவிப்பது சகஜந்தானே! இதில் என்ன ஆச்சரிய மிருக்கின்றது.

அடுத்த வருடம் கோயிலில் நின்று தீபதரிசனம் செய்பவர்களும் பிரவேசக் கட்டணம் 0—8—0 செலுத்த உத்தரவு செய்யப் போவதாய்ப் பேசிக்கொள்வதைக் கேட்டேன். பணம் பிடுங்கும் சாமிதானு நமக்கு மோட்ச மளிப்பார்?

இதன் மத்தியில் வைதிக பிராமணக் கூட்டத்தார் பலர் கிளம்பி கையில் ஒரு தாளைக் கொடுத்து அங்குள்ளவர்களை அதில் கையெழுத்து போடும்படி சொன்னார்கள். அதில் எழுதியுள்ளதை ஒருவராலும் வாசிக்கமுடியவில்லை. ஆயினும் 'ஒன்றுமில்லை சார் கோயிலில் பறையரை விடவேண்டாம் என்று ராஜப்பிரதிநிதிக்கு அனுப்பும் தாள்தான் இது' என்று சொல்லிக் கையெழுத்து வாங்கினார்கள். இச் சூழ்ச்சியால் ஆலயப் பிரவேசம் தடைபடினும் பின்னால் இவ் வருக்கத்தவர்களுக்கு என்ன ஆபத்துநேரு மென்பதை மக்கள் யோசித்தால் இவ்வகுப்பையே வெறுத்துத் தூரத்தும் நாள் சமீபித்து விட்டதாய் நான் உணருகிறேன். இது போலவே சென்னையில் சில பிராமணர்கள் சேர்ந்து மக்களிடம் பணத்தையும் செல்வாக்கையும் பெற்றுப் பிறஜாதியினரை அடிமைக் குழியில் தள்ளவே மகாநாடு ஒன்று நடத்திப் பணக்காரரிடத்திலும் அரசாங்கத்தாரிடத்திலும் பணம் தண்டி தங்கள் சங்கம் பலப்படச்செய்து இரண்டொரு பிராமணரல்லாதவர்களைச் சேர்த்துக்கொண்டு கோடிக்கணக்கான தமிழர்களை அடிமைப்படுத்தும் பெரிய துறையில் இறங்கியுள்ளனர்.

அஃதாவது 1937-ம் ஆண்டிற்குள் பள்ளிக்கூடங்களில் பத்தாவது வகுப்பு வரையில் சகல பாடங்களும் தமிழ் மொழியிலேயே

பயில்விக்க வேண்டும் என்று அரசாங்கத்தார் தீர்மானித்து விட்டதால் பள்ளிக்கூட பாட புத்தகங்களைப் புராணக் கதைகளிலிருந்தும் மற்றும் ஆங்கில புத்தகங்களிலிருந்தும் மொழிபெயர்க்கத் தங்கள் இனத்தில் சேர்ந்தவர்களைக்கொண்டு புத்தகங்கள் எழுதுவதனால் இனத்தவர்களுக்குப் பெரும் பிழைப்பும், பண லாபமும் தவிர பிறமக்களை அடிமைப் படுத்தும் வகையில் ஜாதிமத உயர்வு தாழ்வு ஏற்படுத்தும் முறையில் பாடபுத்தகம் அமைத்துச் சிறுவர்கள் மூளையில் புகுத்திவிடவே யோசித்து மேல்ஜாதியினர்களால் இப்பாது, தமிழன்பர் மகாநாடு கூட்டப்படுகின்றது. ஆரம்பத்திலேயே செய்த சூழ்ச்சியைக் கவனிப்பீர்களாக. கும்பகோணத்தில் ஒரு ஐயங்கார் பாரதத்தை மொழி பெயர்த்து அச்சிட்டாராம். அதனை ஆகாய மளாவப் புகழ்ந்து லைப்ரெரிகளில் ஒவ்வொரு புத்தகம் வாங்கச்செய்து 1000 புத்தகம்-புத்தகம் ஒன்றுக்கு 50 ரூபாய் விகிதம் 50000 ரூபாய்க்குப் புத்தகம் விற்று விட்டது மன்றி அன்னவருக்கு தமிழன்பர்மகாநாட்டிலிருந்து 40000 ரூபாய் பரிசு கொடுக்க சிபார்சும் செய்கின்றார்களாம். இது உண்மைதானா? இது உண்மையாய் இருந்தால் இதனால் பொது ஜனங்களுக்கு உண்மையான நன்மை என்ன உண்டாகப் போகிறது? பாரதம் படிப்பதனால் நமது நாட்டு அடிமைத்தனமும், ஏழைகளின் துன்பமும், விவசாயிகளின் கஷ்டமும் ஒழிந்து விடுமா? அடபாவமே!

இத்தனை ஆயிரம் ஆண்டுகளாக நாம் பாரதம் இராமாயணம் படித்து என்ன பயனைக் கண்டோம்? இன்னும் எத்தனை ஆயிரம் ஆண்டுகள் புராண அடிமைகளாய் நாம் இருக்கவேண்டும் என்று நினைக்கிறீர்கள்? என்று நான் உரத்துக் கூவினதைக் கேட்ட எனது தமையன் என்ன என்ன என்று என்னை எழுப்பினர். உடனே விழித்துப் பார்த்து நான் கண்டவை கனவெனச் சொல்லி யமர்ந்தேன்.

மறுநாள் பத்திரிகைகளில் கொட்டை எழுத்தில் தமிழன்பர் மகாநாடு என்னும் விளம்பரத்தைக் கண்டேன். இனி தமிழர்களாகிய நீங்கள் தமிழிடத்தில் அன்பு காட்டுவதாய் சொல்லும் பிறரை நம்பப் போகின்றீர்களா? அன்றி வேறு என்ன செய்யப் போகின்றீர்கள்?

ஐயலூர் அண்ணாசாமி ஐயர்

[விகடகேசரி]

[All Rights Reserved by Vigadakasari]

(சென்றமாதத் தொடர்ச்சி)

ஐயரவர்கள் தம் பிள்ளையை ஐந்து வயதான பிறகு பள்ளிக்கூடத்திற்கு ஆடம்பரமில்லாமல் அனுப்பி வந்தார். போர்டு பாடசாலையாதலினால் பள்ளிக்கூட சம்பந்தமாக ஐயருக்குச் செலவு ஒன்றும் ஏற்பட வழியில்லை. புத்தகத்தை மட்டும் ஐயர் அழுது கொண்டே பள்ளிக்கூடம் திறந்த ஆறாவது மாதம் வாங்கிக் கொடுத்து விடுவார். ஐயருடைய பிள்ளை அனந்த சயனன் அவ்வளவு புத்திசாலியாய் இல்லை. ஆகவே ஐயருக்கு வீட்டில் ஓர் உபாத்தியாயரை வைத்து அனந்த சயனனுக்குப் பாடஞ் சொல்லிக் கொடுக்கச் செய்ய வேண்டுமென்பது கருத்து. வீட்டில் உபாத்தியாயர் வந்து ப்பாடஞ் சொல்லிக் கொடுத்தால் அவருக்குப் பணங் கொடுக்க வேண்டாவா? பணமில்லாமல் காரியத்தை நடத்த வேண்டுமென்று ஐயர் கருதினார்.

அதனால் ஐயர் ஒருநாள் போர்டு பாடசாலை ஆசிரியர் பொன்னுசாமிப் பிள்ளையைப் பார்த்து, 'என்ன பிள்ளைவாள்! உங்களுக்கு வருகிற பதினைந்து ரூபாய் சம்பளத்தை வைத்துக்கொண்டு நீங்கள் எப்படிக் காலங் கழிக்கிறீர்கள்? ஒரு தாய், ஒரு தகப்பன், ஒரு தங்கை, ஒரு தம்பி ஆகிய இத்தனைபேர் உங்களுக்கு இருக்கிறார்கள். அடடா! உங்கள் சம்சாரத்தையும் உங்கள் குழந்தையையும் மறந்து விட்டேனே! இத்தனை பேருக்கும் நீங்கள் சம்பாதிக்கும் பதினைந்து ரூபாய் எதற்குக் காணும். சில தாலுகா போர்டு பிரசிடெண்டுகள் குப்பை மண்ணைக் கொட்டி அடுத்த மழையில் அடித்துக் கொண்டு போகும்படி ரோடு (Road) போடுகிற காண்டிராக்டர்களுக்கு டிஸ்கவுண்ட் (Discount) பேரம் பேசிக்கொண்டு பணத்தைக் கொள்ளை கொள்ளையாக வாரி விடுகிறார்கள்.

என்னவோ பாவம்! ஏழை உபாத்தியாயர்கள் எல்லாப் பிள்ளைகளுக்கும் கண் தெரியப் பண்ணுகிறார்களே என்று எண்ணி அவர்களுக்கு 5 ரூபாய் அதிகமாகக் கொடுக்க இஷ்டப்படுவதில்லை,' என்று சரமாரியாகப் பேசினார்.

பொன்னுசாமிப்பிள்ளை அந்த ஊருக்குப் புதியவர்; ஐயரைப்பற்றி அதிகமாக ஒன்றும் அறியாதவர்; எதையும் எளிதில் நம்பும் சுபாவம் உடையவர். ஆகவே அவர் அண்ணாசாமி ஐயரை உண்மையான அநுதாபியாக நினைத்து, 'என்ன செய்கிறது? நீங்கள் சொல்வதெல்லாம் சரிதான். என் வருமானம் எங்கள் எல்லோருக்கும் கேழ்வரகு வாங்கிக் கூழ் சமைத்துச் சாப்பிடுவதற்கும் போதவில்லை. என்ன செய்கிறது? எல்லாம் ஆண்டவன் செயல்,' என்று சொல்லி ஆண்டவனை நொந்துகொண்டார்.

உடனே ஐயர், 'பிள்ளையவாள், நான் சொல்வதைக் கேளுங்கள்: உங்களைப் பார்த்தால் எனக்குப் பரிதாபமாய் இருக்கிறது. இறந்த பிறகு யாரும் கொண்டுபோகப் போவது ஒன்றுமில்லை. ஏதோ என் வீட்டுத் திண்ணை இருக்கிறது. அதில் ஒரு புறம் ஒரு விளக்கைக் கொளுத்தி வைத்து நாலு ஆத்துப் பிள்ளைகளை மடக்கிப் போட்டுக்கொண்டு ஏதாவது பாடம் கீடம் சொல்லிக் கொடுங்கள். ஏதோ வந்தவரைக்கும் நாலு துட்டு வரட்டுமே. அது ஏதாவது ஒரு செலவுக்கு உதவாதா? என் வீட்டுப் பையனுக்கு முதலில் சொல்லிக் கொடுங்கள். அதைப் பார்த்து இன்னும் நாலு ஆத்துப் பிள்ளைகள் வந்து சேருவார்கள். நானும் சில பிள்ளைகளையும் குட்டிகளையும் வந்து படிக்கச் செய்கிறேன். நாளைக்கு கல்ல நாள். நாளைக்கே இந்தக் காரியத்தைத் தொடங்குங்கள்,' என்று சொன்னார்.

பிள்ளையவர்கள், ஐயருடைய அநுதாபத்தையும் ஆதரவையும் கண்டு அவரை மிக நல்லவரென்று எண்ணி அவரைப் பற்றித் தாம் அதற்கு முன்னால் கேள்விப்பட்டிருந்த இரண்டொரு கேவலமான விஷயங்களையும் பொறாமையினால் கட்டிவிடப்பட்ட பொய்க் கதையாய் இருக்குமென்று தீர்மானித்தார்.



மறு தினம் முதற்கொண்டு ஐயர் வீட்டுத் திண்ணையில் பிள்ளையவர்கள் 'பிரைவேட்' சொல்லிக் கொடுக்க ஆரம்பித்தார். ஐயர் பிள்ளையைத் தவிர மாதாமாதம் நாலணா, ஐந்தணா, ஆறணா 'ரேட்டில்' நாலைந்து பிள்ளைகள் பிரைவேட் படிக்க வந்து சேர்ந்தார்கள். இதற்கு அண்ணாசாமி ஐயர் முயற்சிதான் காரணம்!

'பாருங்கோ! நான் சொல்லியபடி செய்துவிட்டேன். நன்றாய்ப் பாடம் சொல்லிக் கொடுங்கள். சம்பளம் சரியாய் வந்து விடும். நமது பையனைக் கொஞ்சம் பார்த்துக் கொள்ளுங்கள்; புத்திசாலி; அவனால் உங்தளுக்கு அதிக சிரமம் ஏற்படாது, என்று அண்ணாசாமி ஐயர் சொன்னார்.

'ஆஹா அப்படியே ஆகட்டும், இருக்க இடங் கொடுத்தவர்களுக்கு என்ன தான் செய்யக்கூடாது,' என்றார் பொன்னுசாமிப் பிள்ளை.

பிள்ளையவர்களுக்குப் 'பிரைவேட்' விஷயத்தில் மாதம் ஒன்றரை ரூபாய் வரும்படி வந்தது. நான் தவறாகச் சொல்லி விட்டேன்; கொஞ்சம் மன்னித்

துக்கொள்ளுங்கள். பிள்ளையவர்களுக்குத் தினந்தோறும் விளக்குக்காகக் காலணு எண்ணெய் செலவாயிற்று. சரியாகக் கணக்குப் போட்டுச் சொல்லு கிறேன். பிள்ளையவர்களுக்கு மாத வருமானம் ஒரு ரூபாவும் அரையணுவும். இந்த வரும்படியில் நமது ஐயரவர்களுடைய பணம் சேர்ந்து இருப்பதாக நினைத்துவிடாதீர்கள். இருக்க இடம் விட்ட மகானல்லவா? அதனுல் அவர், பிள்ளையவர்களுக்குக் காலணுவும் கொடுப்பதில்லை. பெருந்தன்மை வாய்ந்த பிள்ளையவர்களும் கேட்பதில்லை. பிள்ளையவர்களால் ஐயரவர்களுக்கு உண்டான இலாபம் என்னென்ன வென்று அறிகிறீர்கள்? முதலாவது ஐயர் பிள்ளைக்குச் சம்பளம் இல்லை. உபாத்தியாயர் விளக்கேற்றுகிற படியால் பொழுது போனதும் ஐயர் தமது வீட்டின் வெளியில் தாம் விளக்கு ஏற்றி வைக்க வேண்டியதில்லை. பொழுது போனபிறகு தெருக்கதவைத் தாளிடு கிற வரையில் வீட்டிற்குள் யாராவது விபரீத எண்ணத்துடன் நுழைந்து விடுவார்கள் என்ற கவலையும் ஐயருக்கு இல்லை. இதையெல்லாம் முன்னுல் ஆலோசித்தே ஐயர் பொன்னுசாமிப் பிள்ளைக்குத் தமது வீட்டுத் திண்ணை யில் இடம் விட்டார்.

ஐயருடைய மக்குப் பிள்ளை, பொன்னுசாமிப் பிள்ளையின் உண்மை யான முயற்சியினுல் புத்திசாலிப் பிள்ளையாக மாறினுன். உண்மையில் அவன் நன்ருகப் படித்தான். ஐயர் அதிர்ஷ்டக்காரர் அல்லவா?

ஐயரவர்கள் தமது பிள்ளை படிக்கிறவரையில் கூடிய மட்டும் அவனைச் சிக்கனமாகப் படிக்க வைக்கவேண்டுமென்று தீர்மானித்தார். அனந்த சயன னுக்குப் பிறகு ஐயருக்கு வேறு பெண்ணே பிள்ளையோ பிறக்கவில்லை. ஐயலூர் போர்டு பாடசாலையில் அனந்த சயனன் ஐந்தாவது வரையில் படித்து விட்டான். அதற்குமேல் திரிசிராப்பள்ளிக்குக் கொண்டுபோய் அவனைப் படிக்கவைக்க வேண்டுமென்பது ஐயர் கருத்து. அந்த விஷயத்தில் ஐயர் சம்சாரம் பங்கஜத்திற்குப் பழம் நழுவிப் பாலில் விழுந்ததுபோல் சந்தோஷந் தான். எத்தனை நாளைக்கு அவள் நாட்டுப் புறத்திலேயே இருப்பாள். அவளுடைய சிநேகிதைகளெல்லாம் பட்டண வாசங்களில் படாடோபமாக வாழ்ந்துகொண் டிருக்கிருர்கள். ஆகவே பங்கஜத்திற்கும் பட்டண வாசத்து வாழ்க்கை விருப்பமாய் இருந்தது. அதற்குச் சந்தர்ப்பமும் வந்தது.

திரிசிராப் பள்ளியில் குடித்தனம் கட்டியாயிற்று. அனந்த சயனன் 'நேஷனல் ஹைஸ்கூ'லில் வாசித்து வந்தான். அவனே தனக்குப் பிரை வேட் வேண்டாமென்று சொல்லிவிட்டான். இலவசமாகப் பொன்னு சாமிப் பிள்ளையவர்கள் போட்ட அஸ்திபாரம் இப்போது அவனுக்குப் பேருதவி யாய் இருந்தது. பங்கஜம் திரிசிராப் பள்ளியில் அனந்த சயனனுக்குச் சமைத்துப் போட்டுக்கொண் டிருந்தாள். அண்ணுசாமி ஐயர் ஐயலூருக்குப் போவதும் திரிசிராப்பள்ளிக்கு வருவதுமாய் இருந்தார். பட்டண வாச வாழ்க்கையின் சகாயத்தினுல், 'வீட்டில் அதிகாரமுள்ளவள் பங்கஜமே,' என்று எல்லோரும் சொல்லும்படி பங்கஜம் நடந்துகொண்டாள். உண்மையில் அண்ணுசாமி ஐயர் அவள் இஷ்டப்படி எதையும் செய்யக்கூடிய நிலையில் வந்துவிட்டார். பண விஷயம் தவிர மற்ற விஷயங்களில் அவர் தம் மனைவி யின் மனங் கோணுமல் அவள் இஷ்டப்படி இருக்கும்படி அவளை விட்டு விட் டார். பங்கஜத்திற்குச் சுயராஜ்ஜியம் கிடைத்துவிட்டது. அந்தச் சுயராஜ்ஜியத்

தில் நடந்த விஷயங்களைப் பற்றி நமக்குக் கவலை இல்லை. 'கெட்டது கிளை கிளையாகப் பெருகு'மென்று சொல்வார்கள் அல்லவா? அந்த வார்த்தை பங்கஜத்தின் விஷயத்தில் உண்மையாய் இருந்தது.

பல வருஷங்கள் ஆயிற்று. அனந்தசயனன் படித்து ஒவ்வொரு வகுப்பிலும் தவருமல் தேறிக் கடைசியாகப் 'பி. ஏ. ஹானர்ஸில்' இராஜதானியில் முதலாவதாகத் தேர்ச்சி பெற்றுத் தேறியதற்கு அடையாளமாக யோக்கியதா பத்திரம் பெற்றுத் தான் அடையவேண்டிய பாக்கியத்தை யெல்லாம் இந்த உலகத்தில் அடைந்து விட்டதாக எண்ணி ஐயனூரிலுள்ள தன் வீட்டில் தன் தாய் தந்தையர்களோடு விநோதமாகக் காலங் கழிக்கலானான்.

அப்பொழுது அனந்த சயனனுக்கு வயது இருபது இருக்கும். அவன் தகப்பனுக்கு நாற்பத்தைந்து வயது இருக்கும். அவனுடைய தாய்க்கு முப்பத்தைந்து வயது இருக்கும்.

காலாகாலத்தில் தனக்குப் பிள்ளை பிறந்து படித்துப் பாஸ் செய்தது பங்கஜத்திற்குச் சந்தோஷந்தான். ஆனாலும் தான் இன்னும் இளமை மாருமல் இருக்கும்போதே தனக்கு ஒரு மருமகள் வருவது பங்கஜத்திற்கு இஷ்டமில்லாமல் இருந்தது. ஆயினும் உலகம் பணத்தைக் கண்டால்—அதோடு படிப்பையும் கண்டால் வேறொன்றையும் கவனியாமல் பல்லை இளிக்குமல்லவா? ஆகவே அநேகர்—கனபாடிகளிலும் அநேகர்—பங்கஜத்தின் வீட்டிற்கு வலிய வந்து சம்பந்தம் பேசினர். அவர்கள் எல்லோரிடத்திலும் பங்கஜம் கடுகடுத்துப் பேசி அவர்கள் தன் வீட்டுச் சம்பந்தத்தைக் கனவிலும் நினைக்காதபடி செய்து அனுப்பி விடுவாள். 'பெண் கொடுக்கிறேன்,' என்று சம்பந்தம் பேச வருகிறவர்களைக் கண்டால் பங்கஜத்திற்குச் ஸர்ப்பத்தைக் காண்பது போல் இருக்கும். ஏழைகள் நடுதரமானவர்கள் ஆகிய இரு கூட்டத்தாரில் பெண்வைத்து இருப்பவர்கள் எல்லோரும் பங்கஜத்தினிடம் சம்பந்தம் பேசச் சென்று அவளால் அவமதிக்கப் பட்டார்கள். ஆகவே, அவர்கள் எல்லோரும் பங்கஜத்தின் இடம் பதிந்திருந்த குற்றங்களை எடுத்துப் பணம் இல்லாமலே விளம்பரம் செய்ய ஆரம்பித்தார்கள். அதை யெல்லாம் பணத் திமிர் பிடித்த பங்கஜம் பொருட்படுத்தவே இல்லை. அனந்தசயனன் கலியாண விஷயத்தில், பங்கஜத்திற்கு, தன் சுயநலத்தைக் கருதி அவ்வளவு அக்கரை இல்லாவிட்டாலும் அண்ணுசாமி ஐயருக்கு அனந்தசயனன் கலியாண விஷயத்தில் அதிக அக்கரை இருந்தது. 'பையன் ஒரு வேளை ஒரு மாதிரியாகத் திரும்பி விட்டால் அப்பொழுது என்ன செய்கிறது? பணம் பாழாய்விடுமே. ஆகையினால் அவனுக்குச் சீக்கிரத்தில் தகுந்த இடத்தில் கலியாணம் செய்துவிட வேண்டும்,' என்று அவர் எண்ணினர். அவர் அவ்வாறு எண்ணியதற்கு மற்றொரு காரணமும் உண்டு. 'பிள்ளைக்குக் கலியாணம் செய்தால் எதிர் ஜாமீன் ஏராளமாக வரும். அதை வட்டிக்கு விட்டு அதன் மூலம் மாதம் ஐம்பது, அறுபது ரூபா நிச்சயமாகச் சம்பாதிக்கலாம்,' என்பதும் அண்ணுசாமி ஐயரின் நீண்டநாள் எண்ணம். அதனல் பிள்ளைக்குக் கலியாணம் ஆகாமல் இருக்கிறவரையில் மாதம் ஒன்றுக்கு குறைந்த பட்சம் ஐம்பது, அறுபது ரூபா நஷ்டமாவதாக அவர் எண்ணினர். ஆகவே அவர் எப்படியாவது தமது மனைவியைச் சம்மதிக்கச் செய்து தமது பிள்ளைக்குச் சீக்கிரம் விவாகஞ்

செய்து விட நினைத்தார். பிறகு அவர் எண்ணத்திற்கு அவர் மனைவி ஒருவாறு உடன் பட்டாள். உடனே ஐயருக்கு ஆனந்தம் உண்டாயிற்று.

'பெண் பெரிய பணக்காரனுடைய மகளாய் இருக்க வேண்டும். பிள்ளையின் மனத்தை வசீகரிக்கக் கூடிய அழகுடையவளாய் இருக்க வேண்டும்,' என்பதே தமக்கு மருமகளாக வரப்போகிற பெண்ணின் இடத்தில் அண்ணுசாமி ஐயர் எதிர்பார்த்த விஷயமாகும். மற்ற விஷயங்களைப்பற்றி அவர் கவலைப்படவில்லை. இந்த விஷயத்தில் ஒரு மாத காலம் அண்ணுசாமி ஐயர் மும்முரமாக வேலை செய்தார். கடைசியாக அவர் தஞ்சாவூர் 'சப்ஜட்ஜ்' தண்டபாணி ஐயர் பெண்ணையாவது, திரிசிராப்பள்ளி 'டிஸ்ட்ரிக்ட் போர்டு, பிரசிடெண்டு திகம்பர ஐயர் பெண்ணையாவது சென்னபட்டினம் கவர்னர் ஆலோசனை சபை அங்கத்தினரான பரமேஸ்வர அய்யர் மகளையாவது தம் மகனுக்கு மனைவியாக்க வேண்டுமென்று எண்ணினுர். மூன்று இடமும் பெரிய இடந்தான். இந்த மூன்று இடத்திற்குள் பண விஷயத்தில் தஞ்சாவூரைக் கடைசியாகவும், திரிசிராப்பள்ளியை இரண்டாவதாகவும், சென்னபட்டினத்தை முதலாவதாகவும் சொல்லலாம்.

அண்ணுசாமி ஐயர் இந்த மூன்று இடத்திற்கும் கலியாண விஷயமாகக் கடிதப் போக்கு வரவு நடத்தினுர். முதல் முதலில் தஞ்சாவூரிலிருந்து அவருக்குக் கடிதம் வந்தது. உடனே ஐயர் தஞ்சாவூருக்குச் சென்று தண்டபாணி ஐயரைக் கண்டு, மிகத் தாராளமாகப் பாம்பரைப் பெரிய மனிதரைப் போல நடித்துக் கொண்டு, கலியாண விஷயத்தைப்பற்றிப் பேசினுர். எவ்வளவு கேட்டாலும் வருமென்று தெரிந்து கொண்ட அண்ணுசாமி ஐயர் மிக நயப்பாகப் பிள்ளைக்கு எதிர் ஜாமீன் ஐயாயிரம் ரூபாய் கொடுக்கவேண்டுமென்றும், சாமான்களெல்லாம் வெள்ளிச் சாமான்களா யிருக்க வேண்டுமென்றும், நகைகளெல்லாம் வைரமும் பொன்னுமாயிருக்க வேண்டுமென்றும், மற்றக் கலியாண விஷயங்கள் வழக்கம்போல் நடைபெற வேண்டுமென்றும் சொன்னுர். தமக்கு இருப்பது ஒரே பெண் ஆகையினுலும் பிள்ளையும் ஒரே பிள்ளையா யிருப்பதனுலும் தண்டபாணி ஐயர் அண்ணுசாமி ஐயரின் ஏற்பாட்டிற்கு ஆட்சேபனை செய்யாமல் ஒப்புக் கொண்டார். ஆனுல் தண்டபாணி ஐயர், 'எல்லா விஷயமும் எனக்குச் சம்மதந்தான், பிள்ளையை நான் உங்கள் வீட்டிலேயே வந்து பார்த்து விடவேண்டும். பிள்ளை பிடித்தமா யிருந்தால் எல்லா வகையிலும் உங்கள் இஷ்டப்படி நடக்க எனக்குச் சர்வ சம்மதம்,' என்று சொன்னுர்.

பிறகு அந்த வேளை, அண்ணுசாமி ஐயர், தண்டபாணி ஐயர் வீட்டில் சாப்பிட்டு விட்டு, 'வருவதற்கு முன்னுல் கடிதம் எழுதிவிட்டு வாருங்கள். சீக்கிரம் வரவேண்டும். கால தாமதம் செய்ய வேண்டாம்,' என்று சொல்லி விட்டு இரயிலுக்குப் புறப்பட்டார். 'இன்னும் ஒரு வாரத்தில் கடிதம் எழுதி விட்டு வருகிறேன்,' என்ருர் தண்டபாணி ஐயர்.

அண்ணுசாமி ஐயர் தம் வீடு போய்ச் சேர்ந்தார். அப்போது திரிசிராப்பள்ளி 'டிஸ்ட்ரிக்ட் போர்டு பிரசிடெண்டி'டமிருந்து அவருக்கு ஒரு கடிதம் வந்து இருந்தது. ஐயர் பேராசைக்காரர் அல்லவா ? 'அந்த இடத்திற்குப் போய்ப் பார்ப்போம். எதிர் ஜாமீன் ஏராளமாகக் கேட்போம். படிந்தால்

படியட்டும். படியாவிட்டால் தஞ்சாவூர் பெண் இருக்கவே இருக்கிறது," என்று எண்ணினர். பணம் என்னும் விஷயத்தில் பங்கஜத்திற்கும் இஷ்டந் தான். அதனல் அவளும் சம்மதித்தாள். பிறகு ஐயர் ஒருவரோடும் சொல்லாமல் திரிசிராப்பள்ளிக்குச் சென்ருர்.

ஐயர் தாம் விரும்பிய மூன்று பெண் வீட்டார்களில் எவரையும் தம் வீட்டிற்கு வரவழைத்துப் பெண் பேசாமைக்குக் காரணம் அவர்கள் தம் வீட்டிற்கு வந்தால் தமக்குச் செலவு நேரிடும் என்று தாம் எண்ணியதே யாகும்.

திரிசிராப்பள்ளிக்குச் சென்ற அண்ணுசாமி ஐயர் திகம்பர ஐயரைக் கண்டு கலியாண விஷயத்தைப் பற்றித் தம்முடைய சாமர்த்தியத்தை யெல்லாம் உபயோகப்படுத்திப் பேசினர். பெண்ணுக்கு எல்லா நகைகளி லும் வெவ்வேறு மாதிரி ஒவ்வொரு ஜதை செய்து தரவேண்டும் என்ருர். மேலும் எதிர்ஜாமீன் பத்தாயிரம் தரவேண்டும் என்றும் வெள்ளிச் சாமான் கள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு ஜதை சீதனம் கொடுக்க வேண்டுமென்றும் சொன்னர். அண்ணுசாமி ஐயருக்கு அதிர்ஷ்ட காலம். திகம்பர ஐயருக்கும் இருப்பது ஒரே பெண்தான். அண்ணுசாமி ஐயருக்கு இருப்பது ஒரே பிள்ளை யாதலாலும் அவன் பி. ஏ. ஹானர்ஸ் பரீட்சையில் இராஜதானியில் முதலாவதாகத் தேறி யிருப்பதாலும் அவனுக்குத் தம் பெண்ணை அண்ணுசாமி ஐயரின் ஏற்பாட்டிற்கு உட்பட்டுக் கொடுக்கத் திகம்பர ஐயர் சம்மதித்தார். ஆனல் அவரும் பிள்ளையை நேரில் பார்த்த பிறகு தான் கலியாண விஷயத்தை ஆரம்பிக்க முடியுமென்றும் ஒரு வாரத்திற்குள் தாம் கடிதம் எழுதிவிட்டு ஐயலூருக்கு வருவதாகவும் கூறினர்.

பிறகு அண்ணுசாமி ஐயர் தம் ஊர் போய்ச் சேர்ந்தார். திரிசிராப்பள்ளி விஷயம் தமக்குச் சுலபமாகப் படியுமென்று தோன்றியபடியால் தஞ்சாவூர் விஷயத்தை எப்படியாவது கத்தரித்துவிட வேண்டுமென்று ஐயர் தீர்மானித் தார். எப்படிக் கத்தரிப்பது? இடம் சாமானிய இடமல்லவே! ஐயர் ஒரு யோசனை செய்தார். அது என்ன யோசனை?

'தண்டபாணி ஐயரிடமிருந்து அவர் புறப்படுகிற தேதியைக் குறித்துக் கடிதம் வரும். அன்று நமது பக்கத்து வீட்டுப் போக்கிரி கிட்டுவையும் தண்டு பஜாரியாகிய மாஜி சுமங்கலி மொட்டை சேஷியையும் அங்கு அனுப்ப வேண்டும். ஐயர் தம் வீட்டிலிருந்து புறப்படுகிறபோது போக்கிரி கிட்டு ஒரு பூனையைக் கையில் வைத்துக் கொண்டிருந்து அவர் அறியாமல் அவர் எதிரே ஓடும்படி விடவேண்டும். ஐயர் சகுனத் தடை என்று சற்று நிற்கலாம். பிறகு புறப்படுவார். அப்போது மொட்டை சேஷி 'ஐயோ! அந்த அநியாயக்காரன் வீட்டுக்குப் போனல் ஆபத்துவரும் என்பதை அறியாமல் நான் அங்கே போய் அவமானப்பட்டேனே என்று சொல்லி வாயிலடித்துக்கொண்டு எதிரே ஓடவேண்டும். அதைப் பார்த்த பிறகும் தண்டபாணி ஐயர் தமது ஒரே பெண்ணைத் துணிந்து என் பிள்ளைக்குக் கொடுக்கச் சம்மதிக்க மாட்டார். இப்படித்தான் செய்ய வேண்டும்' என்று அண்ணுசாமி ஐயர் தீர்மானித்தார்.

பிறகு தண்டபாணி ஐயரிடமிருந்து அவர் புறப்படுகிற தேதியைக் குறித்துக் கடிதம் வந்தது. உடனே அண்ணுசாமி ஐயர் தாம் எண்ணிய காரியத்தைத் திறமையாக நடைபெறச் செய்தார். தண்டபாணி ஐயர் சகுனத்தில்



மிகவும் நம்பிக்கை உடையவர். அதனல் அவர் அண்ணுசாமி ஐயர் சம்பந்தம் வேண்டாமென்று பிரயாணத்தை நிறுத்திக்கொண்டார். 'நமக்கு இருப்பது ஒரே பெண். சகுனத்தைக் கண்டும் நாம் அந்த இடத்தில் கால் வைப்பது கூடாது,' என்று அவர் மனைவி அம்புஜமும் அவருக்கு ஆதரவாகப் பேசினுள். அதோடு தண்டபாணி ஐயரைப்பற்றிய கவலை அண்ணுசாமி ஐயருக்கு ஒழிந்தது.

மேற்படி சூழ்ச்சியை நிறைவேற்றி வைக்கும் விஷயத்தில் அண்ணுசாமி ஐயருக்கு ஐம்பது ரூபாய் செலவாயிற்று. பத்தாயிரம் ரூபா வரும்போது சிக்கனக்கார அண்ணுசாமி ஐயர் ஐம்பது ரூபா செலவழித்ததை நீங்கள் அதிகமென்று நினைக்கமாட்டீர்கள் அல்லவா ?

பிறகு அண்ணுசாமி ஐயர் திரிசிராப்பள்ளி திகம்பர ஐயர் கடிதத்தை எதிர் பார்த்துக்கொண் டிருந்தார். ஒரு நாள் திடீரென்று இரண்டு கடிதங்கள் அண்ணுசாமி ஐயருக்கு வந்தன. அவைகளில் ஒன்று சென்னபட்டினம் கவர்னர் மந்திராலோசனை சபை அங்கத்தினர் பரமேஸ்வர ஐயர் இடமிருந்தும் மற்ருென்று திகம்பர ஐயரிடமிருந்தும் வந்தன. திகம்பர ஐயர் மறு நாள் புறப்பட்டு வருவதாக எழுதி யிருந்தார். பரமேஸ்வர ஐயர் தம்மை உடனே வந்து பார்க்கும்படி எழுதி யிருந்தார்.

பட்டினத்துக் கடிதத்தைப் பார்த்தவுடன் அண்ணுசாமி ஐயரின் நாக்கில் ஜலம் ஊறியது. 'வீட்டில் கொஞ்சம் அசந்தர்ப்பம். இன்னும் ஒரு வாரம் பொறுத்து வாருங்கள்,' என்று திகம்பர ஐயருக்குத் தந்தி கொடுத்துவிட வேண்டும். பிறகு சென்னபட்டினம் போகவேண்டும். திரிசிராப்பள்ளி ஏற்பாட்டை விடச் சென்னபட்டின ஏற்பாடு மேன்மையாகப் படியுமானல் அப்போது ஏதாவது ஒரு தந்திரம் செய்து திகம்பர ஐயரை ஒழித்து விட

லாம். சென்னபட்டினம் சம்பந்தம் படிந்தால் பணம், கௌரவம், பிள்ளைக்கு நல்ல உத்தியோகம் முதலியவை இலேசாகக் கிடைக்கும்,' என்று அண்ணு சாமி ஐயர் நினைத்தார். சென்னபட்டித்துச் சம்பந்தம் பங்கஜத்திற்கு மிகவும் இஷ்டம். ஆகவே அவள் ஐயரின் எண்ணத்தைத் தன் முழுமனச் சம்மதத்தோடு ஆதரித்தாள்.

பிறகு, அண்ணுசாமி ஐயர் ஒரு வாரங் கழித்து வரும்படி திகம்பர ஐயருக்குத் தந்தி கொடுத்துவிட்டு அன்று சாயங்கால இரயிலில் புறப்பட்டுச் சென்னபட்டினம் போய்ச் சேர்ந்தார். அவர் பரம்பரைப் பெரிய மனிதரைப் போல மிக ஆடம்பரமாகப் பரமேஸ்வர ஐயரைச் சென்று கண்டார். இருவரும் கலியாண விஷயத்தைப் பற்றிப் பேசினர்கள். இந்தத் தடவை அண்ணு சாமி ஐயர் முன் னெச்சரிக்கையாகத் தமது மகனுடைய, கை தேர்ந்தவனல் பிடிக்கப்பட்ட, சிறந்த புகைப்படமொன்றைக் கொண்டுவந்திருந்தார். அதைப் பரமேஸ்வர அய்யரிடம் கொடுத்தார். பிள்ளையினுடைய சாமுத்திரிகா லட்சணம் அய்யருக்குப் பிடிப்பைத் தந்தது. அய்யரின் வீட்டுப் பெண்டுகளும் என் அய்யரின் பெண்ணும் கூட அந்தப் படத்தைப் பார்த்துத் திருப்தி யடைந்தனர். ஆகவே பரமேஸ்வர அய்யர் தமது பெண்ணை அண்ணுசாமி அய்யரின் பிள்ளைக்குக் கொடுக்க முழு மனத்தோடு சம்மதித்தார்; அண்ணுசாமி அய்யர் கேட்டபடி எதிர் ஜாமீனுக இருபதினுயிரம் ரூபாய் கொடுக்கவும், பெண்ணுக்கு இருபதினுயிரம் ரூபா பெறுமானமுள்ள வைர நகைகள் போடவும், நாலாயிரம் ரூபாய்க்குக் குறையாமல் வெள்ளிச் சாமான்கள் வாங்கிக் கொடுக்கவும் சம்மதித்தார். பரமேஸ்வர அய்யர் கலியாணமானவுடன் பிள்ளைக்கு ஒரு பெரிய உத்தியோகம் செய்து வைப்பதாகவும் சொன்னர். பிறகு ஊருக்குச் சென்று ஜாதகத்தை அனுப்பும்படி அண்ணுசாமி அய்யரிடம் பரமேஸ்வர அய்யர் கூறினர். 'ஆஹா! அப்படியே செய்கிறேன். நீங்களே பெண்ணின் ஜாதகத்தையும் பிள்ளையின் ஜாதகத்தையும் பார்த்துக் கொள்ளுங்கள். பெண்ணைக் கொடுக்கப் போகிற உங்களுக்கு இல்லாத கவலை எனக்கு என்ன இருக்கப் போகிறது,' என்று சொல்லிவிட்டு அண்ணுசாமி அய்யர் தம் வீடு போய்ச் சேர்ந்தார்; உடனே பிள்ளையின் ஜாதகத்தை வேறு ஒரு கடிதத்தில் பெயர்த்தெழுதிப் பட்டினத்திலுள்ள பரமேஸ்வர அய்யருக்கு அனுப்பினர்.



பட்டினத்து விஷயம் நிச்சயமாகப் படிந்து விடுமாகையால் திரிசிராப்பள்ளி திகம்பர அய்யரை எப்படிக் கத்தரித்து விடுவது என்று அண்ணுசாமி

JL

அய்யர் ஆலோசித்தார். அப்போது அவருக்கு வாயாடி வைத்தியின் நினைவு வந்தது. 'அவன்தான் சரியானவன். அவனைக்கொண்டு நமது பிள்ளைக்குச் செவ்வாய்த் தோஷம் என்று திகம்பர அய்யர் நம்பும்படி அவரிடம் சொல்லச் செய்ய வேண்டும். அப்படிச் சொல்லி விட்டால் அவருடைய ஒரே பெண்ணை அவர் நமது பிள்ளைக்குக் கொடுக்கச் சம்மதிக்க மாட்டார். அதுதான் சரியான வழி,' என்று அண்ணுசாமி அய்யர் எண்ணினுர். உடனே அவர், தாம்எண்ணிய படி வாயாடி வைத்திக்கு இருபத்தைந்து ரூபாயைக் கொடுத்தழுது தமது ஆலோசனை நிறைவேறும்படி செய்தார். வைத்தியின் மூலம் அனந்த சயன னுக்குச் செவ்வாய்த் தோஷம் என்பதை அறிந்த திகம்பர அய்யர் திடுக்கிட்டுப் போனுர். அதோடு அவர் விஷயம் ஒழிந்தது.

'ஆசைக்காரன் மோசம் போவான்,' என்பதும் 'ஏமாற்றுகிறவன் ஏமாற்றப் படுவான்' என்பதும் என்றைக்கும் இந்த உலகத்தில் நடைபெறும் உண்மை யான விஷயமாகும்.

திரிசிராப்பள்ளி திகம்பர அய்யருடைய இளைய சகோதரிதான் சென்ன பட்டினம் பரமேஸ்வர அய்யருடைய மனைவி, இந்த விஷயம் எள்ளளவும் அண்ணுசாமி அய்யருக்குத் தெரியாது. ஆகவே, ஆனந்த சயனனுக்குச் செவ் வாய்த் தோஷமென்று அண்ணுசாமி அய்யர் கட்டிவிட்ட விஷயம் பட்டினம் பரமேஸ்வர அய்யருக்கும் அவர் வீட்டிலுள்ளவர்களுக்கும் தெரிந்து விட்டது. தன்னிடம் வந்தவரும் தன் மைத்துனன் பெண்ணைப் பேசச் சென்றவரும் ஒருவரே என்பதைத் தம் அதிதீவிர புத்தியின் திறமையினுல் பரமேஸ்வா அய்யர் அறிந்து கொண்டார். 'வரட்டும் அவன்! நல்ல புத்தி கற்பித்து அனுப்பு கிறேன். அவன் பிராமணனு! பிள்ளையின் ஜாதகத்தை நல்ல ஜாதகம்போல் எனக்கு எழுதி அனுப்பி யிருக்கின்றுனே. எதிர் ஜாமீன் வாங்கிக் கொண்ட பிறகு என் பெண் செத்தாலென்ன? வாழ்ந்தாலென்ன? என்பது அவன் எண்ணம் போலும்! நல்ல சம்பந்தம்!!' என்று பரமேஸ்வர அய்யர் கோபத்தோடு சில வார்த்தைகள் சொன்னுர். அவர் மனைவிக்கும், அவர் வீட்டாருக்கும்— ஏன் இந்த விஷயத்தை அறிந்த பிறகு அவர் சேவகர்களுக்குங்கூட-அண்ணு சாமி அய்யர் விஷயத்தில் அதிக ஆத்திரம் ஏற்பட்டிருந்தது.

அண்ணுசாமி அய்யர் சென்னபட்டினத்திலிருந்து கடிதம் வரும் வரும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். கடைசியாக அவருக்குப் பரமேஸ்வா அய்யரிடமிருந்து ஒரு கடிதம் வந்தது. அந்தக் கடிதத்தில் தம்மை உடனே வந்து பார்க்கும்படி பரமேஸ்வர அய்யர் அண்ணுசாமி அய்யருக்கு எழுதி யிருந்தார்.

அண்ணுசாமி அய்யர் தமது பிள்ளை அனந்த சயனனிடமும் மனைவி பங்கஜத்தினிடமும் சொல்லிக் கொண்டு சென்னபட்டினம் போனுர்; பரமேஸ்வர அய்யரைக் கண்டார். அங்கு அவருக்கு நடந்த மரியாதையைப் பற்றி விகடகேசரி விவரித்து எழுத விரும்பவில்லை. பரமேஸ்வர அய்யருடைய நாய கூட அண்ணுசாமி அய்யரை ஒரு கடி கடித்தது. 'செத் தேன், பிழைத்தேன்,' என்று தமது கழுத்தைச் சேவகன் பிடித்துத் தம்மை

வெளியே தள்ள இதுவரையில் அதி புத்திசாலி யென்று தம்மை எண்ணிக்



கொண்டிருந்த அண்ணுசாமி அய்யர் பரமேஸ்வர அய்யர் வீட்டிலிருந்து வெளியில் ஓடித் தமது ஊர்போய்ச் சேர்ந்தார்.

தன் வீட்டிற்குத் தானே கொள்ளி வைத்துக் கொண்டவனைப் போலத் தமக்குத் தாமே அவமானம் தேடிக் கொண்ட அண்ணுசாமி அய்யர் சென்ன பட்டினத்தில் தமக்கு நடந்த அவமானத்தை எண்ணியெண்ணி மனம் வருந் தினர். அதைப்பற்றி அவர் ஒருவரோடும் ஒன்றும் சொல்லவில்லை. தமது பிள்ளைக்கும் மனைவிக்கும் சென்னபட்டினத்துச் சம்பந்தம் படியாததற்குக் காரணமாக அவர்கள் நம்பும்படி ஏதோ சில சாக்குப் போக்குகளைச் சொல்லி விட்டார். ஆயினும் பரமேஸ்வர அய்யர் வீட்டுப் பெண்கள் தம்மைக் கேவல மாகப் பேசியதும், சேவகன் கழுத்தைப் பிடித்துத் தள்ளியதும், நாய் கடித்ததும் அண்ணுசாமி அய்யர் மனத்தில் நீங்காத வேதனையை யுண்டாக் கியது. பாவம்! அதுவரையில அண்ணுசாமி ஐயர் எங்கும் அவமானம் அடைந்த தில்லை. ஆனல் அவர் மட்டும் அநேகரை அவமானப்படுத்தி யிருக்கிறர்.

பிறகு அண்ணுசாமி ஐயர் தமது பிள்ளைக்குத் தேடாத இடங்களி லெல்லாம் பெண் தேடினர். அவர் தமது பிள்ளைக்குச் செவ்வாய்த் தோஷம் என்று தாமே கட்டிவிட்ட கதை ஊரெங்கும் பரவி விட்டது. அதனல் ஒரு ஏழை பிராமணன்கூடத் தன் பெண்ணை அனந்தசயனனுக்குக் கொடுக்க இஷ்டப்படவில்லை. ஆனல் ஒரு பிராமணன் செவ்வாய்த் தோஷமுள்ள தன் பெண்ணை அனந்த சயனனுக்குக் கொடுக்க முன் வந்தான். உண்மையில் அனந்த சயனனுக்குச் செவ்வாய்த் தோஷம் இல்லாதபடியால் அந்தப் பெண்ணை அவனுக்குக் கட்டிக் கொள்ள அண்ணுசாமி ஐயர் இஷ்டப் படவில்லை. அண்ணுசாமி ஐயர் தமக்குத் தாமே விலங்கு போட்டுக்கொண்ட வரைப் போலானர். எல்லா விஷயங்களும் சேர்ந்து அண்ணுசாமி ஐயரை மிகவும் வருத்தியது. அந்த வருத்தம் காரணமாக அண்ணுசாமி அய்யர் மனமுடைந்து தேகம் மெலிந்து ஏதோ ஒரு கிழமையில் இரவு சாப்பிட்டு விட்டுப் படுக்கைக்குச் சென்ற பிறகு படுக்கையில் எவரும் அறியாதபடி இறந்து போனர். பொழுது விடிந்த பிறகுதான் அவர் மகனுக்கும் மனைவிக்கும் அவர் இறந்த விஷயம் தெரிந்தது. உபாத்தியாயர் பொன்னுசாமிப் பிள்ளையவர்க ளிடத்தில் சொல்லியபடியே சிக்கனக்கார அண்ணுசாமி அய்யர் தாம் தேடிய பொருள்களில் எதையும் எடுத்துச் செல்லாமலே இறந்து போனர். இவர் நாடகம் இப்படியாயிற்று. இந்த நாடகத்தைப் பார்த்த பிறகாவது எத்தனை லோபிகள் தாராளக்காரர்களாக மாறப் போகிறர்கள்? இப்படிச் சொல்வ தனல் விகடகேசரி எல்லாப் பொருளையும் எல்லோரும் வாரி இறைத்துவிட வேண்டுமென்று சொல்வதாக ஒருவரும் எண்ணக் கூடாது.

அண்ணுசாமி அய்யர் இறந்தவுடன் அனந்தசயனன் சீமைக்குச் சென்று பாரிஸ்டர் பரீட்சைக்குப் படித்து வரவேண்டுமென்று எண்ணினன். அந்த விஷயம் அவன் தாயாருக்கு மிகுந்த திருப்தியைத் தந்தது. அதற்குக் காரணம் என்ன? நான் சொல்ல மாட்டேன். நீங்கள் வேண்டுமானல் யூகித்து அறிந்து கொள்ளுங்கள். அதற்கு நான் தடை செய்ய மாட்டேன்.

தகப்பனர் ரொக்கமாக வைத்துச் சென்ற ரூபாய்கள் முப்பதினயிரத் தையும் எடுத்துக்கொண்டு அனந்தசயனன் பம்பாய்க்குச் சென்று கப்பலேறி இலண்டன் நகரத்தை அடைந்தான்; பாரிஸ்டர் பரீட்சைக்குப் படிக்க ஆரம் பித்தான். அவன் இலண்டனில் சென்ற பிறகு ஒரு வருஷம் வரையில் அவனிடத்திலிருந்து அவன் தாயாருக்குக் கடிதம் வந்து கொண்டிருந்தது; பிறகு நின்று விட்டது. எவ்வளவோ முயன்றும் பங்கஜத்திற்கு இரண்டொரு

வருஷத்திற்குப் பிறகு இலண்டனில் தன் மகன் இருக்குமிடத்தைக் கூட

அறிந்து கொள்ள முடியவில்லை. ஆனால் அவன் பாரிஸ்டர் பரீட்சையில் முதல் தரமாகத் தேறினான் என்றும், ஒரு ஹோட்டல்காரப் பெண்ணை நேசித்து அவளை மணஞ்செய்துகொண்டு இலண்டனிலேயே இருக்கிறான் என்றும், அவனுக்குப் பாரிஸ்டர் தொழிலில் கீழ்த்தர மக்கள் மூலமாக நல்ல வரும்படி வருகிறதென்றும், அவன் தன் தேசத்தையும் தாயையும் மறந்து விட்டான் என்றும் விகட கேசரிக்கு ஒருவாறு தெரியும்.

பங்கஜம் தன் மகனைப்பற்றி அதிகமாகக் கவலைப்படவில்லை. அவன் இங்கிலாந்துக்குச் செல்வது அவளுக்குச் சம்மதமான காரியமாகத்தானே இருந்தது. 'தாய் எட்டடி பாய்ந்தால் குட்டி பதினாறடி பாயு'மல்லவா? பங்கஜத்தின் தாயாரைப்பற்றி உங்களுக்குத் தெரியுமே. காமாட்சிக்குச் சரியான மகள்தான் பங்கஜம் என்று எல்லோரும் சொல்லும்படி பங்கஜம் நடந்து கொண்டாள். இப்படி நான் சொல்வதிலிருந்து உங்களுக்கு ஏதாவது தெரிகிறதா? தெரியா விட்டால் நான் இரண்டொரு விஷயம் பங்கஜத்தைப்பற்றிச் சொல்லுகிறேன்; அதிலிருந்து நீங்கள் பங்கஜத்தைப்பற்றிய மற்ற விஷயங்களை அறிந்து கொள்ளுங்கள்.

பங்கஜம் அடிக்கடி தன்னைப்போன்ற ஸ்திரீகளிடத்தில், 'கற்பென்பது ஆண்பிள்ளைகள் தங்கள் சுயநலத்திற்காகக் கட்டிவிட்ட வெறுங்கதை. ஆடவர்களைப்போலப் பெண்களும் தேக இச்சைசம்பந்தமாக தங்கள் இஷ்டம்போல் நடந்து கொள்ளலாம். நாம் கும்பிடுகிற கிருஷ்ணனைப் பாருங்கள்! அவன் எத்தனைக் கோபிகைகளோடு கூடியிருந்தான். சிவ பெருமான் தாருகா வனத்து ரிஷி பத்னிகளை இச்சித்தாரல்லவா? அது மட்டுமா! துரௌபதிக்கு ஐந்து பேர் புருஷர்கள் இருக்கவில்லையா? இதை யெல்லாம் கவனியாமல் நமக்கு மட்டும் ஆண்பிள்ளைகள் கட்டுத் திட்டம் செய்தால் அதை நாம் கவனிக்கலாமா?' என்று பலவாறு பேசுவாள்.

இதிலிருந்து நீங்கள் பங்கஜத்தைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்? நீங்கள் நினைப்பது சரிதான். பங்கஜம் மிகவும் கேவலமான வாழ்க்கையை நடத்திப் பாவ மூட்டையாக உலகத்தில் இருந்து, அநேக வாலிபர்களை நோயாளர்களாக்கித் தானும் நோய்வாய்ப்பட்டு, அதைத்தாங்க முடியாமல் இறந்தொழிந்தாள். அவளை எடுத்துச் சுடுவதற்குக்கூட எவரும் வரவில்லை. ஊரிலிருந்த பட்டாமணியக்காரரும், வெட்டியானும், தலையாரியுமே அவளுடைய உறவினர்களாக இருந்து அவளுடைய ஈமக்கடனை நிறைவேற்றினார்கள். ஆனால் சொத்துக்கு மட்டும் எங்கிருந்தோ சில பங்காளிகள் பங்கஜம் இறந்த இரண்டு தினங்களுக்குப் பிறகு முளைத்தனர். அவர்களுக்கும் பட்டாமணியக்காரருக்கும் கொடிய பகை. ஆகவே பட்டாமணியக்காரரின் முயற்சியின் மீது 'சீமைக்குச் சென்ற அனந்த சயனன் திரும்பி வருகிறவரையில் பங்கஜத்தின் சொத்துக்கள் தங்கள் பார்வையிலேயே இருக்கவேண்டும்' என்று அரசாங்கத்தினர் கூறி விட்டனர்.

அனந்தசயனன் எப்போது திரும்பி வருவான் என்பது தெரியவில்லை. அதுவரையில் பட்டா மணியக்காரருக்கு நல்ல கந்தாயந்தான். ஏனென்றால் அனந்தசயனனுடைய நிலங்களை அரசாங்கத்தார் பட்டா மணியக்காருடைய மேற்பார்வையில்தான் பயிரிடச் செய்து இருக்கிறார்கள். பட்டாமணியக்காரர் காட்டிய கண்டு முதலைத் தானே அரசாங்கத்தார் கண்டு கொள்ள வேண்டும்!

எச்சிற்கையால்கூட காக்கை ஓட்டாத அண்ணுசாமி ஐயருடைய சொத்துக்கள் எப்படி எப்படிப் போயிற்றுப் பார்த்தீர்களா? விகட கேசரி இந்த அண்ணுசாமி அய்யரின் விஷயங்களைச் சிரமத்துடன் உலகிற்கு அனுப்புகிறான். இந்த விஷயங்களினால் உலகத்தாருக்கு ஏதாவது நன்மையுண்டாகுமா என்பதுதான் அவன் கேள்வி?

சந்தா நேயர்களுக்கு

நமது 'தமிழரசு'க்கு நாளது ஸ்ரீமுக வருடம் தை மாதம் 12-ஆந் தேதி முதல் ஐந்தாவது ஆண்டு பிறக்கப் போகிறது. வருகிற புது வருடத்தில் 'தமிழரசு' இன்னும் பல வழிகளிலும் முன்னேற்ற மடைந்து விளங்கு மென்பதை மகிழ்ச்சியோடு அறிவித்துக் கொள்கிறோம். வி. பி. யில் அனுப்பினால் 5 அணா வீண்செலவாகு மாதலால் வி. பி. யில் அனுப்புவதை நிறுத்தி யிருக்கிறோம். எனவே, சந்தா நேயர்கள் தங்கள் புதுவருடச் சந்தாத் தொகையை தை மாதத்திற்கு முன்னதாகவே மணியாடர் மூலம் அனுப்பி உதவுவதோடு தங்கள் நண்பர்களையும் சந்தாதாரர்களாகச் சேர்த்துக் கொடுத்து உதவி செய்வார்களென்று நம்புகிறோம்.

மானேஜர்

வெளி விகடம்

உபாத்தியாயினி:—பாலைவனத்தின் வழியாக சாமளா போகும் போது ஏன் 'வைர நகைகளை' அணிந்து சென்றாள்.

மாணவி:—அதில் நீரோட்ட மிருப்பதால்தான்.

—கே. வீ. எஸ். வாஸ்.

*

பெண்:— அப்பா இன்றைக்கு வாத்தியார் என்னை ஒரு கேள்வி கேட்டார். அதற்குப் பதில் எழுதிக்கொண்டு வரச் சொன்னார்.

என்ன கேள்வி கேட்டார்?

'எப்படி இவ்வுலகம் சுழல்வதைச் சடுதியில் கண்டறியலாம்' என்று கேட்டார்.

குடிகாரத் தந்தை :— இதுதானா? சாராயம் குடித்தால் உடனே அறியலாமே.

* * *

முத்தன்:—(சுப்பனை) அண்ணே! சந்தேலே பாரு. ஒரு ஆரஞ்சுபழம் உன் தலைதண்டி இருக்கு!

சுப்பன்:—இதானா! அதோ பார்ரா, ஒருத்தனுக்குக் கடல் கிளிஞ்சி பெரிசு நகம் இருக்குடா.

முத்தன்:—பொய்! அவ்வளவு பெரிசு எண்டா?

சுப்பன்:—இல்லை. நீ சொன்ன ஆரஞ்சு பழத்தை உரிச்சு திங்க.

—எஸ். சோமநாத முதலியார்

கணவன்:—என் கண்ணே! தற்கால கஷ்ட நிலைமையை நீ நன்ருய் அறிந்திருக்கிருய். எங்குப் பார்த்தாலும் 'டிரேட்டிப்ரஷன்' என்ற சப்தம் உயர்ந்து கொண்டே வருகிறது. நம்முடைய வருமானமும் குறைந்து கொண்டே வருகிறது. ஆனபடியால் நாமும் நம்மா லியன்றவரை நம் குடும்பச் செலவைக் குறைக்க வேண்டும்.

மனையாள்:—ஆம், என் நாதா, இதை நான் முன்னறிந்தே உங்களுக்குக் காலையில் காப்பி தருவதை நிறுத்தி நீராகாரம் தருகிறேன். நானும் இரவில் வீட்டில் உட்கார்ந்து நேரப் போக்கிற்காகப் பத்திரிகைகளை வாசிப்பதனுல் மின்சார விளக்கின் 'பில்' அதிகரிக்கிறதென்றே நாடோறும் பேசும் படக்காட்சி பார்க்கப் போகிறேன்.

—சி. எம். சுந்தரம்

ஒரு துஷ்டப் பையன் ஒருநாள் தெருவில் ஓவென்று கத்திக்கொண்டு இருந்தான். அவனைப் பார்த்து ஒரு பெரியவர்:— ஏண்டா கழுதை மாதிரி கத்துகிருய்?

சிறுவன்:—கழுதை தன் இனத்தைப் பார்த்தால் கத்தாதா?

—மே. ஜானகிராமன்

* *

ஒரு கிராம வயோதிகனின் மனைவி 10 வயது பையனைவிட்டு இறந்து விட்டனள். அவ்வயோதிகன் அவளுக்குக் கருமாதி செய்ய பணம் இல்லாததால், அவள் வைத்துப்போன நகைகளை விற்று கருமாதி செய்தான். கருமாதி முடிந்ததும் பையன் கேட்கிருன்:

அப்பா! அம்மா செத்ததால்தானே நீ அவ நகையை வித்து கருமாதி செய்தே. அவ சாவாட்டி கருமாதி செய்ய, பணத்துக்கு என்ன பண்ணுவே?

—எஸ். சோமநாத முதலியார்

ஒருவர்:—என்னையா, முட்டைகளில் வியாதியை உண்டு பண்ணக் கூடிய பூச்சிகள் இருப்பதாக ஒரு டாக்டர் கண்டு பிடித்திருக்கிறாராமே; தெரிந்தும் ஏனையா முட்டையை வாங்கிக் கொண்டு போகிறீர்?

மற்றவர்:—போமையா போம். எந்த முட்டையில் பூச்சிகள் இருப்பதாக கண்டு பிடித்திருக்கிறார்? எருமுட்டையில்! அதைத்தான் தின்னப்படாது.

* * *

பிரபு:—(குடியானவனைப் பார்த்து) நீ இவ்வளவு நிலங்களை வைத்துக்கொண் டிருக்கிறாயே? உனக்கென்ன 'கவலை'யே இல்லை.

குடியானவன்—:ஆமாங்கோ. இம்மா நலத்துக்கும் 1 'கவலை' கூட இல்லை. எல்லாம் ஏத்தத்திலேயே இரைச்சி பயிரிடுகிறோம். எனக்கென்னாத்துக்கு, 'கவலை'

—P. முருகேசம்

* * *



தகப்பனார்:—நான் சொல்ரது தெரிதா?

மகன்:—தெரியலியே.

தகப்பனார்:—என்னடா! இவ்வளவு நாழி சொன்னேன் தெரியவில்லை என்கிறாயே ?

மகன்:— நீங்கள் சொன்னது தெரியவில்லை; ஆனால் கேட்டுது.

* * *

பாலு:—நேற்று லாட்டரி போட்டாயாமே. என்ன வந்தது?

சீனு:—யார்டா லாட்ரி போட்டது? எனக்கென்ன குறைவு?

* * *

வேலைக்காரன்:—எஜமான் தாம் வீட்டில் இல்லை என்பதாகச் சொல்லச் சொன்னார்.

வந்தவர்:—அப்படியானால் நான் வரவில்லை என்று அவரிடம் சொல்லி விடு.

—மே. ஜானகிராமன்.



பேராசை—பெரு நஷ்டம்

By Pandit S. S. Arunagirinathar

(All Rights Reserved By The Author)

சிறுவர்களே, நீங்கள் எந்தக் காலத்திலும் பேராசை உள்ளவர்களாய் இருக்கக்கூடாது. பேராசை உள்ளவர்கள் எந்தக் காலத்திலும் நன்மை அடையமாட்டார்கள். அவர்களுக்கு எப்போதும் துன்பமே உண்டாகும். இதற்கு உதாரணமாக ஒரு கதை சொல்லுகிறேன், கேளுங்கள்:

அநேக வருஷங்களுக்கு முன்னால் ஐயம்பட்டியில் ஓர் உலோபி இருந்தான். அவன் இடம் ஏராளமாகப் பணம் இருந்தது. இருந்தும் அவன் நல்ல சாப்பாடு சாப்பிடமாட்டான்; நல்ல துணிகளைக் கட்டமாட்டான்.

காலணா செலவு செய்வதாய் இருந்தாலும் அவன் கண்களில் இருந்து தண்ணீர் வடியும். அவன் ஒவ்வொரு நாளிலும் ஒரே ஒரு வேளைதான் சாப்பிடுவான். ஒரு வேளைக்கு மேல் மறுவேளை சாப்பிடுவது என்றால் அவனுக்கு உயிர் போய்விடுவதுபோல் இருக்கும். உயிர் போவதாய் இருந்தாலும் அவன் ஒருவருக்கும் ஓர் உதவியும் செய்ய மாட்டான். அதனால் எல்லோரும் அவனை உலோபி என்று அழைத்தார்கள்.

அந்த உலோபி இருந்த ஊரில் அவனைப் பார்க்கிலும் பணக்காரர்கள் வேறு ஒருவரும் இல்லை. அப்படி இருந்தும் அந்த உலோபி தன்னிடம்

இருக்கும் பணம் தனக்குப் போதாது என்று கவலைப்பட்டான். ஆகவே, எப்போதும் அவன் மனத்தில் சந்தோஷமென்பதே இருப்பது இல்லை. உண்பதும் உடுப்பதும் அவனுக்குச் சந்தோஷமாய் இருக்காது. எப்படியாவது பணத்தோடு பணத்தைச் சேர்ப்பதே அவனுக்குச் சந்தோஷமான காரியமாய் இருந்தது. அதனால் அவன் பணத்திற்குக் கஷ்டப்படுகிற ஏழைகளிடம் உள்ள ஆடுமாடுகளைக் குறைந்த விலைக்கு வாங்குவான்; அவைகளைச் சந்தைக்கு ஓட்டிக்கொண்டு போய் அங்கு வருகிற ஒன்றும் தெரியாத ஏழைகளுக்கு அதிக விலைக்கு விற்பான். அதனால் அவனுக்கு ஏராளமான ரூபாய்கள் தாராளமாய் இலாபமாக வந்தன. தான் ஆடுமாடுகளை விலைக்கு வாங்கும்போது பணத்தைக் கொடுத்துவிடுகிறோமே என்று அவன் பரிதவிப்பான். ஆனால் தான் ஆடுமாடுகளை அதிக விலைக்கு விற்கும்போது அதிக பணம் வருவதைக் கண்டு அவன் ஆனந்தப் படுவான். அவனுக்குப் பணமே தெய்வம்; பணமே உயிர்!

வழக்கம்போல் அந்த உலோபி விற்பதற்காக அநேகம் ஆடுமாடுகளை ஒரு நாள் ஒரு சந்தைக்கு ஓட்டிக்கொண்டு போனான். அன்றைக்கு அவனுடைய ஆடுமாடுகள் அதிக லாபத்திற்கு, ஒன்றும் பாக்கியில்லாமல், விற்றுப் போயிற்று. அதனால் அந்த உலோபிக்கு அதிக சந்தோஷம் உண்



டாயிற்று. ஆடுமாடுகள் எல்லாம் விற்பனையான பிறகு அந்த உலோபி தன் இடம் இருந்த ரூபாய்களை எல்லாம் எண்ணிப் பார்த்தான். சரியாக ஆயிரம் ரூபாய்கள் இருந்தன. ஆயிரம் ரூபாய்கள் அதிக கனமாய் இருக்கும். அதனால் அந்த உலோபி ஒரு வியாபாரியினிடம் அந்த ஆயிரம் ரூபாய்களையும் கொடுத்து அதற்குப் பதிலாகப் பத்து நூறு ரூபாய் நோட்டுகளை வாங்கிக்கொண்

டான். உடனே அவன் அவைகளைத் தன்னிடம் இருந்த ஒரு சிறிய தோல் பைக்குள் வைத்தான். பிறகு அவன் அந்தத் தோல்பையைத் தன் சட்டைப் பைக்குள் வைத்துக்கொண்டு தன் ஊரை நோக்கி நடந்தான். அப்போது மழைக்காலம். அதனால் நின்று நின்று அடிக்கடி மழை பெய்தது. உலோபியினிடம் குடை இல்லை. ஆகவே, மழை பெய்யும் போதெல்லாம் அவன் வழியில் வளர்ந்து இருக்கும் பெரிய மரங்களின் கீழ் மழை தன்மீது படாதபடி ஒதுங்கி நின்றான். பகல் பன்னிரண்டு மணி இருக்கும். அப்போது உலோபிக்குப் பசி எடுத்தது. தான் சந்தையில் அரையணா கொடுத்து அழுதுகொண்டே வாங்கிய ஒரு ரொட்டியை அவன் எடுத்தான்; அதில் பாதியைப் பிய்த்து 'அடுத்த வேளைக்கு ஆகும்' என்று தன்னுடைய சட்டைப் பைக்குள் வைத்துக்கொண்டான். மற்றப் பாதியை அவன் பிய்த்துப் பிய்த்து அங்கே இருந்த ஓர் ஓடையில் ஓடும் தண்ணீரில் நனைத்து நனைத்துத் தின்றான்.



பாதி ரொட்டியை அந்த உலோபி பிய்த்துப் பிய்த்துத் தண்ணீரில் நனைத்து நனைத்துத் தின்றபிறகு தன் வீட்டை நோக்கி நடந்தான். அன்று சாயந்திரம் ஆறு மணிக்கு அந்த லோபி தன் வீடு போய்ச் சேர்ந்தான். இதற்கு இடையில் எத்தனையோ தரம் மழை வந்தது. மழை வரும்போதெல்லாம் அந்த உலோபி அனேக மரங்களின் கீழ் ஒதுங்கி ஒதுங்கி நின்றான்.

தான் தன்னுடைய வீட்டிற்குப் போனவுடன் உலோபி தன் பணப் பையைக் கவனித்தான். அதைக் காணேம்! உலோபி போட்டுக்கொண்டு இருந்த சட்டை அநேக இடங்களில் கிழிந்திருந்தது. அந்தச் சட்டையில் இருந்த பைகளும் கிழிந்து இருந்தன. அதைக் கவனியாமல் அந்தப் பைகளில் ஒன்றில் உலோபி தன் பணப்பையை வைத்திருந்தான். ஆகவே உலோபி வரும்போது வழியில் அந்தப் பை எங்கேயோ தவறி விழுந்து விட்டது.

பணப் பையைக் காணேம்! ஆ! உலோபியின் மனம் கலங்கியது. "ஐயோ, என் பணப்பையைக் காணேமே! இனி நான் என்ன செய்வேன்? ஆ கடவுளே!' என்று சொல்லி அவன் தன் தலையில் அடித்துக்கொண்டான்; அழுதான்; தரையில் விழுந்து புரண்டான். அதனால் அவனுக்கு அதிக

துன்பம் உண்டாயிற்று. அவனுக்கு அவன் மனைவி எவ்வளவோ தேறுதல் சொன்னாள்; அவனுக்கு அவன் பிள்ளையும் எவ்வளவோ தேறுதல் சொன்னான்.



ஆனாலும் உலோபியின் மனம் சமாதானம் அடையவில்லை. அவன் அவர்களைப் பார்த்து, 'உங்களுக்கு என்ன தெரியும்! சம்பாதிக்கின்றவனாகிய எனக்கு அல்லவோ பணத்தின் அருமை தெரியும்', என்று சொல்லிக் கோபித்துக் கொண்டான். 'என்ன செய்யலாம்!' என்று உலோபி யோசித்தான். அவனுக்கு ஒன்றும் விளங்க வில்லை. அதனால் உலோபி காணமற்போன தன் ரூபாய்களை நினைத்து நினைத்து அழுதுகொண்டு இருந்தான்.

உலோபி ரூபாய்களை இழந்துவிட்ட சங்கதியை அவன் ஊரில் இருந்தவர்களும் அவனுடைய ஊருக்குப் பக்கத்து ஊரில் இருந்தவர்களும் அறிந்தார்கள். அவர்களில் அநேகர் அதற்காக இரக்கப்படவில்லை. உலோபியின் ஊருக்குப் பக்கத்து ஊரில் உலோபியின் சிநேகிதன் ஒருவன் இருந்தான். அவன் இந்தச்சங்கதியை எப்படியோ கேள்விப் பட்டான். உடனே அவன் உலோபியைப் போய்ப் பார்த்து, 'சிநேகிதனே, நீ வருத்தப் படாதே! நான் ஒரு வழி சொல்லுகிறேன்: நான் சொல்லுகிறபடி நீ செய், உடனே நீ தொலைத்துவிட்ட ரூபாய்கள் உன்னிடம் வந்து சேரும்,' என்று சொன்னான்.

'ரூபாய்கள் வரும்,' என்னும் வார்த்தைகளைக் கேட்டவுடன் உலோபியின் வருத்தமெல்லாம் பறந்து போயிற்று. சந்தோஷத்தினால் உலோபி எழுந்து குதித்தான்; கூத்தாடினான். பிறகு அந்த உலோபி தன் சிநேகிதனைப் பார்த்து, 'நண்பனே, நீ என்னுடைய நல்ல சிநேகிதன் அல்லவா? நீயும் என்னைப்போலத்தானே பணத்தைச் சம்பாதிக்கின்றாய்! அதனால் உனக்குத்தான் பணத்தை இழந்ததால் எனக்கு உண்டான கஷ்டம் நன்றாய்த் தெரியும்! மற்றவர்களுக்கு என்ன தெரியும்! காணமற்போன என் ரூபாய்கள் மறுபடியும் என்னிடம் எப்படி வரும்? சொல்லு-சொல்லு,' என்று அவசரமாகக் கேட்டான்.

உடனே உலோபியின் சிநேகிதன், 'நான் சொல்வதைக் கேள்: நீ இந்தக் கிராமத்தில் உள்ள மணியக்காரர் இடம் சொல்லி, இந்தக் கிராமத்தில் தமுக்கு அடிக்கும் தோட்டியைக் கூப்பிட வேண்டும். அந்தத் தோட்டியைச் சந்தையில் இருந்து நீ வந்த வழியில் இருக்கும் கிராமங்களுக்குப் போகச் செய்ய வேண்டும். போய் அவன் அங்கே என்ன செய்ய வேண்டும் தெரியுமா? அவன்

அந்தக் கிராமங்களில், உன்னிடம் இருந்து காணமற்போன பணப்பையை யாராவது கண்டெடுத்து உன்னிடம் கொண்டுவந்து கொடுத்தால், நீ அவர்களுக்கு ஐம்பது ரூபாய் இனம் கொடுக்கத் தயாராய் இருப்பதாகத் தமுக்கு போடவேண்டும். நீ வந்த வழியில் உள்ள கிராம வாசிகள் மிகவும் நல்லவர்கள். அவர்களில் யாராவது ஒரு குடியானவன் உன்னுடைய பணப்பையை வழியில் கண்டெடுத்து இருக்கலாம். அது இன்னொருடையது என்று தெரியாமையினால் அதை அவன் தன்னிடத்திலேயே வைத்துக்கொண்டு இருக்கலாம். அவன் தமுக்குப்போட்டுத் தோட்டி சொல்லும் வார்த்தைகளைக் கேட்டவுடன் பணப்பையை எடுத்துக்கொண்டு உன்னிடம் ஓடி வரலாம். இதுதான் உன் பணம் உன்னிடம் வருவதற்குச் சரியான வழியாகும். வேறு எந்த வழியும் உன் பணம் உன்னிடம் வருவதற்குப் பிரயோசனப்படாது. ஆகையால் நான் சொன்னபடி நீ உடனே செய்,' என்று சொன்னான்.

தன் சினேகிதன் சொன்ன வார்த்தைகளைக் கேட்டவுடன் உலோபி அவனைப் பார்த்து, 'சினேகிதனே, வழியில் கண்டு எடுக்கும் பணத்தை அதன் சொந்தக்காரர்கள் இடம் கொண்டுபோய்க் கொடுக்கிறவர்களும் இந்தக் காலத்தில் இருக்கிறார்களா?' என்று கேட்டான்.

'ஏன் இல்லாமல்! இந்தக்காலத்திலும் எத்தனையோ நல்ல மனிதர்கள் இருக்கிறார்கள். எல்லோரும் நம்மைப்போலவே இருப்பார்கள் என்று நாம் நினைத்து விடலாமா? சினேகிதனே, வீணாக நீ ஆலோசிக்காமல் சீக்கிரம் நான் சொன்னபடி செய், உனக்கு நன்மை உண்டாகும்,' என்று சொல்லிவிட்டு உலோபியின் சிநேகிதன் தன் வீட்டிற்குப் போய்விட்டான்.

அவன் போனபிறகு 'அவன் சொன்னபடியே செய்வதுதான் நல்லது' என்று உலோபி தீர்மானித்தான். உடனே அவன் மணியக்காரர் மூலம் தமுக்குப்போடும் தோட்டியை வரவழைத்தான். அவன் இடம், தன் சினேகிதன் சொன்னபடி, அவன் செய்யவேண்டிய வேலைகளை யெல்லாம் உலோபி சொன்னான். உலோபியின் இஷ்டப்படி நடப்பதாகத் தோட்டி ஒப்புக் கொண்டான். ஆனால், தான் அப்படிச் செய்வதற்காகத் தனக்கு அரை ரூபாய் கொடுக்கவேண்டும் என்று தோட்டி சொன்னான். 'அரை ரூபாய்' என்ற வார்த்தையைக் கேட்டவுடன், உலோபி திடுக்கிட்டுப் போனான், உடனே அவன், 'அரை ரூபா! அரை ரூபா!! இந்தக்காலத்தில் யார் இடத்தில் அரை ரூபாய் இருக்கிறது,' என்று சொன்னான். பிறகு அவன் தோட்டியைப் பார்த்து, 'அரை ரூபாய் என்னிடத்தில் இல்லை. உனக்காக வேண்டுமானால் நான் ஓர் அணா தருகிறேன். அதற்குமேல் அரைக்காசுகூட என்னால் தாமுடியாது. என்ன சொல்லுகிறாய்?' என்று கேட்டான்.

'ஓர் அணாவை வாங்கிக்கொண்டு அந்த வேலையைச் செய்ய ஒரு தோட்டியும் வரமாட்டான்,' என்று சொல்லிக் கொண்டே அந்தத் தோட்டி போய் விட்டான்.

அவன் போனபிறகு உலோபி என்ன செய்யலாம் என்று யோசித்தான். 'தமுக்கு இல்லாவிட்டால் என்ன? தமுக்கு இல்லாமலே எல்லாச் சங்கதிகளையும் எல்லாக் கிராமங்களிலும் யார் வேண்டுமானாலும் சொல்லிவிட்டு வரலாமே,' என்று அவன் எண்ணினான். 'தமுக்கு இல்லாமலே எல்லாச் சங்

கதிகளையும் எல்லாக் கிராமங்களிலும் சொல்லிவிட்டுவர யாரை அனுப்பலாம்" என்று என்று அவன் யோசித்தான். அப்போது தன்னுடைய மகனே அந்த வேலைக்குத் தகுதியானவன் என்று அவன் தீர்மானித்தான்.

'ஆம்; என்னுடைய மகனை அந்த வேலைக்கு அனுப்பினால்தான் எனக்கு அரை அணாகூட செலவாகாது. அது மட்டுமல்ல, அவன் போனால் எல்லாச் சங்கதிகளையும் அக்கரையாக எல்லோருக்கும் நன்றாய் விளங்கும்படி சொல்லி விட்டு வருவான். ஆகையால் அந்த வேலைக்கு அவனையே அனுப்பவேண்டும்," என்று உலோபி தனக்குள் தீர்மானித்துக் கொண்டான்.

உடனே உலோபி தன் மகனைக் கூப்பிட்டு அவன் இடம் தன் தீர்மானத்தைப் பற்றிச் சொன்னான். உலோபியின் இஷ்டப்படி நடக்க உலோபியின் பிள்ளை ஒப்புக்கொண்டான்.

பிறகு உலோபியின் பிள்ளை தன் தகப்பன் இஷ்டப்படியே எல்லாக் கிராமங்களுக்கும் போனான். போய், தன்தகப்பனார் இன்னார்என்றும், தன்தகப்பனார் இடம் இருந்து நூறு ரூபாய் கோட்டுகள் அடங்கிய ஒரு தோல்பை எங்கேயோ தவறிவிழுந்துவிட்டது என்றும், யாராவது கண்டெடுத்து அதை தன் தகப்பனார் இடம் கொண்டுவந்து கொடுத்தால் அவருக்குத் தன் தகப்பனார் ஐம்பதுரூபாயினும் கொடுப்பார் என்றும் எல்லோருக்கும் தெரியும்படி கூச்சல் இட்டுச் சொன்னான்.



கிராம வாசிகள் எல்லோரும் அவன் சொன்ன விஷயத்தை நன்றாய் அறிந்தார்கள்.

பிறகு உலோபியின் பிள்ளை தன் வீடுபோய்ச் சேர்ந்தான். தான் எல்லா விஷயங்களையும் நன்றாய்ச் செய்துவிட்டு வந்ததாக அவன் தன் தகப்பனாகிய உலோபியின் இடம் சொன்னான். அதைக் கேட்டு அந்த உலோபி அதிக சந்தோஷப் பட்டான். பிறகு இரண்டு நாட்கள் சென்றன.

ஒரு நாள் காலையில் ஒரு குடியானவன் உலோபியை வந்து பார்த்தான். அந்தக் குடியானவன் கையில் ஒரு தோல் பை இருந்தது. அந்தப் பையை அந்தக் குடியானவன் உலோபியின் இடம் கொடுத்து, 'இதைப் பாரும். இது உமது பணப்பை தானா? இதை நான் வழியில் கண்டு எடுத்தேன்,' என்று சொன்னான்.

பணப் பையைக் கண்டவுடன் உலோபிக்கு அளவில்லாத ஆனந்தம் உண்டாயிற்று. இருந்தாலும் தனக்கு உண்டான ஆனந்தத்தை அவன் வெளியில்

காட்டிக் கொள்ளவில்லை. 'இது என்னுடைய பணப்பைதான்,' என்று சொல்லிக் கொண்டே உலோபி பணப்பையைத் திறந்து பார்த்தான். அதற்குள் சரியாகப் பத்து நூறு ரூபாய் நோட்டுகள் இருப்பதை அவன் கண்டான். 'சரி' என்று சொல்லி அவன் அவைகளைப் பத்திரமாகத் தன்னிடம் வைத்துக் கொண்டான். ஆனால், தான் சொன்னபடி இப்போது ஐம்பது ரூபாய்களை வெகுமதியாகக் கொடுக்க அந்த உலோபி இஷ்டப்படவில்லை. 'ஒன்றும் கொடுக்காமல் குடியானவனை அனுப்பிவிடுவதற்கு வழிஎன்ன?' என்று உலோபி நினைத்தான்.



அப்போது குடியானவன் உலோபியைப் பார்த்து, 'வெகுமதி எங்கே?' என்று கேட்டான்.

'வெகுமதியா? இன்னுமா உனக்கு வெகுமதி வேண்டும். பேசாமல் போய்விடு. இல்லாவிட்டால் 'போலீசு'க்காரர்களை வரவழைத்து அவர்கள் இடம் உன்னைப் பிடித்துக் கொடுத்துவிடுவேன்,' என்று உலோபி சொன்னான்.

'ஏன்? எதற்காக?' என்று குடியானவன் கேட்டான்.

உடனே உலோபி குடியானவனைப் பார்த்து, 'நான் என் பணப்பையில் பதினொரு நூறு ரூபாய் நோட்டுகள் வைத்திருந்தேன். ஆனால் இப்போது அதில் பத்து நூறு ரூபாய் நோட்டுகளே இருக்கின்றன. ஒரு நூறு ரூபாய் நோட்டை நீ என் உத்தரவில்லாமலே எடுத்துக் கொண்டாய். இன்னும் நீ வெகுமதி கேட்பது அநியாயம்! ஆகையால் நீ உடனே இங்கே இருந்து ஓடிவிடு,' என்று சொல்லி மிரட்டினான்.

உடனே குடியானவன் நியாயாதிபதியினிடம் போனான். போய் எல்லா விஷயங்களையும் அவன் நன்றாய்ச் சொல்லி நியாயாதிபதியினிடம் உலோபியின் மீது வழக்குத் தொடுத்தான்.

நியாயாதிபதி உலோபியை வரவழைத்து விசாரித்தார். உலோபி நியாயாதிபதியைப் பார்த்து, 'எஜமானே, நான் அந்தப் பணப்பையில் பதினொரு நூறு ரூபாய் நோட்டுகள் வைத்து இருந்தேன். இப்போது அந்தப் பணப்பையில் பத்து நூறு ரூபாய் நோட்டுகளே இருக்கின்றன. இந்தக் குடியானவன் ஒரு நூறு ரூபாய் நோட்டை எனக்குச் சொல்லாமலே எடுத்துக்கொண்டான். ஆகவே இன்னும் எதற்காக நான் இவனுக்கு வெகுமதி கொடுக்கவேண்டும்? இனி நான் இவனுக்கு ஒன்றும் கொடுக்க மாட்டேன்,' என்று பொய் சொன்னான்.

உலோபி சொல்வது 'பொய்' என்று நியாயாதிபதிக்கு நன்ருய் விளங்கி விட்டது. அதனல் நியாயாதிபதி உலோபியைப் பார்த்து, 'நீ சொல்லுகிறபடி குடியானவன் ஒரு நூறு ரூபாய் நோட்டை எடுத்துக் கொண்டு இருப்பான் என்று நான் சொல்லமாட்டேன். அவன் நல்லவன் என்று தெரிகிறது. அவன் நல்லவனுய் இல்லாவிட்டால் எல்லா நோட்டு களையும் அவனே எடுத்துக் கொண்டிருப்பான் அல்லவா? நீயோ காணமற்போன உன்னுடைய பையில் பதிஞேரு நூறுரூபாய் நோட்டுகள் இருந்ததாகச் சொல்லுகிருய். நீ சொல்வதும் உண்மையாய் இருக்கும் என்றே நான் நம்புகிறேன். குடியானவனே தான் கண்டெடுத்த பையில் பத்து நூறு ரூபா நோட்டுக்களே இருந்தது என்று சொல்லுகிருன். அவன் சொல்வதும் உண்மை என்றே நான் நம்புகிறேன். ஆகவே குடியானவன் கண்டெடுத்த பை உன்னுடைய பணப்பையாய் இருக்க முடியாது. அதனல் நீ அந்த பணப் பையையும் பத்து நூறு ரூபாய் நோட்டு களையும் குடியானவன் இடம் கொடுத்துவிடு. பதிஞேரு நூறு ரூபாய் நோட்டுகள் உள்ள உன் பணப் பையை நீ தேடிக்கொண்டு போ,' என்று சொன்ஞர். இந்த வார்த்தைகளேக் கேட்டவுடன் உலோபி திடுக்கிட்டுப் போனன்.



உடனே அவர் உலோபியின் இடம் இருந்த பணப்பையையும் பத்து நூறுரூபாய் நோட்டுகளேயும் வாங்கிக் குடியானவன் இடம் கொடுத்தார். பிறகு நியாயாதிபதி குடியானவனேப் பார்த்து, 'நல்ல குணமுள்ள குடியானவனே! நீ யோக்கியன். நான் உன்னிடம் கொடுத்த ஆயிரம் ரூபாய்களுக்கும் இனிமேல் நீயே சொந்தக்காரன். இனி அதற்கு வேறு சொந்தக்காரர்கள் ஒருவரும் இல்லை. கடவுள் உன் நல்ல குணத்திற்காக உனக்கு அதைக் கொடுத்தார். ஆகவே, நீயே அதை எடுத்துக் கொள். நீ உன் வீட்டிற்குப் போ,' என்று சொன்ஞர்.

குடியானவன் சந்தோஷத்தோடு நியாயாதிபதியை வணங்கி விட்டுப் பணத்தோடு தன் வீடுபோய்ச் சேர்ந்தான்.

உலோபியோ அழுதுகொண்டே தன் வீடுபோய்ச் சேர்ந்தான். பேராசை பெரு நஷ்டம் அல்லவா?



'தமிழர்'சை ஆதரியுங்கள்

[இந்தியன்]

நம் தமிழ் நாட்டில் பத்திரிகைகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருவது தேச நன்மையையே குறித்துக் காட்டும். பத்திரிகைகள் மக்களைச் சீர்திருந்த வைக்கும் அரிய கருவிகள்; மக்கள் மனோ நிலையை எடுத்துக் காட்டும் பிரதி பிம்பங்கள். பத்திரிகைகளின் கொள்கையைக் கொண்டுதான் மக்கள் மனோ நிலை திரும்பும். தமிழ் நாட்டின் பத்திரிகையெனில், முக்கியமாகச் செந்தமிழ் நடையுடன் வீரச் சுவையுடன் மிளிர்வதே காலத்திற்கும், மக்கள் தம் நிலைமைக்கும் ஒத்ததாகும். பத்திரிகைகளின் நோக்கும் போக்கும் கொள்கைகளும் உன்னத நிலைமையி லிருந்தால், மக்களின் மனோ நிலைமையும் உன்னத நிலைமை யடையும். ஆதலின், பொதுஜன ஆசிரியர்க ளென்னும் உன்னத நிலைமையிலுள்ள பத்திராசிரியர்கள் தத்தம் கொள்கைகள் மக்கள் உயர்விற் குகந்தது தானோ? தத்தம் நோக்கும் போக்கும் மக்களை வீர நினைவிற் கிழுக்கிறதா? அல்லது படுகுழியில் ஆழ்த்து கின்றதா? என எண்ணி எண்ணிப் பார்த்தல் பெரிதும் அவசியமாகும்.

பத்திரிகைகளின் கொள்கைகளும் போக்கும் ஒத்திருத்தல் நலமாகும். அதுவன்றி சொல்வதொன்று செய்வதொன்றானால் 'உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவதையே' யொக்கும். சீரிய கொள்கைகளைச் சில பொன் நாணயங்களுக்காகச் சூறையாடுவது இழுக்காகும். சென்ற 3 வருடங்களுக்கு முன் 'ஹிந்து' பத்திரிகைக்கும் 'ஸ்வாராஜ்யா' பத்திரிகைக்கும் சற்று வாக்குவாதம் நடந்தது. 'ஹிந்து' பத்திரிகையோ தேசிய விஷயங்களில் முன்னணியில் நிற்பதாக வீறுபேசுகிறது. எல்லாவித காங்கிரஸ் பஹிஷ்காரங்களையும் ஆதரித்து நிற்கிறது. அன்னிய சாமான்களை ஈவிரக்கமின்றி பஹிஷ

கரித்துத் தள்ளவேண்டுமென்று தலையங்கத்தில் ஆசிரியர் கிறுக்கித் தள்ளுகிறார். ஆனால் அன்னியர் நடத்தும் கம்பெனிகளின் பணமே விளம்பரங்களின் மூலம் இப்பத்திரிகைக்குச் சேருகிறது. அன்னிய விஸ்கி, பிராண்டியின் விளம்பரத்தைப் பார்க்குமளவில் ஒரு கையால் விஸ்கியைப் பிடித்துக்கொண்டே மற்றோர் கையால் நாட்டுச் சாராயம் குடிப்பவனை வேண்டாமென்று நிறுத்தப்போவதுபோ லல்லவோ காண்கிறது? இது சொல்வதொன்று, செய்வதொன் றல்லாமல் வேறென்ன? பணத்திற்காகவே சீரிய கொள்கைகளைச் சூறையாடலாமோ?

இப்போது தமிழ்ப் பத்திரிகைகளின் நோக்கும் போக்கும் விபரீதமானதா யிருக்கிறது. காலஞ்சென்ற பேராசிரியர் வரகவி ஸி. சுப்ரமண்ய பாரதியாரைப் போன்றவர்கள் இப்போது எழுந்து வந்தாலும், தமிழ் நாட்டுப் பத்திரிகைகள் அடைந்துள்ள முன்னேற்றத்தை (?) குறித்துத் திடுக்கிட வேண்டியதே யாகும். அந்த 'விகடன்' என்ற பதத்தை எவன்தான் முதன் முதலில் கண்டு பிடித்தானோ தெரியவில்லை. இப்பதத்தை அகராதியிலுள்ள எத்தனை வார்த்தைகளுடன் சேர்க்க இயலுமோ அத்தனை நாமதேயங்களுடன் பத்திரிகைகள் கிளம்பிக்கொண் டிருக்கின்றன. உலகமே விகடமயம் என்கின்றனர். விகடமும் நகைச் சுவையும் மனிதனுக்கு இன்றியமையாததுதான். எனினும் இதற்காகவே மனிதனின் முன்னேற்றத்திற்கு இன்றியமையாத ஆழ்ந்த கொள்கைகளைக் காற்றில் பறக்க விடுவது பத்திரிகா தர்மமாகாது. ஆழ்ந்த கருத்துக்களை ஆழ்ந்து சிந்திக்கும் வண்ணம் சொல்ல வேண்டுமே யல்லது அதை விகட பாஷைக்கே இறக்கித் தள்ளுவது மேன்மையானதல்ல. மேலும் பாமர மக்களுடைய மனத்தில் பணப்பேய் நுழையும்படிச் செய்து, அவரவர்கள் போட்டி போட்டு ஏங்கித் தவிக்குமாறு செய்தலும் அழகல்ல. கிண்டிப் பந்தயத்திற்கும் இந்தப் போட்டிப் பந்தயத்திற்கும் வித்தியாசமே யில்லை. பத்திரிகைகளை வாசித்த பின் ஜாக்கிரதையுடன் வைத்திருப்பது போகக் கூப்பனுக்காக ஒருவனே பல பத்திரிகைப் பிரதிகளை வாங்கி, கூப்பன்களைக் கிழித்து எடுத்துக் கொண்டு பிரதிகளைக் குப்பைத் தொட்டியில்தான் வீசி எறிகிறான்.

லாட்டரிப் பத்திரிகைகளைப்பற்றி எவ்வளவு எழுதினாலென்ன? தெரியாத மூடனுக்குத் தெரிய வைக்கலாம். ஆனால் உலக தர்மத்தை நன்கறிந்து உலகிற்கே நல்லுபதேசம் செய்யக் கிளம்பியுள்ள அறிவாளிகளுக்கு இது வேண்டாம், அது வேண்டாம் என்று சொல்ல முடியாது. தங்களிடமுள்ள ஊழல் கொள்கைகளை வெளியில் அவர்கள் சொல்ல முன் வராவிட்டாலும், அவர்களுடைய மனச்சாட்சியே சொல்லுமன்றோ?

நமது 'தமிழரசு' இத்தகைய சுழல்களுக் கிடையே அகப் படாதது கண்டு அகமகிழ்கிறேன். தமிழ் நாட்டில்—தமிழர் மனத்தில் தமிழ் அணங்கு அரசு செலுத்த வேண்டுமென்பதே நமது உள்ளக் கிடக்கை. 'தமிழரசு' சீரிய கொள்கைகளுடன் நாட்டுப்பணி செய்ய தமிழர் அனைவரும் உதவுதல் அவசியம். இனி 'தமிழரசு' இன்னும் நல்ல முறையில் செந்தமிழ் நடையில் சீர்திருத்தக் கொள்கைகள் மிளிரும் கட்டுரைகளுடனும், வீரச்சுவை ததும்பும் வியாசங்களுடனும், வழக்கம்போல் நகைச்சுவை தவறாமலும் வெளிவரும். 'தமிழரசு' நிலைத்து நின்று தமிழ் அரசும் இப்புவிதனில் செழித்தோங்குமாறு செய்வது தமிழ் மக்கள் கடன். 'தமிழரசு' வாழ்க! தமிழ் அணங்கு புன்னகையுடன் திகழ்க! தமிழ் மணம் நாடெங்கணும் கமழ்க! தமிழர் முன்னேற்ற மடைக! செந்தமிழும் வீரச் சுவையுடன் திக்கெட்டிலும் முரசொலிக்க!! நன்றாய் வாழ்க!!!

கணித உபாத்தியாயர்:—சுப்பா! இந்தக் கணக்கைப் போட ஓர் வழி இருக்கிறது. உனக்குத் தெரியுமா?



சுப்பன் :—தெரியும் சார்.

க. உ.:-அதைச் சொல்.

சுப்பன்:—அடுத்தவனைப் பார்த்து எழுதுவது.

—எம். ஏ. எம். டி.

வெற்றி யுனக்குண்டு நெஞ்சே!—வீர
சக்தி விளங்குருள் அஞ்சேல்!
சுற்றிலும் பாரருட் சோதி!—யன்னை
தொல்லுலகிற் கவளாதி.

மீனாவின் காதல்

[கணேசன்]

கமலசேகரன் கமலபுரத்தரசன். வீரத்திற் சிறந்தவன். நல்ல குணத்தன். பரந்த நோக்கமும் சிறந்த அறிவு முடையோன். மகா தேசாபிமானி. கமலசேகரனுக்கு ஓர் அழகிய புதல்வி உண்டு. அவளது பெயர் மீனா.

மீனாவுக்கு வயது பதினெட்டு. கருமேகம் போன்ற கூந்தல். சந்திரனைப் பழிக்கும் சுந்தரமுகம். சேல்களைப் பழிக்கும் விழிவேல்கள். கோவைக் கனியை யொத்த செங்கனிவாய். முத்தனைய பற்கள். குயிலைப் பழிக்குங் குரல்.

கமலனுக்குத் தன் குமரியைப் பவழபுரியிலிருக்கும் அரசனுடைய புத்திரனுக்கு மணம் செய்து கொடுக்கவேண்டுமென்று விருப்பம் அதிகம். ஆயினும் மீனா அதற்கிணங்கினாளில்லை. ஏன்? அவள் சிம்மத்தீவின் தலைவனாம் சுந்தரனைக் காதலித்தாள். நாளடைவில் கமலனும் இவர்களுடைய காதலை அறிந்தான். சின்னாள் பொறுத்திருந்தான். அடிக்கடி மீனாவும், சுந்தரனும் இரகசியமாக அரண்மனையின் நந்தவனத்தில் சந்திக்கின்றார்கள் என்பதை ஒற்றர்கள் மூலமாய்த் தெரிந்து கொண்டான் கமலன். ஓர் நாள் அவன் மீனாவை அழைத்து 'மீனா! நீ சிம்மத்தீவு தலைவனை நேசித்தல் கூடாது. அவனும் நின்னைக் காதலிக்கக் கூடாது. நின் அன்பன் சிம்மத்தீவினின்று நம் நகரத்திற்கு எக்காரணங்கொண்டும் வரலாகாதெனக் கட்டளையிட்டுள்ளேன். கட்டளையை அவன் மீறினால் அன்றே அவன் சிரத்தை யிழப்பான்' என்று சினந்து கூறினான். இதனைச் செவியுற்றதும் மீனாவின் கண்களினின்று நீர்த்துளிகள் விழுந்தன. சிறிது



நேரம் தன் தந்தையை நோக்கினள். பின்னர் அவள், 'அன்பு மிக்க தந்தையே! சுந்தரர் மீது தங்களுக்கு ஏன் அவ்வளவு வெறுப்பு? குணத்திற் கெட்டவரோ, சௌரியத்தில் குறைந்தவரோ! நான் அவரைக் கட்டாயம் மறக்க முடியாது. நான் அவரை மணந்தே தீருவேன்' என்று உறுதியுடன் கூறினள்.

கமலனது கண்களில் கோபாக்னி கொழுந்துவிட் டெழுந்தது. 'ஏடி! மீனு! தந்தைக்குமுன் எதிர்வார்த்தை பேச யாரிடம் நீ கற்றனை. நன்று! நன்று! நீ காதலிக்கும் சுந்தரனது பாட்டன், என் மூத்த சகோதரனை அவன் தீவிற்கு வரவழைத்து வஞ்சகமாகக் கொன்றான். அத்தகைய துரோகியின் பேரனுக்கோ நின்னை யான் கொடுப்பது. ஒருக்காலும் முடியாது' என்று கமலன் பிடிவாத மனத்துடன் சொன்னன்.

மீனு:—தந்தையே! என் அன்பர் பாட்டனர்தானே அச்செய்கையைச் செய்தார். அப்பழி எப்படி என் அன்பரைச் சேரும். அவரைத் தாங்கள் நோவது நல்லதல்ல.

கமலன்:—ஓ! நீ எனக்குப் புத்தி கற்பிக்கின்றாய் போல் இருக்கின்றதே! மீனு! நான் உரைப்பதைச் சற்றுகேள். நீ அவசியம் பவழபுரி அரசனது குமரன் சுகந்தனை மணத்தல் வேண்டும். அடுத்த வெள்ளி யன்று திருமணம்.

தன் தந்தை உரைத்தபடியே செய்வார் என்று அறிந்தாள் மீனு. மனத்தில் அடக்கொணு துன்பங் கொண்டாள். என்ன செய்வது என்று அறியாது தவித்தாள். நாட்கள் ஒவ்வொன்றாய்க்கழிய ஆரம்பித்தன. இன்னும் திருமணத்திற்கு இரண்டு நாட்களேயுள. அரண்மனை முழுதும் ஒரே ஆர்ப்பாட்டம். எங்கும் களியாட்டம் மீனு தன் இனிய தோழியாம் கமலினியை நோக்கி, 'அடி கமலினி நீ என்பால் வரம்பிலா நேசமும் அன்புமுடையை யாதலின் நின்னை ஒன்று யான் கேட்பேன். நீ அது செய்திடல் வேண்டும்.

தோழி:—அம்மையே! அப்படியே செய்வேன்.

மீனா:—நீ இன்றிரவு ஆணுடை தரித்து என் அன்பர் தீவை அடைந்து இக்கடிதத்தை அவர் கரத்தில் சேர்ப்பி. நாளை வியாழன் அல்லவா தோழி! நான் நாளை இரவு பத்து மணிக்கு வடக்கு வாயிலில் இரண்டு குதிரைகளுடன் காத்திருப்பன் என்று கூறு.

தோழியும் விடைபெற்றுக் கொண்டு வினையை முடிக்க விரைந்து சென்றாள்.

வியாழன். இரவு மணி பத்து. வஞ்சகர் தம் நெஞ்சம் போல் நீலவானம் இருண்டு கிடந்தது. வானத்தில், கார்மேகங்களும் சூல் கொண்டு அடிக்கடி அண்டம் விண்டு போகுமாறு பெருத்த இடி முழக்கம் செய்து குமுறிக்கொண் டிருந்தன. மின்னல்கள் அடிக்கடி பளீர் பளீரென விரிந்தன. சிறிது நேரத்திற்குள் மழையும் பிரளய காலத்தைப்போல் வருஷிக்கத் தொடங்கியது. ஊதல்காற்று விர் விர் என்று வீசியது. சண்டமாருதமோ வென எழுந்த புயற்காற்று கானகத்திலுள்ள நீண்ட மரங்களை யெல்லாம் நெட்டிச் சாய்த்துக்கொண் டிருந்தது. தெள்ளிய நீருடன் சலசலவென ஓடிக்கொண்டிருந்த நீரோடைகள் காணாறுகள் யாவும் கலங்கிக் கரைபுரண்டோடி, நீண்ட மரங்களையும் பாறைகளையும் உருட்டிக்கொண்டு நீரை வாரியிறைத்த வண்ணம், வெகு வேகத்துடன் பாய்ந்து வந்தன. ஆந்தைகள் வீறிட் டலறின. கமலபுரத்தின் கீழ்ப் பாகத்தில் இருந்த கடல் கொந்தளிக்க ஆரம்பித்தது. அலைகள் மலைபோ லெழுந்தன.

இத்தகைய நிலைமையில் கமல புரத்தின் அரண்மனையின் வடவாயிலினின்று இரண்டு அசுவங்கள் வெகு வேகத்துடன் கடற் கரையை நோக்கிச் சென்றுகொண் டிருந்தன. ஒன்றில் சுந்தரனும், மற்றொன்றில் மீனாவும் ஆரோகணித் திருந்தார்கள். இருவர்களுடைய

உடைகளும் நன்றாய் நனைந்துவிட்டன. சுந்தரன், 'மீனா! அன்பிற் கினியவளே! நீ என்மேல் வைத்த அன்புதான் என்னே! உன் அங்

கங்களெல்லாம் ஆவேசங் கொண்டவளைப்போல் வெட வெடவென் ருடுகின்றனவே! கண்ணே! அருகில் வா. இன்னும் சிறிது நேரத்திற்குள் யாம் கடற்கரையை அடைவோம். அங்கிருந்து நாம் நம் தீவை அடைவோம். நமக்கு ஈசன் அருள் புரிவார்' என்று மீனுவைப் பார்த்து கூறினுன்.

திடீரென்று குதிரைகளின் காலடி சப்தங்கள் இருவர்களுடைய காதுகளில் கேட்டன. மீனு திடுக்கிட்டாள். தன் காதலனை நோக்குகிருள். 'காதலரே! என் தந்தையும் அவருடைய சேவகர்களும் நம்மைப் பின்பற்றுகிருர்கள்போல் இருக்கிறதே! என்ன செய்வோம். விரைவாக விடுங்கள் குதிரைகளை. அப்படி என் தந்தை தங்களைப் பிடித்துத் தங்கள் சிரசைக் கொய்வாரேல், அந்த நிமிடமே தங்களுடன் யானும் ஆவிதுறப்பேன்' என்ற வார்த்தைகள் மீனுவின் மணிவாயினின்றும் பிறந்தன. சுந்தரான் தன்பால் மீனு கொண்ட காதலை எண்ணி எண்ணி மனங் கரைந்தான். சில நிமிடங்கள் சென்றன. கடற்கரையிற் ஓர் குடிசை. அதிலோர் படகோட்டி. சுந்தரான் குடிசையை யணுகி, படகோட்டியை நோக்கி, 'எடா, நின் ஓடமதில் எங்களை ஏற்றி அதோ தெரியும் சிம்மத்தீவில் விடுவையேல் நினக்கு யான் நூறு பொன் தருவேன். விடு, விடு, சிறிதும் தயங்கேல்' என்று அவசரத்துடன் கூறினுன் சுந்தரான்.



படகு ஓட்டிச் சுந்தரானைப் பார்க்கின்ருன், மீனுவையும் பார்க்கின்ருன். 'ஐயா! இப் பெரு மழையில் இக் கொந்தளிக்கும் கடலைக் கடந்து சிம்மத்தீவிற்குச் செல்லப் பிரயத்தனப்படும் தாங்கள்யாரோ! இந் நங்கை யாரோ! யான் அறியலாமோ! என்று வினவினுன் ஓடக்காரன்.

சுந்தரான்:—இப்பொழுது என்னுல் ஒன்றும் பேச முடியாது காலதாமதப் படுத்தாதே. சுருங்கச் சொல்வேன் கேள். யான் சிம்மத்தீவின் தலைவன். இந் நாரீமணி கமலபுரத்தரசன் புத்திரி. நாங்கள் இருவரும் அரண்மனையைவிட்டு இரகசியமாக ஓடி வந்து

விட்டோம். எங்களைக் கமலபுரத் தாசனும், சேவகர்களும் பின் பற்றுகின்றார்கள். அவர்கள் வந்துவிடுவார்களே யானால் நான் உயிரை இழக்க நேரிடும். நங்கையும் ஆவி துறப்பாள். அதனைக் கண்டு அவள் தந்தையும் ஒருவேளை உயிர்துறக்கலாம். சீக்கிரம் படவை விடு! விடு!

இதைக் கேட்டான் படகோட்டி. ஒன்றும் பேசாது படகை விட ஆரம்பித்தான். படகு கடல் நீரைக் கிழித்துக்கொண்டு செல்லத் தொடங்கியது. திடீரென ஓர் பக்கம் படகு சாயும். அச்சமயம் மீனா சுந்தரனை இறுக அணைப்பாள். மறு நிமிடமே படகு மற்றொரு பக்கம் சாயும். அலைகள் மலைபோ லெழும்பிப் படகை நிலை குலையுமாறு செய்துவிட்டன. இந்தச் சமயத்தில் கமலனும் அவன் சேவகர்களும் கடற்கரையை வந்து அடைந்தனர். மீனாவும் சுந்தரனும் படகில் செல்வதைக் கண்ணுற்றான் கமலன். 'என் கண்ணே! மீனா! ஓடிவா! நின் காதலனுக்கே யான் நின்னை மணம் செய்து தருகின்றேன்' என்று பரிதாபம் நிறைந்த குரலுடன் அழைத்தான். காற்றில் கலந்தது சப்தம். அது மீனாவின் காதுகளுக்குப் போனதோ, இல்லையோ அதை யாம் அறியோம். மீனாவும் தன் தந்தையைப் பார்த்தாள். அவள் கண்களினின்றும் நீர்த்துளிகள் முத்து முத்தாய் விழத் தொடங்கின. ஓர் அலை மலைபோல் எழுந்தது. ஓடம் ஓர்

புரம் தாழ்ந்தது. மீனா ஒரு கையால் சுந்தரனைக் கட்டியணைத்தாள். மற்றொரு கையைத் தன் தந்தை இருக்கும் கரையை நோக்கி நீட்டினாள். சுந்தரனும் மீனாவைக் கடைசியாகக் கட்டியணைத்தான். மறுநிமிடமே படகு கவிழ்ந்தது. சுந்தரனும் மீனாவும் நீலக்கடலின் கீழ்ப்பாகத்தை அடைந்தனர். இக் கோரக் காட்சியைக் கமலன் பார்த்தான். உன்மத்தம் பிடித்தவன்போல் அரண்மனைக் கேகினான். இன்னும் கமலன் குழந்தைபோல் விடாது அழுதுகொண்டிருக்கின்றான். மீனாவும் சுந்தரனும் கொண்ட காதலின் வலிமை என்னே! உண்மைக் காதலன்றோ அது!!

எனது மைத்துனியின் கலியாணம்

—:o:—

[K. வேங்கடராவ்]

எனது அருமை மைத்துனிக்குக் 'கலியாணம் எப்போ எப்போ' என்று இடைவிடாது கேட்டுக் கொண்டே யிருக்கிறேன். 'ஆச்சு இப்போ, இப்போ ஆச்சு' என்று பதில் வந்து கொண்டே யிருக்கிறது. கேட்ட போது ஒரு வார வாய்தாவாகவே யிருக்கிறது. யார் யாருக்குக் கலியாணமானாலும் எனது மைத்துனிக்கு மட்டும் கலியாணம் இல்லை. நேற்று பிறந்த குழந்தைக்கும் கலியாணம் ஆகிறது. ஆனால் என் மைத்துனிக்கு மட்டும் இல்லை. ஹனுமார் பிரம்ம பட்டத்திற்குக் காத்திருப்பதேபோல் எனது மைத்துனியும் காத்திருக்கிறாள். இது உண்மை. வெறும் கற்பனைக் கட்டுரையல்ல. கலியாணம் இன்னும் இழுத்துக் கொண்டே போனாலும் எனக்கு அதைப்பற்றி அக்கறையில்லை. கலியாணம் செய்து கொண்டவர்கள் என்ன வாரிக் கொண்டு விட்டார்கள்? எனது மைத்துனிக்கு என்ன இல்லாமற் போய் விட்டது? கலியாணம் ஆகும் வரையில் எனது மைத்துனி புது மணப் பெண்ணே யல்லவா? அது நடந்து விட்டால், விளாங்காயை வாயில் போட்ட மாதிரியே. இவ்வளவையும் நான் அறிந்திருந்தாலும், நான் எங்கே சென்றாலும் 'உன் மைத்துனிக்கு கலியாணம் ஆயிற்று என்று கேள்விப்பட்டேனே!' என்பாள் ஒரு பாட்டி. மற்றொரு அத்தையோ 'அம்மாடீ! இன்னுமே அவளுக்கு கலியாண மில்லையம்மா!' என்பாள். நான் என்ன செய்வேன்? ஊர் வாயை மூட என்னால் முடியவில்லையே!

இந்தக் கலியாணத்தைப் பற்றி எவருமே அக்கரை எடுத்துக் கொள்ளவில்லை யென்று நினைக்கிறீர்களா? எனது மாமனார் ஊர் ஊராய் அலைந்துகொண் டிருக்கிறார். அவரால் இயன்ற பிரயத்னங்கள் எல்லாம் பரீக்ஷை செய்து பார்த்தாய் விட்டது. இன்னும் ஓர் வரன் அமைந்த பாடில்லை. சாரதா சட்டம் வந்தபோதே அவர் மகளுக்குக் கலியாணம் செய்ய முயற்சித்தார். அப்போது எனது மைத்துனிக்கு வயது 12. எனது மாமனாரின் சகோதரி யொருத்தி வீட்டிலேயே யிருக்கிறாள். இவள் வைதீக சமர்த்து. 'பறையனைப் பார்ப்பதே மோசம்' என்பாள். சாரதா சட்டத்தைக் கண்டதுண்டமாகக் கண்டித்தாள். 'அஷ்டவர்ஷாத் பவேத் கன்யாம்' என்பது போல ஒரெட்டில் முடிக்க வேண்டிய மணத்தை சாரதா சட்ட

உத்வேகத்தில் செய்யப் பார்த்தார்கள். அது முடியவில்லை. பின்பு ஈரொட்டும் இப்போது கடந்து விட்டது. இதன் மத்தியில் மாப்பிள்ளைகளைப் பார்த்த கதை வெகு விநோதமப்பா?

இப்போதைக்கு நான்காம் வருஷத்தில் என் மாமியாருக்கு பலத்த ஆசையிருந்தது. மாப்பிள்ளை வீட்டார் தட்டுநிறைய நகைகள் வைக்க வேண்டும். மூட்டை தூக்கும் வேலையானாலும், செருப்பு தூக்கும் வேலையானாலும் அது ஒரு சர்க்கார் உத்யோகமா யிருக்க வேண்டும். தற்காலத்திய கிராப்பு முதலியன வின்றிப் பழைய காலத்துப் பாட்டனா யிருக்க வேண்டும் என்று சொல்லிக் கொண்டிருந்தாள். என் மாமனார் மாப்பிள்ளைகளைத் தேடவும் சளைக்க மாட்டார். அவர் வீட்டுப் பெண்கள் வரும் மாப்பிள்ளைகளை நிராகரிக்கவும் பின் வாங்க மாட்டார்கள். போன வருஷம் ஒரு மாப்பிள்ளை அகப்பட்டான்.



அவன் பஞ்சாயத்து உபாத்தியாயர். மாதம் 15 ரூபாய் சம்பளம். பெண்ணைப் பார்க்க மாமனார் வீட்டிற்கு வந்தான். நன்றாகத் தின்றான். பெண்ணைப் பார்த்தான். பலே! பேஷ்! தாலிகட்டினதும் கூடவே அழைத்துப் போகலாம். இந்தப் பெண்ணே சரி யென்று மகிழ்ந்து சென்றான். மறுமுறை அவனுடைய தாயார் கூடவே வந்தாள். மகனுக்குத் தெரியாமல் அந்தத் தாயார் கையில் ஏதாவது (ஒரு நூறு ரூபாய்) போட்டிருந்தால் அவள் ஒப்புக் கொண்டிருப்பாள். அது இங்கே யில்லை. ஊர் போனதும் கடிதம் எழுதுகிறேன் என்று சொல்லிப் போனவர்கள் போனவர்களே !

வேறோர் மாப்பிள்ளை வந்ததும் பெண்ணைப் பரீக்ஷிக்க எண்ணினான். பெண்ணைப் பார்க்கவும் முடியவில்லையே! என்ன செய்வான் பாவம்! தனது ஆசையை சொல்லித் தீர்த்தான். பெண் ஒரு திரை மறைவில் நின்றாள். மூன்று வரிகளில் ஏதோ ஒன்றை எழுதி ஒரு சந்தில் நீட்டினான். எனது மைத்துனியோ கண்கலங்கினாள். ஏதாவதொன்றைச் சொல்லலா மென்று ஏதோ வொன்றை முணுமுணுத்தாள். பரீக்ஷை செய்யும் திறமை மிக்க உபாத்தியாயர் மாப்பிள்ளை தான் எழுதிக் கொடுத்ததையே மறந்துவிட்டார். படிப்பில்

தேர்ச்சி பெற்ற பெண்ணை சங்கீதத்தில் பரீக்ஷிக்க எண்ணினான். அடுத்த அறையில் பெண் இருந்தாள். பெண் பாடவேண்டுமென்றும் ஹார்மோனியம் தெரியுமா வென்றும் கேட்டதற்கு எனது மாமனார் 'இது பட்டிக் காடல்லவா? சங்கீதம் சொல்லிக் கொடுக்க யார் இருக்கிறார்கள் என்று என் மாமனார் சொல்லவே 'ஒரு பாட்டாவது பாடட்டுமே!' என்று கேட்டான் மாப்பிள்ளை. அடுத்த அறையிலிருந்தே என் மைத்துனி பாடினாள். நான் இவளுக்கு ஆயிரம் முறை சொல்லிக் கொடுத்துக் கடைசியில் 'இவளுக்கும் பாட்டிற்கும் வெகு தூரம்' என்று முடிவு கட்டிய பாட்டையே இவள் சொன்னாள். இதே நமது மாப்பிள்ளைக்கு மகா சந்தோஷ முண்டாக்கிவிட்டது. பெண்ணை மாப்பிள்ளை பார்க்க வீட்டினர் விடவும் மாட்டார்கள். மாப்பிள்ளையும் பெண்ணைப் பார்க்காமலும் போகமாட்டார். என்ன செய்வது.



கடைசியில் எனது மைத்துனியும் எதிரில் வந்து நின்றாள். மாப்பிள்ளை கண்ணெடுத்துப் பார்த்தும் தலையைக் கீழே தொங்க விட்டுக் கொண்டார். எதிரில் நிற்கும் பெண் எவளோ வென்றே பிரமித்துப் போனார். அப்போது அருகிருந்த நான் 'பாரப்பா! பெண்ணை!' என்று புன்சிரிப்புடன் சொன்னதும் மீண்டு மோர் முறை தலை தூக்கிப் பார்த்துப் பிரமித்துப் போனான். மறுபேச்சு பேசவில்லை. எழுந்ததும் ஊருக்குப் புறப்பட்டான். அவனைத் தொடர்ந்து சென்ற என் மாமனார் 'ஒன்றும் சொல்லாமல் போகிறீர்களே! ஒரு வாரம் கழித்து நான் வரட்டுமா? அல்லது நீங்களே வருகிறீர்களா? உங்கள் பெற்றோர்களிடம் போய் சொல்லுகிறீர்களா? உங்கள் அபிப்பிராயம்தான் என்ன? என்ன?' என்று வகைவகையாகக் கேட்டும் மௌனமே பதிலாகியது. அன்று முதல் அந்த மாப்பிள்ளையை மறக்க வேண்டியதாயிற்று.

மற்றோர் வரன் கோயம்புத்தூரில் நிச்சயமாயிற்று. 300 ரூபாய் வரதக்ஷிணை கொடுக்க என் மாமனாரும் ஒப்புக்கொண்டு விட்டார். பெண்ணுடன் பணத்தை எடுத்துக் கொண்டு சேலத்திற்கு வாருங்கள். அங்கேயே லக்ன பத்ரிகை எழுதி விடலாம் என்று சம்பந்தி

விட்டார் சொல்லி விட்டார்கள். எனது மாமனாரும் ஆனந்த பரவசரானார். அவர் மனம் பழைய நிலைமையை அடைந்து விட்டது. எவரும் லக்ஷியமில்லை. தன்னைப் போன்றவர் எவருமில்லை என்று மீசை முறுக்கினார்; சம்பந்திகள் குறித்த நாளில் தனது மனைவியுடனும், பெண்ணுடனும், ரூபாய் இருநூறுடனும் சேலம் போனார். சம்பந்திகளும் தயாரா யிருந்தனர். இரவு 7 மணி அடித்தது. எல்லோரும் இரத்னகம்பளத்தின் மீதிருக்கவே பெண்ணை ஒரு அறையில் வைத்திருந்தனர். பலர் நோயாளி யொருவன் இருக்கும் அறைக்குள் ஜனங்கள் ஏக்கமுடன் போவதும் துக்கமுடன் வருவதும் போலவே, இப்பெண் உள்ள அறையினுள்ளும் ஆசையுடன் போவதும் காணாத அதிசயம் கண்டு விட்டதாக துள்ளிக் குதித்து வருவதுமா யிருந்தனர். பெண்ணைப் பார்க்கும் பிரமுகர்கள் ஒன்றும் சொல்லவில்லையே, சரியென்று புது சம்மந்திகள் இருக்க, எல்லா பேச்சும் முடிவாகி லக்ன பத்திரிகை கொடுக்க வேண்டிய சமயத்தில் நாம் என்ன சொல்வது என்று வந்தவர்கள் இருக்க, கலியாண மகோற்சவத்தின் செலவினங்கள், சீர்சிறப்புகள் எல்லாம் பேசப்பட்டன. எனது மாமனாரும் ரூ 200 ஐ எண்ணித் தட்டில் வைத்து விட்டார். லக்ன பத்திரிகை எழுத வாத்தியாரும் பேனா எடுத்து விட்டார்.

திடீரென்று காடியைப் போல வந்தான் மணமகனுடைய அம்மான். ‘என் பெண்ணை விட்டு விட்டு வேறொன்றை எவ்வாறு



நிச்சயம் செய்யலாம்? சபையோர்களே! பெரியோர்களே! நீங்களே சொல்லுங்கள். வேண்டுமானால் இன்னும் 15 நாட்களுக்குள் நான்

கலியாணம் செய்கிறேன். ரூபாய் ஐந்நூறு கையில் கொடுத்து மற்றோர் ஐந்நூறுக்கு நகைபோடும் சக்தியும் மனமும் எனக்குண்டு. பாருங்கள். 17 வயது பெண்ணை 16 வயது பையனுக்குக் கட்டி வைக்கப் பார்க்கிறார்கள். இது நம்ம ஜாதிக்கடுக்குமா? நமது குலம் கோத்திரத்தில் யாராவது செய்ததுண்டா? எனது மைத்துனரே சொல்லட்டும்! இல்லாவிட்டால் விடமாட்டேன்!' என்று கர்ஜிக்கவே எனது மாமனார் வயிற்றில் இடிவிழுந்த தப்பனே! அவரிட சம்பந் திக்கும் நாவெழவில்லை. சபையோரும் திக்பிரமையாயினர். சற்று நேரங் கழித்து எனது மாமனார் வாய் குழாக் குழா 'எனது பணத்தை யாவது பெற்றுக் கொள்ளுங்கள். உமது மைத்துனர் பெண்ணைக் கொடுத்துக் கலியாண மாகாவிட்டால் பின்னர் பார்த்துக் கொள் வோம்' என்று சொல்லியும் இதை ஒப்புக் கொள்வோர் எவருமில்லை. தலையைக் கீழே தொங்கவிட்டுக் கொண்டுவந்த என் மாமனார் இன்னும் தலையைத் தூக்கவில்லை.

இவ்வளவு ஆபத்தும் என் மாமனாருக்கா வரவேண்டும்? சாரதா சட்டத்தையும் நவீன கொள்கைகளையும் கேட்கவும் சகியாது 'தூதூ' வென்று துப்பும் எனது மாமனாருக்கா இவ்வகையான பரீக்ஷை? ஏகாதசி யன்று பெண் ஜாதியுடன் பேசவும் ஆகாது என்று சாஸ்திரம் பேசும் எனது மாமனாரின் தங்கையோ, வாயடக் கிக்கொண்டு மாதா மாதம் தவறாமல் மாதவிடாயாகும் பெண்ணை எதிரில் உட்கார வைத்துக் கொண்டு சாப்பிடுகிறாள். மாதவிடாயான பெண்ணை வெளியில் தள்ளித் தூத்துவது சாத்தியமா? சென்ற 24 மாதங்களுக்கு அதிகமாகவே மாதவிடாயாகும் என் மைத்துனியை சமையலறையிலேயே வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இது எப்படி என்னும் ரகஸியத்தை என் மனைவிகூட என்னிடம் சொல்வதில்லை. வெளியில் சாரதா சட்டத்தைக் கண்டிக்கும் என் மாமனார் கதி இது தான்! எனது மைத்துனியும் கலியாண மாகாத துக்கத்தால் சாப்பா டின்றி எத்தனையோ நாள் பட்டினி கிடந்தாள். இவளுக்குக் கணவன் அகப்பட்ட பாடில்லையே! பிறந்தானோ, பிறக்கவே யில்லையோ என்றும் நான் சலிப்புற்று நினைப்பதுமுண்டு. எனது மைத்துனியை மணம் புரிந்து கொள்பவன் மிக்க அதிர்ஷ்ட சாலியாகத்தான் இருக்க வேண்டும் என்பது மட்டும் நிச்சயம். திடமான யௌவன மங்கை! முககாந்தி யில்லாவிடினும் திரேக காந்தியுள்ளவள். சரியான முதிர்ந்த யௌவனம். பிராமண வகுப்பில் இத்தகைய பெண்மணி யைக் கண்மணியாகக் கொள்வது அரிதினுமரிதே! இவளை மணக்கும் அதிர்ஷ்ட சாலியைப் பார்க்க நாங்கள் எல்லோரும் கண்ணில் எண்ணெய் போட்டுக் கொண் டிருக்கிறோம். இன்னும் அகப்பட வில்லையே!



ஆசான்:—பையா! பாடத்தைக் கவனியாமல் குனிந்துகொண்டு வீண் வேலை என்ன செய்கிறாய்?

மாணவன்:—நான் வீண் வேலை ஒன்றும் செய்யவில்லை, 'தமிழரசு' படித்துக்கொண் டிருக்கிறேன்.—எம். ஏ. எம். டி.

கடவுள் எங்கும் இருக்கிறார்

[டர்பன் - திரு. ச. முனிஸ்வாமி பிள்ளை]

முன் மகம்மதியர்கள் நமது தேசத்தை ஆண்ட காலத்தில் மகம்மதியச் சக்கரவர்த்தி ஒருவரிடம் ஒரு சிறிய நாட்டின் மந்திரி ஒருவர் சென்றார். இந்த மந்திரி பெரிய வைதீகர்; மதம் வைராக்கிய மிகுந்தவர். அதனால் மகம்மதியச் சக்கரவர்த்தி அவரைக் கௌரவத்துடன் உபசரித்தார். ஆயினும் அம் மந்திரியின் பாண்டித்தியத்தைப் பரீட்சிக்க வேண்டும் என்னும் ஆவல் அவருக் குண்டாயிற்று. ஆகையால் மந்திரி சக்கரவர்த்தியிடம் வந்தவுடன் அவரை உபசரித்து கீழே காணும் மூன்று கேள்விகளைச் சக்கரவர்த்தியார் கேட்டார்.

‘கடவுள் எந்தத் திசையை நோக்கி இருக்கிறார்? கடவுள் எங்கே உட்கார்ந்திருக்கிறார்? அவர் என்ன செய்கிறார்?’

இந்தக் கேள்விகளுக்கு எட்டு நாளையில் சரியான பதில் சொல்லி விட்டால் மேற்படி மந்திரிக்குப் பெரிய உத்தியோகம் அவரது அரசுரிமையில் கொடுக்கப்படும் என்றும், இன்றேல் அவர் சிரம் சேதிக்கப்படும் என்றும் சக்கரவர்த்தி தெரிவித்தார். இந்தக் கேள்விகள் மிகுந்த கடினமானவை யென்று மந்திரி மனத்திற் பட்டது. ஆயினும் அவர் சக்கரவர்த்தியைப் புகழ்ந்துபேசிவிட்டு இந்தக் கேள்விகளுக்குத் தக்க பதில் சொல்வதற்கு எட்டு நாள் வாயிதா வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

பின், மந்திரி தம் வீட்டுக்குச் சென்று மேற்படி கேள்விகளுக்குத் தக்க விடை சொல்லுமாறு சிந்தித்த வண்ணமா யிருந்தார். ஆனால் எவ்வளவு யோசித்தும் அவருக்கு ஒன்றும் அறியக் கூடவில்லை. கடைசியாக எட்டாவது நாளும் விடிந்து விட்டது. கேள்விகளுக்குத் தக்க ‘பதில்’ ஒன்றும் புலப்படவில்லை. பின்னர் மேற்படி மந்திரி காலதாமதஞ் செய்யக் கருதிச் சுகவீனமா யிருப்பது போலப் பாசாங்கு செய்தார். இதனைக் கண்ட அவரது வேலைக்காரன் அவரிடம் சென்று விசாரித்தான். உடனே அவர் ‘நீ என் கிட்ட

வாரதே, என்னைத் தொந்தரவு செய்யாதே, இன்னும் கொஞ்ச நேரத்தில் நான் சாகப் போகிறேன்' என்றார். வேலைக்காரன் 'என்ன விஷயம் என்பதைத் தயவு செய்து என்னிடம் சொல்லுங்கள். நீங்கள் கஷ்டப்படுவதைக் காண்பதினும் நான் என் உயிரை விடச் சித்தமா யிருக்கிறேன்' என்றான். இதனைக் கேட்ட மந்திரி விஷயத்தைத் தெரிவித்தார். அந்த வேலைக்காரன் மிக்க தாழ்ந்த நிலைமையிலுள்ளவன். அவனை மிகக் கேவலமாக எல்லாரும் நினைத்துக்கொண்டிருந்தனர். ஆனால் உண்மையில் அவன் மந்திரியின் சீடன்; கல்வியறிவு உள்ளவன். அவன் அந்தக் கேள்விகளுக்குத் தக்க விடைகளை அறிவான். அதனால் அவன் மந்திரியை நோக்கி 'நான் சக்கரவர்த்தியிடம் சென்று அவர் உம்மிடம் கேட்ட கேள்விகளுக்கு விடையளித்து வருகிறேன். உமக்குப் பதிலாக நான் சக்கரவர்த்தியிடம் போகிறேன் என்பதையும், அவருக்குத் திருப்திகரமான விடையளிக்கா விட்டால் உமக்குப் பதிலாக நானே உயிரிழக்கச் சித்தமாயிருக்கிறேன் என்பதையும் எழுதி ஒரு கடிதம் தாரும்' என்றான். இவ்வாறு செய்ய மந்திரி துணியவில்லை. ஆனால் இந்தச் சமயத்தில் ராஜாவின் தூதனொருவன் வந்து விட்டான். அவனைக் கண்டவுடன் மந்திரி பயந்து நடு நடுங்கினர். அதனால் அவர் தமது வேலைக்காரனுக்கு உத்தரவு கொடுத்து விட்டார். வேலைக்காரன் தன்னிடமிருந்த கந்தைத் துணிகளை உடுத்திக்கொண்டு சக்கரவர்த்தி சமுகத்திற்குப் புறப்பட்டுப் போனான்.

வேலைக்காரன் ஒரு பெரிய வேதாந்தி. அதனால் வேலைக்காரனை இந்த வித்வான் அச்சமின்றித் தைரியமாகச் சக்கரவர்த்தி முன் சென்று 'ஐயா, தமக்கு வேண்டுவது யாது? தாம் கேட்க விரும்புவது என்ன' வென்றான். உடனே சக்கரவர்த்தி உனது எஜமானனிடம் நான் கேட்ட கேள்விகளுக்கு பதில் வேண்டுமென, அவன் 'நீர் தக்க விடை யளிப்பவர் ஒரு குரு என்பதையும், கேள்வி கேட்கும் நீர் சீடர் என்பதையும் அறிவீர். நீர் நல்ல மகம்மதியர். உமது மத நூல்களிலுள்ளபடி சரியாக நடந்து கொள்பவர். உமது சாஸ்திர நீதிகளின்படி குருவின் ஸ்தானத்திலுள்ள நான் உயர்ந்த ஸ்தானத்தில் இருக்க வேண்டும். நீர் நம்மை விடத் தாழ்ந்த ஸ்தானத்தி லிருக்க வேண்டும்' என்றார். இதனைக் கேட்ட சக்கரவர்த்தி அந்தப் புலவருக்கு உயர்ந்த ஆடைகளைக் கொடுத்துத் தமது சிம்மாசனத்தில் அவரை அமர்த்தித் தாம் அந்தப் புலவருக்கருகே தரையில் உட்கார்ந்து கொண்டார். புலவர் சக்கரவர்த்தியின் சிம்மாசனத்தில் கம்பீரமாக வீற்றிருந்தார். இந்தச் சந்தர்ப்பத்தில் சக்கரவர்த்தி புலவரை நோக்கி 'ஒரு விஷயம் ஞாபக மிருக்கட்டும். எனது கேள்விகளுக்குத் தாம் சொல்லும் விடைகள் எனக்குத் திருப்தி யில்லாவிட்டால் நான் உம்மைக் கொன்று விடுவேன்' என்றார். 'அது எனக்குத் தெரியும்' என்று கூறினர் புலவர்.

முதலாவது கேள்வி வந்தது. கடவுள் எங்கே உட்கார்ந்திருக்கிறார்? இந்தக் கேள்விக்குச் சுருக்கமான விடை கொடுத்தால் அந்த மகமதிய சக்கரவர்த்திக்கு விளங்காது. அதனால் அப்புலவர் ஒரு பசுவைக் கொண்டுவரும்படி உத்தரவு செய்தார். உடனே ஒரு அழகிய பசு வந்து நின்றது. இந்தப் பசுவினிடம் பால் இருக்கிறதா? என்றார் புலவர். ஆம் என்றார் சக்கரவர்த்தி. பால் எங்கே இருக்கிறது? பசுவின் மடியில் இருக்கிறது என்றார் சக்கரவர்த்தி. அது தவறு. பசுவின் சரீரம் எங்கும் பால் பரவி யிருக்கிறது. கொஞ்சம் பால் கொண்டுவரப்பட்டது. உடனே புலவர் வெண்ணெய் எங்கே இருக்கிறது? இந்தப் பாலில் வெண்ணெய் இருக்கிறதா என்றார். உடனே சக்கரவர்த்தி முதலியோர் இதில் வெண்ணெய் இருக்கிறதுஎன்றார்கள். 'ஆனால் அது எங்கே இருக்கிறது. எனக்குக் காட்டுங்கள்' என்றார் புலவர். அவர்களால் காட்ட முடியவில்லை. உடனே புலவர் நீங்கள் பாலில் வெண்ணெய் எங்கே யிருக்கிறதென்பதைக் காட்ட முடியா விட்டாலும் பாலில் வெண்ணெய் இருக்கிறதென்பதை நம்புகிறீர்கள். உண்மையில் வெண்ணெய் பாலில் எங்கு மிருக்கிறது. அதுபோலவே கடவுளும் எங்கும் இருக்கிறார். பாலில் எங்கும் வெண்ணெய் இருப்பது போலவும், பசுவின் சரீரமெங்கும் பால் இருப்பது போலவும்; கடவுள் எங்கும் வியாபித்திருக்கிறார். அவர் இல்லாத இடமில்லை.

பாலைப் பெறுவதற்காகப் பசுவின் மடியில் பால் கறக்கவேண்டியதா யிருக்கிறது. அதுபோலவே நீர் கடவுளை அடையவேண்டுமானால், உமது சொந்த இருதயமான மடியைக் கறக்க வேண்டும். இப்பொழுது உமது கேள்விக்குத் தக்க விடைகிடைத்து விட்டதா அரசே! என்றார் புலவர். 'ஆம் சரி சரி' என்றார் சக்கரவர்த்தி. அதனைக் கேட்டவுடன் கடவுள் எங்கோ ஏழெட்டு உலகங்களுக்கப்பால் ஒரு தெய்வீக உலகத்தில் இருக்கிறார் என்று சக்கரவர்த்தியிடம் சொல்லி ஏமாற்றி வந்த போலிப் புலவர்களெல்லாம் வெட்கித் தலை குனிந்தனர். அரசனுக்கு அவர்களிடமிருந்த மதிப்பு அன்று முதல் போய்விட்டது.

பின் இரண்டாவது கேள்வி வந்தது; எத்திசையை நோக்கிக் கடவுள் உட்கார்ந்துகொண் டிருக்கிறார். இது விநோதமான கேள்வி. ஆனால் அந்தச் சக்கரவர்த்தியும் அவரைச் சேர்ந்தவர்களும் கடவுளை நம்மைப் போன்ற ஒரு மனிதரென்று கருதி யிருந்தனர். உடனே புலவர் 'ஒரு விளக்கு எடுத்து வாருங்கள்' என்றார். ஒரு மெழுகு வர்த்தி விளக்கு கொண்டுவரப்பட்டது. இந்த விளக்கு எந்தத் திசையையும் நோக்கி யிருக்கவில்லை. அது எல்லாத் திசைகளையும் சமமாக நோக்கி யிருக்கிறது. அதுபோலவே கடவுள் நமது இருதயமென்கிற விளக்கில் எரிந்துகொண் டிருக்கும் சோதியாக இருக்கிறார்.

அவ் விளக்கு எங்கும் நேர்த்தியாக இருக்கிறது' என்ருர் புலவர். இதனைக்கேட்ட சக்கரவர்த்தியும் மற்றவர்களும் சமாதான மடைந்தனர்.

கடைசியாக மூன்ருவது கேள்வி ; கடவுள் என்ன செய்கிருர்? என்பதே. உடனே புலவர் சக்கரவர்த்தியை நோக்கி நீர் போய் மந்திரியை இங்கே அழைத்து வாரும் என்ருர். உடனே தமது வேலைக்காரச் சீடன் ராஜ சபையில் எவ்வாறு விடை கூறுகிருனே என்று வீட்டில் கவலை யடைந்துகொண் டிருந்த மந்திரி வந்தார். தமது வேலைக்காரன் சக்கரவர்த்தியின் சிம்மாசனத்தில் கம்பீரமாக வீற்றிருப்பதைக் கண்டு அவர் அதிசயமடைந்தார். உடனே அவரைப் புலவர்க்குரிய ஆசனத்தில் வீற்றிருக்குமாறு—அவர் வேலைக்காரனு யிருந்த—புலவர் கூறினர். மந்திரி அவ்வாறே வித்வான் ஸ்தானத்தில் வீற்றிருந்தார். பின் சக்கரவர்த்தியை மந்திரியின் ஸ்தானத்தில் வீற்றிருக்குமாறு உத்தரவு செய்தார் புலவர். உடனே புலவர் சக்கரவர்த்தியை நோக்கிப் 'பார்த்தீரா? இதுதான் கடவுளின் வேலை. அவர் அடிக்கடி இந்த உலகத்தில் ஒவ்வொன்றையும் மாற்றிக்கொண் டிருக்கிருர். இவ்வாருகப் புலவரை ராஜாவாகவும், ராஜாவை மந்திரியாகவும், மந்திரியைப் புலவராகவும் மாற்றியதும் அவர் வேலையே. இவ்வாறுதான் அவர் இந்த உலகத்தில் எப்போதும் செய்துகொண் டிருக்கிருர். ஒருவரை உயர்த்தல், மற்றெருருவரைத் தாழ்த்தல், ஒன்றை மறைத்தல், மற்றென்றைப் புதிதாக இயற்றல், இதுபோன்ற எண்ணிறந்த காரியங்களைக் கணந்தோறும், தினந்தோறும், எப்பொழுதும் செய்து வருகின்ருர். இவ்வாறு மாறுதல்கள் உலகத்தில் நடந்து கொண்டே யிருக்கின்றன. எல்லாம் அவன் செயல். அவனன்றி ஓரணுவு மசையாது. அவன் எங்கு மிருக்கிருன். எல்லாம் செய்கிருன் என்ருர். இதுகேட்ட சக்கரவர்த்தியும் அவரைச் சேர்ந்தவர்களும் அளவற்ற மகிழ்ச்சி யடைந்தார்கள். அன்று முதல் மந்திரியின் வேலைக்காரனு யிருந்த அந்தப் புலவர் ஒரு மந்திரியானர்.

விறகிற் றீயினன் பாலிற் படு நெய்போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்
உறவு கோல் நட் டுணர்வு கயிற்றினல்
முறுக வாங்கிக் கடைய முன்னிற்குமே. —அப்பர்

‘சாமி! கொஞ்சங் கள் குடியுங்கோ!’

[நளினம்]

பௌத்த சமயத்துறவி யொருவர் ஒரு கையில் திரிதண்டத்தையும், மற்றொரு கரத்தில் பிரம்பையுந் தாங்கிக்கொண்டு வீதி வழியே போய்க் கொண்டிருக்கின்றார். அவர் திகம்பராய் (நிர்வாணமாய்) நாண மென்பது ஒரு சிறிது மின்றிக் காணப்பட்டார். ஏதேனும் சிற்றுயிர்கள் தம் காலில் மிதிபட்டு இறக்கப் போகிறது என்று நிலத்தைக் கூர்ந்து கூர்ந்து பார்த்தவண்ணம் அவர் நடந்தார். அவர் உடம்பு புழுதி படிந்து தூய்மையின்றி யிருந்ததோடு, எலும்பும் தோலுமாகவுங் காணப்பட்டது. இதனால் அவர் உண்ணா நோன்பி யென்பது தெரிந்தது. அவ்வாறு ஏதோ சிந்தனையோடு சென்றுகொண்டிருந்த அவ் வடிகளெதிரே, கட் குடிய னொருவன் பாதையின் ஒரு பக்கத்தி லிருந்து மற்றொரு பக்கமும், இப்பக்கத்திலிருந்து அப் பக்கமுமாகத் தள்ளாடித் தள்ளாடி வந்துகொண் டிருந்தான். அவன் அதிகமாகக் குடித்திருந்ததால் கள் நாற்றம் காத தூரம் வீசியது.



அவன் அடிகளை யணுகியதும், அவரைப்பற்றித் தாவுவான் போல் வந்து கைகூப்பி வணங்கி, ‘சாமி! உங்களைக் கால்லே விழுந்து கும்புட்டேன். ஏஞ்சாமி! நான் சொல்றதே கொஞ்சங் கேளுங்கோ! உங்க ஒடம்பு ஏன் அழுக்கா இருக்குது? புழுக்கமா இருக்கிற அறையிலே ஆப்பட்டுக்கினு வருந்தறவங்களே போல, இதிலே கிடந்து உங்க உசிரு தம்பப்படுமே! அவ்வாறு வருந்தா திருக்குனும்னா இங்கேயும் மேலோகத்திலும் சுகமா இம்பமனுபவிக்னும்னா - அதைத்

தாக் கூடியது ஒன்னு இக்குது என் ஆசான் சொல்லியது! பசுமை யான பாளைகளையுடைய தென்னை மரத்திலே யிருந்து இறக்கிற தேன்போலெ தித்திக்கும் கள்ளு; அதெ குடிச்சி அறிவு தெளிஞ்சி யோக பலனை யடையுங்கோ! அப்போ என்னெ வேணுமானு கைகழு விடுங்கோ!' என்று கூறி அத் துறவியோடு சபதஞ் செய்து, 'சாமி! கொஞ்சங் கள் குடியுங்கோ' என்று கெஞ்சிக் கூத்தாடி நின்றான். இக் காட்சியைப் பார்க்க மக்கள் பெருந் திரளாகக் கூடிவிட்டார்கள்.

அச்சமயம் பூஞ்சோலைக்குச் சென்று மலர் கொய்து வர, சுதமதி யென்னும் தோழியோடு அவ் வழியாகப் போகும் மணிமேகலை, உண்ணு நோன்பியும், களிமகனும் மாறுடுங் காட்சியைப் பார்த்து 'இதுதான் உலக விநோதம் போலும்!' என எண்ணி மனம் நைந்து சென்றாள் என்று 'மணிமேகலை' என்னும் பெருங் காவியத்தில் சீத்தலை சாத்தனார் என்னும் நல்லிசைப் புலவர் அழகாகச் சித்தரித்துக் காட்டுகிறார்.

'உதயணன் சரிதை அல்லது பெருங்கதை' என்னும் நூலாசிரியர் மேற்குறித்தது போன்ற வேறொரு காட்சியை நம் மனங் களிக்க வரைந்து காட்டுகிறார்.



நன்றாகக் குடித்த பெருங் குடிய னொருவன் வாயில் வந்தவாறு பாடிக் கொண்டே வந்தவன், அவ்வழியாக வந்த பார்ப்பனனைப் பார்த்ததும், அவனை வழி மறித்து, 'செல்லாதே! ஆணை யிடுகின்றேன். இங்கேயே நில்' என்று சொன்னான். அதோடு நிற்காது அப் பார்ப்பனனை அவன் அடிப்பது போல் சென்று கண்டபடி திட்டி, அவனைக் கையைப் பிடித்திழுத்து, 'கும்பிடுகிறேன் தேன்போன்று இனிக்கும் இம் மதுவைக் குடியும். அப்படி செய்யாவிடில், இக் கள் குடிப்பது தீய தென்றும், பஞ்சமா பாதகங்களில் அது ஒன் றென்றும்

கூறும் உனது பார்ப்பனக் கூட்டம் எதுவென்பதைச் சொல்லா விட்டால், உன்னைக் குத்துவேன்' என்று கூறி அவனை நோக்கிக் கைகளை யோங்கிச் சென்றான்.

இந் நல்லிசைப் புலவர்கள் காட்டும் உலகக் காட்சியில் வரும் கட் குடியர்கள் கூறும் கூற்றுக்கும், மதுவிலக்குப் பிரசாரத்துக்கு எதிராகச் சர்க்கார் சார்பில் செய்யப்படும் பிரசாரத்துக்கும் ஏதேனும் வேற்றுமை யிருக்கிறதா என்பதை வாசகர்கள் உய்த்துணர்வார்களாக.

இயற்கைப் பாடம் கற்பிக்கும் ஒரு உபாத்தியாயர் தம் மாணவர்களைப் பார்த்து 'உங்களில் யாராவது எருமையைப் பார்த்ததுண்டா' என்றார்.

பிள்ளைகள்:—இல்லை சார், இல்லை சார்.

விகடன்:—சார், சார், நான் பார்த்திருக்கிறேன்.

உபா:—எங்கே பார்த்தாய் ?

விகடன்:—இதோ இருக்கிறதென்று தன் பக்கத்திலுள்ள பையனைக் காட்டினான்.

உபா:—முட்டாள், மடையா, அவன் உன்னைப்போல் ஒரு பையன் அல்லவா.

விகடன்:—இல்லை சார், நீங்கள் அவனை எப்பொழுதும் எருமை என்று தானே அழைக்கின்றீர்கள்.

—சி. எம். சுந்தரம்.



—சித்திரம் எழுதியவர் திரு. ஆர். டி. கிருஷ்ணமூர்த்தி.

பொழுது புலர்ந்தது

எதற்கும் பொருந்தும்

[பெ. தூரன்]

'காரியம் ஆகுமா ஆகாதா?—இரண்டில் ஒன்று தெரிய வேணும்' என்று வீரப்பன் தன் இரண்டு கைகளிலும் பிடித்திருந்த கயிற்றை மூக்கின்மேல் வைத்து ஏதோ முணு முணுத்து விட்டு ஏட்டுக் கற்றையிற் செருகினான். ஏட்டைப் புரட்டிப் பார்த்துவிட்டு, 'சீதா கலியாணம்' என்றான் எலும்பப் பறையன்.



'நம்ப சின்னப்பனுக்குக் கலியாணம் நடக்குமான்னு தாங் கேட்டேன்.'

'ஆட்சேபணையே இல்லிங்க. கட்டாயம் நடக்கும். சீதாகலியாணம் வந்திருக்குதுங்க!'

சின்னப்பனுக்குத் தன் தகப்பன் நிச்சயித்த பெண்ணை மணஞ் செய்துகொள்ள இஷ்டமில்லை. அதனால் அவன் முகூர்த்தமென்றால் எங்காவது ஓடிவிடுவான். 'எனக்குக் கலியாணமே வேண்டாம்' என்று அவன் பல முறை கூறியும் யாருங் கேட்கவில்லை. அதற்குக் காரணம் என்ன வென்பதைக்கூடச் சிந்திப்பதாகக் காணோம். இப்பொழுது நாலாவது முகூர்த்தத்திற்காக வீரப்பன் குறி கேட்டுக்கொண்டிருக்கிறான்.

'நீங்க ஒண்ணும் யோசிக்கவேண்டாமுங்க. வேளைவந்து கூடீட்டுதுங்க' என்று எலும்பன் அழுத்திக் கூறுகிறான்.

'வேளைப் பிசகுதான், ஓடி ஓடிப் போகிறான். இந்த முறை பார்க்கலாம்' என்று வீரப்பன் இரண்டணா காணிக்கை கொடுத்துவிட்டு வீட்டுக்குள் சென்றான்.

எலும்பன் பணத்தை இடுப்பு வேஷ்டியின் ஒரு முனையில் முடிந்துகொண்டு போய்விட்டான்.

வெள்ளிக்கிழமை, முகூர்த்தநாள். மணமகனை இரண்டு நாட்களாகக் காணோம். வீரப்பன் தன் தாயார், தமக்கை சுற்றத்தார் மீது எரிந்து விழுகிறான். 'ஆனாலும் பையனுக்கு இத்தனை 'எளக்காரம்' கொடுக்கப்படாது. மிரட்டி வைச்சிருந்தா இப்படி ஓடுவானா?' என்று பக்கத்து வீட்டுக் கிழவி கூறிக்கொண்டு போகிறாள். எல்லோரும் அங்கும் இங்கும் அலைகிறார்கள். சாமான்கள், துணிமணிகள் குறைவற இருக்கின்றன. மணமகன் மட்டும் இல்லை.

காட்டுப் பாளையத்திற்கும் தூரபாளையத்திற்கும் ஒன்றரை மைல் தூரந்தான். சின்னப்பன் சாயங்காலத்திற்குள் வந்து விட்டாலும் இரவு 9½ மணி முகூர்த்தத்திற்குச் சென்று விடலாம்.

அந்திநேரமாக ஆக வீரப்பனுக்குக் கோபம் அதிகரிக்கின்றது. தன் மகன் போகக்கூடிய இடங்களுக்கெல்லாம் ஆட்களை யனுப்பினான்; ஆனால் பயனில்லை. 'உள்ள முடையானை' நம்பி அதிகஞ் செலவுசெய்து விட்டதால் அவனுக்கு விசனமும், கோபமும் கலந்து தோன்றின. என்ன செய்வதென்று தோன்றவில்லை. கலியாணப் பந்தலை விட்டு வெளியில் வந்து மேற்கே நோக்கினான். சிவந்த சூரியன் தொடுவானத்தை அருகிவிட்டான்.

அந்த சமயத்தில் சின்னப்பனைக் கூட்டிக்கொண்டு வீரப்பன் மைத்துனன் வந்து சேர்ந்தான்.

சின்னப்பன் பக்கத்திலேயே ஒரு காட்டில் ஒளித்திருந்தான். இரண்டு நாளாகப் பட்டினி. வெள்ளிக்கிழமை மாலை தண்ணீராவது குடிக்கலாமென்று ஒரு கிணற்றி லிறங்கிக்கொண் டிருக்கும்பொழுது வீரப்பன் ஆள்களையும் மற்றவர்களையும் திட்டுவதைக் கேட்க முடியாமல் வெளியே புறப்பட்ட அவன் மைத்துனன் தற்செயலாக அங்கு வந்து அவனைக் கண்டுகொண்டான். சின்னப்பனுக்கு ஒன்றும் தோன்றவில்லை. பேசாமல் வீட்டுக்கு வந்துவிட்டான்.



கலியாணம் 'சிறப்பாக' நடந்தேறியது.

எலும்பப் பறையன் இனாங் கேட்க வந்தான். 'ஏண்டா, உன்னை

நம்பி மோசம் போகத் திருஞ்சுதே. உனக்கு இனும் வேறையா? என்று உருமினன் வீரப்பன்.

'சாமி அப்பவே சொன்னனுங்களே சீதாகலியாண முன்னு. காட்டுக்குப்போன ராமர் வந்துதானுங்கோ கலியாணம். விசுவா மித்திரன் கூட்டிக்கிட்டு வந்தாப்பிலே நம்ம பெரிய எசமாங்கோ கூட்டிக்கினு வந்து கலியாணத்தை நடத்தினுங்கோ.'

எலும்பன் வியாக்யானம் எல்லோருக்கும் திருப்தியளித்தது காரியம் நடந்துவிட்டது; அதுவே சந்தோஷம்.

எலும்பனுக்கு வீரப்பன் எட்டணு கொடுத்தான்.

கலியாணம் நடந்து ஆறு மாதங்கள் தாணயின. சின்னப்பன் கண்டிக்கு ஓடிவிட்டான். விரும்பாத பெண்ணோடு வாழ்க்கை அதற்குமேல் நீடிக்கவில்லை. காட்டில் வேலை; வீட்டில் சுகங்கிடையாது. மனைவி தன் கருத்துக்கிசைந்து நடந்து வந்தும் அவனுக்கு இல்வாழ்க்கை இன்பமற்றதாகவேயிருந்தது. இந்த நிலையில் கண்டிக்கு ஆள் சேர்க்கிறவர் கூறிய ஆசை மொழிகள் அவன் மனத்தைக் கவர்ந்து விட்டன. ஒரு நாளிரவு யாருமறியாமல் மற்றவர்களுடன் சின்னப்பன் புறப்பட்டு விட்டான்.

'பையனையாவது பார்த்துக்கொண் டிருப்பேன். குமரி காலெடுத்து வச்சதும் புருஷனைத் துரத்தி விட்டாள். எந்த நேரத்திற் பிறந்தாளோ?' என்று வீரப்பன் தாயார் தன் குழந்தை வாயைத் திறந்தாள்.

'அப்பவும் எலும்பன் சொன்னது சரியாகத்தான் போச்சு. சீதைகூட ராமர் வாழ்ந்தாரா? சீதையைக் காட்டுக்கு ஓட்டினரு. இங்கே சின்னப்பன் ஓடிப் போனன். யார் போனு என்ன? கூடிவாழ மாட்டாங்கணுதாங் குறிசொல்லுச்சு. நாம் தெரியாத்தனமாப் பண்ணிக்கிட்டால்? 'உள்ள முடையான்' என்ன பொய்யாவா போய்விடும்?' என்றாள் பக்கத்து வீட்டுக்கிழவி.

வெள்ளிக்கூஜா விருந்து

[திரு ஜி. என். சுவாமி]

ஆ! வாசகர்களே! விருந்தினும் விருந்து வெள்ளிக் கூஜா விருந்தென்றவுடனே வாயைப் பிளக்காதீர்கள்; துணியை வரிந்து கட்டாதீர்கள். எந்த ஆஸ்பத்திரியிலாவது அல்லது வைத்தியரிடமாவது இரண்டு டோஸ்—வேண்டுமென்றால் இன்னும் கொஞ்சம் அதிகமாக—பேதி மாத்திரை சாப்பிட்டுவிட்டு வயிற்றைக் காலி செய்துகொண்டு துணியை வரிந்து கட்டாமல்—நன்றாகத் தளரக் கட்டிக்கொண்டு விருந்துக்குச் செல்லுங்கள். (இது என் அநுபவம்) இதையேன் கூறவந்தேன் என்றால் ஒரு வேளை நான் சொல்லிய வண்ணம் செய்யாமல் விருந்துக்குச் சென்று மூக்கு பிடிக்க, வயிறு வெடிக்க உண்டு அதனால் அஜீரணமானால் 'நீ சொல்லித்தானேயா அல்லது தெரிவித்துதானேயா நாங்கள் விருந்துக்குப் போய் வயிறு கெட்டுப்போய்விட்டது' என்று சொல்லி என்னை அடிக்க—இல்லை என் அறையில் உட்கார்ந்து எழுதும் என்னை உங்களால் அடிக்க முடியாது—ஆனால் நஷ்டவழக்குத் தொடர்ந்தால் நான் என்ன செய்வது? ஆகையால்தான் இதை முன் எச்சரிக்கையாகச் சொல்லி விட்டேன். பிறகு உங்க ளிஷ்டம்.

* * *

சென்னைக் கடுத்த மைலாப்பூரில் கச்சேரி சாலையில் 'இரதி விலாஸ்' என்ற மெத்தை வீட்டில் கிட்டு என்பான் வசித்துவந்தான். இவனுக்கு வயது சுமார் இருபத்தைந்து இருக்கும்; மிக அழகும் கட்டமைந்த சரீரமும், நற்குணமும், கருணையும் வாய்ந்தவன். இவன் சீமை சென்று திரும்பி வந்தவன். இவனிங்குத் 'தீண்டாமை விலக்குச் சங்க'த்தில் சேர்ந்தவன். எனவே இவன் தாழ்ந்தோர்களிடமும் மூடப்பழக்க வழக்கங்களை ஒழிப்பதிலும் அபாரப் பிரியம் வைத்திருந்தான் என்று சொல்லவேண்டியதில்லை. இவனுக்கின்னும் மணமாகாமல் இருந்ததால் இவனது வயது முதிர்ந்த பெற்றோர் இவன் வேண்டுகோட்படியே தம் பிராமண குலத்தில் வரதட்சணையின்றி பூப்படைந்த ஒரு பெண்ணை விவாகம் செய்ய நிச்சயித்திருந்தனர். இதற்குள் அம் மைலாப்பூரிலேயே யுள்ள கிட்டுவின் சில உறவின

ருள்ளும் மற்ற வைதிக, மடிசஞ்சி பிராமணர்களுள்ளும் 'ஐயையோ! காலமே கெட்டுப்போயிட்டுதே. கிட்டு நமது சாஸ்திரத்திற்கு விரோதமாக மிலேச்சர் நாடான சீமைக்குப் போயிட்டு வந்தானே. அதுவுமில்லாமே ருதுவான பெண்ணை அல்லவோ கட்டிக்கப் போறான். சே! நாம் அந்த நீசன் கிட்டுவின் கல்யாணத்திற்குப் போகக்கூடாது' என்பார் சிலர். மற்றும் பலர் 'அப்பா! பிராமணனாய் இருந்தும் பிராமணன், க்ஷத்திரியன், வைசியன், சூத்திரன், பஞ்சமன் (கூடிய சீக்கிரம் அறவே ஒழியப்போகும் வார்த்தைகளை உபயோகித்ததற்காக மன்னியுங்கள்) என்றில்லாமே எல்லாரோடும் சாகவாசம் பண்ணறா; விளையாடுறா; கைகோத்துக் குதிக்கிறா; சாப்பிடுறா; அதுவுமில்லாமே தீண்டாமை விலக்குச் சங்கத்திலே சேர்ந்திருக்கா. இப்பேர்ப்பட்டவன் வீட்டுக்கே போகக்கூடாது' என்பார்கள். இன்னு மநேகர் 'ஐயையோ! பிராம்மணாள் கல்யாணத்திற்கெல்லாம் சூத்திரன் பஞ்சமன் இவன்லா வரான். அந்த கல்யாணத்திற்கு நாமா போறது. சே! அது கூடாது' என்பார்கள். கடைசியாக இவர்களெல்லோரும் கிட்டுவின் கல்யாணத்திற்குத் தாங்கள் போகக்கூடாது என்று தீர்மானித்து தங்கள் தீர்மானத்தையும் கிட்டுவிற்குத் தெரியப்படுத்தி விட்டார்கள்.



இதனால் கிட்டு மிக விசனமுற்றான். ஏன்? அவர்கள் வந்தால்தான் தன் மணம் நிறைவேறுமென்றா? ஒருபோதுமில்லை. ஆனால் 'இம்மாதிரி தாங்களே—சில சுயநல வைதீகர்களே—வஞ்சகமாக பிழைக்க எழுதிவைத்த சாஸ்திரங்களை நம்பி மோசம் போகிறார்களே. தாங்கள் மோசம் போவதுமல்லாமல் பிறரையும் மோசம் போகும்படி செய்து மீளா அடிமைப் படுகுழியில் உழலுமாறு செய்கின்றனரே. என்னே இவர்கள் பேதமையும் வஞ்சகமும், சுயநலமும்' என்றே நமது கிட்டு விசனமுற்றான். கடைசியாக கிட்டு தனக்குள் எதேதோ யோசித்துக்கொண்டு தான் மணம்புரியும் பெண்ணின் சகோதரன் வீட்டுக்குச் சென்றான்.

மணப்பெண்ணின் சகோதரன் சேஷன் என்பான் அம் மயிலையிலேயே வாழ்கின்றான். அவன் அவ்வூர் போலீஸ் இன்ஸ்பெக்டர்

பதவி வகிப்பவன். இவன் நமது கிட்டு சென்ற சமயம் தன் வீட்டின் ஓர் அறையில் ஏதோ புத்தகத்தை வாசித்துக்கொண்டிருந்தான். கிட்டு



வந்ததை அறிந்த சேஷன் தன் பக்கவில் இருந்த நாற்காலியில் அவனை உட்கார வைத்து க்ஷேமங்களை விசாரித்தான். பிறகு கிட்டு தனக்கு வைதீகர்கள் அறிவித்ததைக் கூறி அவர்களை எப்படியாவது தனக்குத் தோன்றும் ஒரு யுக்தி மூலமாக வரவழைப்பதாகக் கூறினான்.

'என்ன அது' என்றான் சேஷன். அவசரமாக அதற்குக் கிட்டு 'இதோ பாருங்கள். இக்கடிதங்களில் எனது கல்யாணத்திற்கு வந்து விருந்துண்டுபோகிற ஒவ்வொருவருக்கும் ரூ 20 மதிப்புள்ள ஒரு வெள்ளிக்கூஜா சன்மானம் அளிக்கப்படுமென்று எழுதி இருக்கிறேன். இவைகளைக் கொண்டு போய் அவர்களுக்கு கொடுத்து விட்டு வருகிறேன். இதற்கு நீங்கள் உதவி செய்ய வேண்டும். அதாவது————————' என்று கிட்டு பேசுவதை நிறுத்தி சேஷன் காதில் சிறிது நேரம் யாமறியாதபடி ஏதோ குசு குசு என்று கூறினான்.

பத்தாம் நாள் கிட்டுவுக்கும் சேஷன் தங்கைக்கும், 'விவாகத்திற்கு வரமாட்டோம்' என்று சொன்ன வைதீகர்கள் வாழ்த்த மணமும் விருந்தும் வெகு சிறப்பாக நடந்தது. விருந்துண்டு செல்லும் ஒவ்வொருவரும் உனக்கோ எனக்கோ என்று மேல் விழுந்து வெள்ளிக் கூஜாக்களை வாங்கிச் சென்றனர்.



நீண்ட தொந்திகள் இவர்கள் நடப்பதற்கேற்றாப்போல் இப்பக்கமும்

அப்பக்கமும் தாளங்கள் போட்டன. இவர்கள் வெகு சந்தோஷமாய்த் தங்கள் வீட்டுக்குச் செல்லும் வழியில் 'நீசன், சாஸ்திர விரோதி, பதரு' என்று சொல்லித் திட்டிய கிட்டுவை, வெள்ளிக் கூஜா கைமேல் ஏறவே 'கிட்டு ரொம்ப புத்திசாலி, நற்குணமுள்ளவன், தயாளகுண முள்ளவன், நீதிமான்' என்று என்னென்ன வகையிலேயோ புகழ்ந்தார்கள்.

இச்சமயம் கிட்டுவின் வீட்டுக்கு வரும் அருகிலுள்ள ரோட்டுகளிலெல்லாம் இரண்டு மூன்று போலீஸ்காரர்கள் நின்றுகொண்டிருந்தார்கள். அவர்கள் வெகு குதூகலமாக வெள்ளிக் கூஜாவுடன் செல்லும் வேதியர்களை நோக்கி 'ஐயா ஐயரே! கொஞ்சம் நில்லுங்கோ (அருகில் வந்த பின்) கையிலே இருக்கிறதே இப்படி தாங்கோ. விருந்து சாப்பிட்டதுமில்லாமல் வெள்ளிக் கூஜாவையும் அடிச்சிக்கினு போறிங்களே' என்று வழி மறித்தார்கள். வைதிகர்கள் உடல் விதிவிதிர்த்தது. ஆந்தை விழிப்பது போல் விழித்தார்கள். கூஜாக்களை தங்களிடம் கொடாதவரை மரியாதையாகக் கல்தாவுடன் அவைகளைப் பிடுங்கிக்கொண்டு வழி கூட்டி அனுப்பினர் போலீஸார்.



மறுநாட் காலையில் கிட்டு தன் அறையில் நமது சேஷனுடன் பேசிக்கொண்டிருக்கிறான். 'அத்தான்! இந்த பிராமணாளின் பேராசையைப் பார்த்தீரா? இந்தப் பொய்யான உபயோக மற்ற வேத சாஸ்திரங்களையும் ஜாதிக் கட்டையும் வைத்துக் கொண்டு என்னை ஏமாற்றப் பார்த்தார்கள். ஆனால் நானா இதற்கெல்லாம் பயப்படுகிறவன். அவர்களை வெள்ளிக் கூஜாவால் ஏமாற்றி விட்டேன். தாங்கள், என் விருப்பப்படி தங்கள் போலீசாருக்கு உத்தா விட்டபடி நன்றாக எல்லா கூஜாக்களையும் பாழும் வைதீகர்களிடமிருந்து பிடிங்கி விட்டார்கள். அப்பா! இவர்கள் பேராசையும் சுயநலமும் என்னே! இதற்குத்தான் நமது பாரதியாரும், 'பேராசைக்காரனடா பார்ப்பான்—அவன் பெரிய துரையெனில் உடல் வேர்ப்பான்' என்று சொன்னார் போலும். அதன் பிரகாரமே யன்றோ இவர்கள் சாஸ்திரம் போலீஸாரிடம் பலிக்கவில்லை. இதனாலேயே இவர்கள் பொய்யும்,

புளுகும், புனே சுருட்டும், சுயநலமும் வாய்ந்தவர்கள் என்று தெரிகிற தல்லவா? இந்த வெள்ளிக் கூஜாக்கள் நூற்றைம்பதையும் பி. ஆர் அண்டு சன்ஸாரிடமிருந்து ஒரு நாளை வாடகை ரூ. 20 க்கு வாங்கி வந்தேன். வாருங்கள் இவைகளை அக்கம்பனியாரிடம் கொடுத்து விட்டு வருவோம்' என்று சேஷனுடன் கிட்டு பி. ஆர் அண்டு சன்ஸுக்குப் புறப்பட்டு விட்டான்.

வாசகர்களே! வெள்ளிக் கூஜா விருந்திற்கு வந்த வைதீகர்கள் 'கிட்டு வேத சாஸ்திரத்திற்கு விரோதமாக நடக்கின்றான். ஆகையால் அவன் நீசன். அவனது கலியாணத்திற்குப் போகக் கூடாது' என்று கூறியது உண்மையாயின் 'விருந்திற்கு வந்தால் ஒவ்வொருவருக்கும் வெள்ளிக் கூஜா அளிக்கப்படும்' என்று கிட்டு கூறியவுடனே ஒருவர் மேல் ஒருவர் விழுந்து அடித்துக் கொண்டு விவாக விருந்திற்கு வருவார்களா? இத்தகைய வைதீகர்கள் நமது நாட்டில் இருக்கிற வரைக்கும் நமது நாடு அடிமையினின்றும், சாதி, சமூகக் கொடுமையினின்றும் மீண்டு சுகமும், சகோதரத்துவமும், சமத்துவமும் ஒரு காலும் அடையவே அடைய முடியாது. ஆகையால் என்னருந் தோழர்களே! விழுமின்! எழுமின்!! வைதீகத்தை வெட்டி வீழ்த்துமின்!!!

முத்தமிடுவதிலும் போட்டா போட்டி

உலகத்தில் ஒவ்வொரு துறையில் யார் அதிக ஆற்றலுடையவர் என்று தெரிவதற்குப் போட்டிகள் பலமாக நடந்து வருகின்றன. ஒவ்வொருவரும் ஒவ்வொரு துறையில் பிரக்யாதி யடைகின்றனர். ஆகாய விமானத்தில் அதிக தூரமும் மிக்க விரைவிலும் பறப்பவர் யார் என்றும், சமுத்திரத்திலேயே அதிக நேரம் மூழ்கி யிருப்பவர் யார் என்றும், மல்யுத்தத்தில் அதிக தேர்ச்சி பெற்றவர் யார் என்றும் தெரிவதற்காகப் போட்டி போடுவதுடன் ஒவ்வொருவரும் அவ்வத் துறையில் உலக ரிகார்டை மீற முயற்சிக்கின்றனர். சமீபத்தில் வங்காள வீரர் கோஷ் என்பவர் 79 மணி 24 நிமிஷம் வரை தொடர்ச்சியாக நீந்தி உலகிலேயே நீந்துவதில் அவர்தான் முதன்மை பெற்றவர் என்று பெயர் வாங்கினார். அதுபோல தொடர்ந்து முத்தமிடுவதில் எந்தக் காதலர் உலகில் முதன்மையானவர் எனத் தெரிவதற்கு அமெரிக்காவில் சமீபத்தில் ஒரு போட்டிப் பந்தயம் நடந்ததில் மிஸ். பெட்டிபர்னஸ் என்னும் மாதும் மைக்கேல் கலாபிரிஸ் என்னும் ஆடவனுமான காதலர்கள் 3 மணி 2 நிமிஷம் வரை விடாப்பிடியாகவும் தொடர்ந்தும் முத்தங் கொடுத்துக் கொண்டனாம்! அவர்களே அதில் உலகில் முதன்மையானவரெனப் பிரக்யாதி பெற்றுள்ளனர்!

தாசிகளும் தாசிகாந்தர்களும்

ஒரு விநோத நாடகம்

(திரு. ஏ. சோக்கலிங்கப் பிள்ளை)

(பதிப்புரிமை ஆசிரிய ருடையது)

சென்ற மாதத் தொடர்ச்சி

சங்கர:—பிறகு என்ன செய்தார்?

நாராயண:—அவர்கள் பாடத் தொடங்கியதால், அவர் இடையில் எழுந்து போவது நன்ருயிரா தென்று விதியில்லாமல் முள்ளின்மேல் உட்கார்ந்திருப்பதுபோ லிருந்தார்.

சங்கர:—இப்படிப்பட்ட புத்திமான் தேவடியாளை வைத்துக் கொண்டதுதான் ஆச்சரியம்.

நாராயண:—கேளும், சொல்லுகிறேன். அந்தப் பங்களாவை விட்டு வெளியே வந்தபிறகு, 'அங்கே தேவடியாள்க ளிருக்கிருர்கள், போகிறதற்கு இலஜ்ஜையா யிருக்கிற'தென்று பல தடவை என்னிடஞ் சொல்லுவார். இப்படிச் சில நாள் சென்றபிறகு, அவர்களைத் தலை தூக்கிப் பாராமல், செவி கொடுத்து அவர்கள் சங்கீதத்தைக் கேட்டால் என்ன தோஷமென்று மெள்ளப் பாட்டைக் கேட்க ஆரம்பித்தார். பிறகு, கொஞ்சங் கிட்டே உட்கார்ந்தால்தான் செவ்வையாகக் கேட்குமென்று கொஞ்சங் கொஞ்சமாக அவர்கள் சமீபத்தில் நகருவதற்கு ஆரம்பித்தார்.

சங்கர:—ஸார்! பாட்டு மாத்திரங் கேட்டால் சங்கடமில்லை. நாமும் எத்தனையோ கலியாண வீட்டுப் பாட்டுக் கச்சேரியில் பாட்டைக் கேட்டு வரவில்லையா? அதனுல் யாதொரு தோஷமு மில்லை. ஆனுல், அவர்கள் சங்கமந்தான் கூடாது. என்? சரீரங் கெட்டுப் பணமெல்லாம் பாழாகி ருணம் வந்து சேருகிறது. பிறகு எப்படி யானுர்?

நாராயண:—இப்படிச் சிலநாள் நடந்த பிறகு அவர்கள் முகத்தைப் பார்த்தால் என்னவென்று யாரும் தம்மைப் பார்க்காதபோது அவர்கள் நேத்திரா பினயத்தைப் பார்த்துக்கொண் டிருப்பார். யாராகிலுந் தன்னைப் பார்த்தால் பார்வையைத் திருப்பிக் கொள்வார். இப்படிச் சில நாள் பழகியபின், யாராகிலும் பார்த்தபோதிலும், எல்லோரும் பார்க்கவில்லையா வென்று பாடுகிறவளுடைய அபிநயத்தைச் செவ்வையாகப் பார்க்க ஆரம்பித்தார். கிரமங் கிரமமாகச் சங்கீதத்தில் இன்பம் பெருகி ஜட்ஜ் அவர்கள் வீட்டிற்கு அடிக்கடி போகத் தொடங்கினர்.

சங்கர:—இப்படி அடிக்கடி அத் தேவடியாள் முகத்தைப் பார்த்ததால்தான், அவருடைய நல்லொழுக்க மெல்லாம் பழுத்துப் போயின.

நாராயண:—அவளைப் பார்க்கப் பார்க்க அவள் அபிநயத்தில் திருஷ்டி யில்லாமல், அவளுடைய முகத்தையே பார்த்த வண்ண மிருந்தார். முதலில் அப்படிப் பார்ப்பது அநியாயமென்று தோன்றிய அறிவை திடப்படுத்திக் கொள்ளாமல் சும்மா முகத்தைப் பார்த்தால் என்ன தோஷமென்று அவளழகைப் பார்த்து ஆச்சரியங் கொண்டார்.

சங்கர:—அவ்வளவு தூரம் வந்த பிறகு அவர் கெடுவதற்கு என்ன சந்தேகம்?

நாராயண:—அவள் அலங்கரித்துக்கொண்டு தீபத்தின் வெளிச்சத்தில் பாடிக்கொண் டிருந்தால், அவளுடைய முகம் அவ்வளவுக் கவ்வளவு அழகாகக் காணப்பட்டதாம். ஆகையால், அவளுடைய சேர்க்கை யெவ்வளவு சுகமா யிருக்குமோ வென்னும் ஆசை பிறந்ததாம். இந்தச் சங்கதிகளை யென்னிடஞ் சொல்லித் தம்முடைய புத்தியைத் திருப்பிக் கொண்டதாகவும், அவள் வீட்டிற்குப் போவதே யில்லை யென்றும் எனக்குக் கை போட்டுக் கொடுத்தார். இது இப்படியிருக்க, அவருக்குச் சப்ஜட்ஜ் அவர்கள் கோர்டில் பிளீடர் வேலை செய்து வைத்தார்.

சங்கர:—உத்தியோகமான பிறகு என்னவாயிற்று?

நாராயண:—வேலையான பிறகு சப் ஜட்ஜ் அவர்கள் அனுக்கிரகத்தால் நிறைய பணஞ் சம்பாதிக்க ஆரம்பித்தார். தேவடியாளோடு சங்கமஞ் செய்தல் தோஷமென்று தோன்றினும், பேசுவதில் ஒரு தோஷமுமில்லை யென்று அந்தப் பாடுகிற தேவடியாளோடு சரசஞ் செய்யத் தொடங்கினர். இப்படிச் சரசம் அதிகமானவுடனே சிலர் அவரது மனோபாவந் தெரிந்துகொண்டு ஒரு நாள் தேவடியாள் ஆட்டக்கச்சேரி ஏற்பாடு செய்தார்கள். அவள் ஆட்டத்தில் அபிநயங் காட்டி ஆடும்போது, வேதாந்தம் அவர்கள் அவளையே கண் இமை கொட்டாது பார்த்துக்கொண் டிருந்தார். அதனைக்கண்ட ஆட்டக்காரி 'இவரைக் கொஞ்சம் ஆட்டி வைக்க வேணும்' என்று நினைத்து, அவாருகே சொல்ப நேரம் தனது கைப் பரிசம் அவர்மேல் படும்படி அபிநயித்தாள். அந்தப் பரிசத்தால், சொர்க்கங் கிடைத்ததுபோல் சந்தோஷித்து, எப்படியாகிலும் ஒரு தரம் அவளோடு சங்கமஞ் செய்யவேண்டு மென்று ஓரிரவு அவள் வீட்டிற்குப் போகப் பாதிதூரம் போய், அப்படிச் செய்வது பாவமென்றெண்ணித் தம் வீட்டிற்குத் திரும்பிவிட்டாரென்று அவர் சிநேகிதரொருவர் என்னிடஞ் சொன்னர்.

சங்கர:—பிறகு என்ன நடந்தது ?

நாராயண:—இப்படிச் சிலநாள் அந்தத் தேவடியாள் முகத்தைப் பார்த்தபோதெல்லாம் அவள்மீது வைத்த ஆசை ஒரு பக்கமிழுக்கவும் அப்படிச் செய்வது மனைவியை வஞ்சித்த பாவமாகுமென்று மனஞ் சொல்லும் போதனை மற்றொருபக்க மிழுக்கவும், அவளாசையை நிவர்த்தி செய்யக் கூடாமல், கடைசியாக நரகவேதனைக் குட்பட்டு நல்லொழுக்கத்தை நழுவவிட்டு, ஒரு தரம் அவள் வீட்டிற்குப் போனு ராம். பிறகு, அவர் மனம் பலவாறு துன்பப்பட்டுப் பத்து நாள் ஒன் றுந் தோன்ருமலிருந்து, அவள் முகத்தை அடிக்கடி பார்த்துக்கொண் டிருந்ததாலும், அவளுடைய மாய வார்த்தைகளைப் பல தடவை கேட்டுக்கொண் டிருந்ததாலும், அவள் மாய வலையிற் சிக்கி, ஒரு மாதமாக அவளைப் பயிரங்கமாக வைத்துக் கொண்டாராம்.

சங்கர:—வேதாந்தம் அவர்களை, அவர் பந்துக்களேனும் சிநேகி தர்களேனும் கண்டிக்க வில்லையா ?

நாராயண:—முதலில், சிலநாள் பரியந்தம் அவருடைய பந்துக் களுக்குத் தமது முகத்தைக் காட்டாமல் திரிந்தார். பிறகு காணப் பட்டு, அவர்கள் சொல்லும் புத்தியைக் கேட்டுப் பேசாம லிருப்பா ராம். இப்போது, தேவடியாளை வைத்துக்கொண்டால் என்ன தோஷமென்று தைரியமாகச் சொல்லி, என்னை நம்பி யிருப்பவளை நான் விடமாட்டேனென்று சொல்லுகிருராம்.

சங்கர:—அவர்களுடைய வலையில் விழுந்த பிறகும் திரும்ப முடியுமா? முடியாது. இனி அவருடைய பேரும் ஊரும் கெடும்படி செய்து கொள்ளத்தான் முடியும்.

நாராயண:—இப்போதே அவர் கெட்டுப் போனுர். துட்டெல் லாம் அவளுக்கே கொடுத்துப் பாழாக்குகிருர். இந்த ஒரு மாதத்தி லேயே 200 ரூபாய் பாழாயிற்று. பெண்டாட்டியைத் திட்டி அடித்து, அவள் கழுத்திலிருந்த அட்டிகையைப் பிடிங்கிக்கொண்டு போய்க் கொதுவை வைத்தாராம். தகப்பன் சம்பாதித்த வெள்ளிச் செம்பு இரண்டையும் நேற்று மாலையில் விற்ருராம்.

சங்கர:—அந்த யோகினி தேவதையின் சம்பந்தம் இப்போது தான் ஆரம்பமானதால் தலைகால் தெரியாமல் துட்டைப் பாழாக்கு கிருர். அவள் தாய் கெட்ட முண்டை.

நாராயண:—கெட்ட முண்டை யென்று மெதுவாய்ச் சொல்லு கிறீரே! அவள் சங்கதியைக் கேளும். இதுவரையும் எத்தனையோ இலக்ஷாதிகாரிகளைப் பிக்ஷாதிகாரிகளாகச் செய்து, முட்டிசெம்பைக் கையிற் கொடுத்து, வீட்டு வாசற்படியண்டை வாராதபடி துரத்தி விட்டாள், வேதாந்தம், நல்ல புத்திசாலி, நல்ல படிப்பாளி, நல்

லொழுக்க முடையவரென்று சந்தோஷித்துக்கொண் டிருந்தோம். அதற்கு மாருக இந்தக் கதியானுர்.

சங்கர:—இனி என்னென்ன நடக்குமோ? இவ்வளவோடே புத்தி வந்து திரும்பினுல் உத்தமம்.

நாராயண:—இனி திரும்புவது முற்றும் பொய். இதுவரையும் இந்த விருத்தியில் பிரவேசித்தவர்களைப் பார்க்கவில்லையா யென்ன? இவரென்ன உசத்தி? இன்னு மிரண்டுநாள் போனபிறகு, வீடு வாசல் விற்று, எல்லா ஆபாச காரியங்களுக்கும் உட்பட்டு, உடம்பைக் கெடுத்துக்கொண்டு, எப்போதோ வியாதியால் தேகத்தை விடுவார். பிறகு பெண்டாட்டி சோற்றுக்குக் காலணுவில்லாமல், பலானவன் பெண்டாட்டி யென்று பலபேர் சொல்ல முட்டி யெடுத்துப் பிழைப்பாள்.

சங்கர:—போனது போகட்டும், ஒரு தரம் வேதாந்தமவரை நம்முடைய வீட்டிற் கழைத்து வந்து இரகசியமாக வைது புத்திமதி சொல்லித் திருப்புவதற்குப் பிரயத்தினஞ் செய்வோம். கேட்காமற் போனுல் அவருடைய கர்மம் நாமென்ன செய்வது. எனக்கு வேலையிருக்கிறது, போய் வருகிறேன். (என்று போய்விட்டார்)

காட்சி 2

இடம்:—பட்டண மண்டபம்.

காலம்:—மாலை 4 மணி.

(பென்ஷனர், டிஸ்டிரிக்ட் முனிசீப் வேதாந்தம் அவர்கள், நாராயண சாஸ்திரியார், சங்கர ராயர், ஸ்ரீ காந்தர் முதலியவர்களும் இன்னுஞ் சிலரும் பிரவேசம்)

வேதாந்தம்:—என், சாஸ்திரியார் அவர்களே! இன்றைய தினம் 3 மணிக்கு மீடிங்கென்று தெரிவித்தால், இன்னும் எல்லோரும் வந்தார்களில்லை. இவர்கள் தானு, இன்னும் யாராகிலும் வருகின்றவர்க ளிருக்கின்ருர்களா?

நாராயண:—நம்மவர்கள் சங்கதி தெரியாதா? 3 மணிக்கென்ருல் 5 மணிக்குத்தான் வருவார்கள். கொஞ்சம் பொறுங்கள், எல்லோரும் வருவார்கள். நீங்கள் சபை சேர்க்கும் உத்தேசமென்ன?

வேதாந்தம்:—நீங்களும், உங்களைச் சேர்ந்தவர்களும் தேவடியாட்கள் விஷயத்தில், ஊரில் வேண்டிய மட்டுங் கடுபிடி செய்து வந்தீர்கள். அந்த விஷயத்தில் நான் உங்களைக் காட்டிலும் அதிக அநுபவ முடையவன். ஆகையால், எனக்குத் தெரிந்துள்ள சங்கதிகளைச் சொல்வதற்கே உங்களை யெல்லாம் வாவழைத்தேன்.

நாராயண:—தாங்கள், எங்கள் அபிப்பிராயத்துக்கு அநுகூலமாகவா அல்லது பிரதி கூலமாகவா சொல்லப் போகிறீர்கள்?

சோமுகுருக்கள்:—தப்பாமல் அவர், எங்கள் பக்ஷமாகவே வாதிப்பார். உங்களுக்கு அநுகூலமாகச் சொல்லுவாரா என்ன? உலகாநுபவ முள்ளவர்களெல்லாம் எங்கள் பக்ஷந்தான் பேசுவார்கள்.

வேதாந்தம்:—யான் எந்தப் பக்ஷம்பேசுவதும், எல்லோரும் வந்து சேர்ந்தபிறகுதான் தெரியவரும், இதற்குள்ளாக வேறு சங்கதி யேதாகிலும் பேசுவோம்.

சோமுகுருக்கள்:—ஸார்! நீங்கள் பென்ஷன் வாங்கி இரண்டு வருஷமாகிறதுபோ லிருக்கிறது. நீங்கள் முன்சீப் வேலையை வெகு சாமர்த்தியமாகவும் நீதியாகவும் பார்த்து வந்தீர்களல்லவா?

வேதாந்தம்:—இந்த மார்ச்சு மாதத்தோடு இரண்டு வருஷத்திற்கு மேல் 3 மாதமாயிற்று. நான் முனசீப் வேலை பார்த்தகாலத்தில் மாதத்திற்கு 1000 ரூபாய் சம்பாதிப்பேன். வேலையை விட்ட பிறகு, முன் சம்பாதித்ததில் ஒரு துண்டு பலகாறை கூட யில்லை. இன்னும் எனக்கு 2000 ரூபாய் உருணமிருக்கிறது.

ஸ்ரீகாந்தர்:—நீங்கள் இவ்வளவு சம்பாதித்த போதிலும் யாரையும் வருத்தப்படுத்தி வாங்குபவரல்லர். அது எனக்குத் தெரியும்.

வேதாந்தம்:—யாரையும் நிர்ப்பந்தஞ் செய்யாமற் போனல், தம்படி கொடுக்க மாட்டார்கள். வக்கீல்களோடும் சிநேகமாக விருந்து, அவர்கள் எவ்வளவு நேரங் கத்தி நியாயவாதஞ் செய்தாலும் நானென்றும் பேசுவதில்லை. அதனல், ஒரு மாதிரியாக அந்தக் காலம் நடந்தேறி வந்தது.

சோமுகுருக்கள்:—ஸார்! உங்கள் கோர்ட்டுக்கு எதிரில் ஜாயிண்ட் மாஜிஸ்டிரேட் கோர்ட் (Joint magistrate court) இருந்தாலும், ஒன்றும் இலக்ஷியமில்லாமல், அவ்வளவு காலம் உங்கள் கோர்ட்டு நடந்தேறி வந்ததைப் பார்த்தால் நீங்கள் வெகு சாக்கிரதையாய் வேலை செய்ததுபோல் காண்கிறது.

வேதாந்தம்:—என்ன சாக்கிரதை யிருக்கிறது. என்னல் கூடுமானவரையும் நியாயமுள்ள பக்ஷத்தில் வாங்கிக்கொண்டு, என்னுடைய ஜட்ஜ்மெண்டு ஐகோர்ட்டுக்குப் போனலும் திரும்பாதிருக்கும்படி எழுதுவேன். நான் வாங்குகிறவனென்று ஐகோர்ட்டு ஜட்ஜிகளுக்குந் தெரியும், சிவில் ஜட்ஜிக்குந் தெரியும். ஆயினும் நானெப்போதும் அகப்படுகிறவனல்லன். 5, 10 கொடுப்பவன் பிராது பண்ண மாட்டான். அப்படிப் பண்ணினலும் அவனுக்கே சிக்ஷை வரும்.

நாராயண:—அதோ எல்லோரும் வருகிறுர்கள்.

(விவேகராஜா முதலிய 10-15 பெரிய மனுஷர்கள் பிரவேசம்)

வேதாந்தம்:—சபையோர்களே! எல்லோரும் வந்து சேர்ந்த னர். விவேகராஜா அவர்களை, நமது சபைக்குத் தலைவராக ஏற்றுக் கொள்ள உங்கள் சம்மதி கேட்கின்றேன்.

நாராயண:—அப்படியே சபையோ ரெல்லோரும் ஏகமனதாய்ச் சம்மதிக்கின்றுர்கள்.

விவேகரா:—(எழுந்து நின்று சபையோரைப் பார்த்து) சபை யோர்களே! கல்வியிலும், நாகரிகத்திலும், அனுபவத்திலும், மற்ற விஷயங்களிலும் தேர்ச்சி பெற்றுள்ள நீங்கள் என்னைச் சபைத் தலைவனுக நியமித்ததற்காக நான் சந்தோஷிக்கின்றேன். ஆனுல், நீங்கள் என்னிடமிருந்து எதை எதிர்பார்க்கின்றீர்களோ அதனைப் பூர்த்தி செய்வேனே என்னமோ எனக்குத் தெரியாது. உங்களு டைய அனுபவங்களையும் அபிப்பிராயங்களையுங் கேட்டபிறகு என் அபிப்பிராயத்தைச் சொல்லக்கூடியவனு யிருக்கலாமென்று நினைக்கின் றேன். இப்போது கனம் வேதாந்தம் அவர்கள் பேசுவார்.

வேதாந்தம்:—(எழுந்து நின்று) சபைத் தலைவரவர்களே! சபையோர்களே! என்மீது தயை செய்து பெரியோர்களாகிய நீங்கள் வந்திருக்கிறீர்கள். இச் சபையின் நோக்கம் என்னவென்று உங்களுக்குந் தெரியும், எனக்குந் தெரியும். அதைப்பற்றிச் சிலவற் றைச் சொல்ல விரும்புகிறேன். அந்த விஷயத்தில் எனக்கிருக்கிற அனுபவம் வேறொருவருக்கும் இராதென்று நினைக்கின்றேன். யான் ஜில்லா முன்சீப் வேலை பார்த்தகாலத்தில், என் சம்பளம் போக ஒரு மாதத்திற்கு ஏறக்குறைய 2000 ரூபாய் சம்பாதித்தேன். நம்ப வேண்டும். அவ்வளவு பணம் சம்பாதித்தாலும், இன்னுஞ் சம் பாதித்தாலும், இன்னுஞ் சம்பாதிக்கவேண்டு மென்கிற ஆசையே யிருந்தது. என்னுடைய பணமெல்லாம் தேவடியாட்கள் திருவடிப் பூசைக்கே செலவிட்டேன். அப்போது யார் என்ன புத்தி சொன் ஞலுங் கேட்டதே யில்லை. தேவடியாளைப் பார்த்தால் எனக்குச் சொர்க்கம் அகப்பட்டதுபோ லிருக்கும். அவர்கள் மாயையில் விழுந்து உலகந் தெரியாம லிருந்தேன். தேவடியாள் ஒன்று கேட் டால் நான் பத்தாகக் கொடுத்தேன். பணத் திமிரால் பாழானேன். கடன் மேலிட்டது. இந்தத் தொந்தரையால் வாதைப்படுவது மன்றி வியாதிகளால் உடம்பைப் பாழாக்கிக் கொண்டேன். இப்போதும் வியாதியால் துன்பப்படுகிறேன். நான் படும் வேதனையைப் பார்த் தால், உயிர் துறந்தால் நலமாயிருக்கு மென்று ஒவ்வோர் சமயத்தில் தோன்றுகிறது. நிர்த்தோஷிகளான என் மூன்று குழந்தைகள்,

என் தப்பிதத்தால் உண்டான வியாதிகளால் வரிசையாக மாண்டனர். பொறுமையே உருவமாக வந்த என் மனையாளும், திடீரென்று தேகஜாட்டியத்தால், சில நாள் மகா வேதனைக்குள்ளாகிப் பாயும் படுக்கையுமா யிருந்தாள். இப்போது நானும் இந்த லோகத்தை விட்டு நீங்கச் சித்தமா யிருக்கின்றேன். போகும்போது நம்மோடு வருவது என்ன? பாவம் ஒன்றே. நான் இவ்வளவு தூரங் கெடுவதற்குக் காரணம், நான் உத்தமி யென்று என்னறியாமையால் நம்பியிருந்த அந்தத் தேவடியாளே. அதெப்படி யென்று கேட்பீர்கள். நான் கோர்ட்டுக்குப் போனபிறகு, அவளிடம் ஒருவர் பின் ஒருவராக வரும் புருஷர்கள் பலர். நான் வீட்டிற்கு வரும் நேரந் தெரிந்து, தன்னிடம் ஒருவரையும் இருக்க வைக்கமாட்டாள். நான் வந்ததும் என்மீது உண்மையான அன்புடையவள்போல் பசப்பு வார்த்தைகளால் என்னை மயக்கி விடுவாள். அது தேவடியாட்களுக்கு வழக்கமென்று தெரிந்துகொள்ள மாட்டாத கற்றறி மூடனா யிருந்தேன். பிறகு, சில பெரியோர்களால், அவளுடைய கள்ள நடவடிக்கைகள் தெரிந்து கொண்டு, அவளை விட்டு நீங்கினேன். அப்படி அவளை விட்டு நீங்கியும் நான் சுக மடைந்தேனா ? இல்லை கேளுங்கள்:—

அன்பர்களுக்கு

இதுவரையில் நமது 'தமிழர'சில் தொடர்ச்சியாக வெளிவந்த 'தாசிகளும் தாசிகாந்தர்களும்' என்னும் நாடகத்தைப் படித்துக் களித்திருப்பீர்கள். 'தமிழரசு'க்கு இம் மாதத்தோடு நான்காம் ஆண்டு முடிகிறதாலும், நாம் இந் நாடகத்தைத் தனிப் புத்தகமாக அச்சிட்டு வருவதாலும் இந்த இதழோடு இந் நாடகத்தைப் பிரசுரிக்காது நிறுத்தி விடுகிறோம்.

சிறந்த கருத்துக்களும், அரிய படிப்பினைகளும் நிறைந்த இந் நாடகத்தின் சுவை மிகுந்த பாகங்கள் பிற்பகுதியிலேயே வருவதால் அன்பர்கள் இந் நாடகம் முழுவதையும் வாசிக்கத் தவறக்கூடாது. அன்றியும் குறைந்த விலையில் கொஞ்சம் பிரதிகளே நாம் அச்சிடத் தீர்மானித்திருப்பதால் நேயர்கள் இப் புத்தகத்திற்கு முந்திக்கொள்வது நலம். தங்கள் ஆடரை முன்னரே கடிதம் எழுதிப் பதிவு செய்து கொள்வார்களாக.

துப்பறி நிபுணன்

[அப்பு]

'உஸ்! சப்தம் செய்யாதே!! பேசாமலிரு!!!' என்ருன் ராமலிங்கம்.

என்னையும் மெதுவாகக் கூட்டிக்கொண்டு பக்கத்திலுள்ள புதரின் அருகே சென்று மறைவாக இருவர் பேசுவதை உற்றுக் கேட்டோம்.

ஒருவன்:—சே, சே! கட்டாயம் சீனிவாசைக் கொலை செய்ய வேண்டும்!

மற்றவன்:—வேண்டாம்! வேண்டாம்! சீனிவாசைக் கொலை செய்ய வேண்டாம்! உனக்குத் தெரியாது, பிறகு பார் எவ்வளவு கஷ்டமென்று! சீனிவாசனை ஏன் கொலை செய்யவேண்டும்! அவன் இது வரையிலும் மிக்க நல்லவனுகவே காணப்பட்டான்!

ஒருவன்:—ரொம்ப தெரிந்தவனைப்போல கண்டபடி பிதற்ருதே! நீ கட்டாயம் நான் சொல்வதற்கு உடன்படவேண்டும். துப்பறியும் சிங்கம் கணேசுக்கு வேலை வேண்டாமா! இதில் அல்லவா அவன் சாமர்த்தியத்தைப் பார்க்கவேண்டும், என்று புறப்பட்டுச் செல்ல ஆயத்தமானுர்கள்.

ராமு, என்னை மெதுவாக அப்புறம் அழைத்துச் சென்று, 'அப்பு! நீ என்னுடன் வருகின்ருயா! சீனிவாசைக் கொலை செய்ய சதியாலோசனை செய்யும் அந்தப் பரம சண்டாளர்களைப் பின்தொடரப் போகின்றேன். என்னடா விழிக்கிருய்! நீ ஒரு பெரிய தொடை நடுங்கி அல்லவா! இந்தா சாவி! நான் அவர்களைப் பின்தொடர்ந்து விட்டு மெதுவாகத்தான்

வருவேன். நீ செல்!' என்று சாவியை என் கையில் எறிந்து, பேசிக் கொண் டிருந்தவர்கள் எழுந்து செல்வதைக் கண்டு, அவசரமாகச் சென்ருன்.

ராமலிங்கம் துப்பறியும் தொழிலில் புகுந்து நாலைந்து கேசுகளில் தீவிரமாக வேலைசெய்து, சர்க்காரிடமிருந்து தங்கத் தோடா பரிசு பெறக் கங்கணம் கட்டியுள்ளான்.

அன்று மாலை, நாங்கள் இருவரும் பொழுது போக்குவதற்காக இப்ராஹீம் பார்க்குக்குச் சென்றிருந்தோம். அவ்விடத்தில்தான் முன்பு கூறியவாறு இருவர் சம்பாஷிப்பதைக் கேட்டோம். ராமலிங்கம் ஓர் துப்பறி நிபுணர் அல்லவா! அதிலும் கொலைக்கேஸ் என்ருல் அதன் துப்பை விளக்குவதின் கீர்த்தியே கீர்த்தி! என்னை ஒரு பெரிய தொடை நடுங்கி என்று சொல்லி விட்டான். நான் சிவ சிவா வென்று அறைக்குச் சென்று, சுகமாக சாப்பிட்டு விட்டு, ராமுவின் வரவை எதிர்பார்த்த வண்ணமாகவே யிருந்தேன்.

ராமலிங்கம் உள்ளே நுழைந்தான். அவன் முகம் பிரகாசமாக புன்னகை தவழ்ந் திருந்தது. என்னைப் பார்த்து, 'என்ன ஸார் தூக்கம் போட்டாய் விட்டதோ ! மொத்தத்தில் நீ ஒரு சுகவாசி யப்பா! என் தலை விதி இப்படி துப்பு துலக்குவதில் பைத்தியம் பிடித்து அலையச் செய்கின்றது. ஆனல், இன்னும் சில நாட்களில் என்னிடத்தில் ஒரு தங்கத் தோடாவை நீ பார்க்கக்கூடும்!' என்ருன்.

நான் உடனே, 'ராமு வெளியில் போய்விட்டுவந்த செய்தி என்ன வாயிற்று' என்று வினவினேன்.

'பொழுது விடியட்டும். நீ மட்டும் பயப்படாமல் என்கூட வா! வேடிக்கை பார்க்கலாம்! கொலை செய்ய உத்தேசித்த புலிகள் கூட்டில் அடைபடுவதை. இரண்டு சண்டாள பிரம்மஹத்திகளும் மேலப் புலிவார் ரோட்டில் 6-நெம்பர் வீட்டில் குடி யிருக்கின்றனர். பின் தொடர்ந்து வேண்டிய சங்கதிகளை உளவறிந்து கொண்டு வந்துவிட்டேன். பாவம்! முட்டாள் பிணங்கள்! போயும், போயும் என் காதில் விழும்படியாகவா பார்க்கில் வந்து ஆலோசிக்க வேண்டும். ஆனல், பின்பு, நான் தங்கத்தோடா பரிசு எப்படிப் பெறுவது. சீனிவாஸ் கொலைபட்டு இறப்பதை எப்படித் தடுப்பது! எல்லாம் விதியப்பா! முட்டாள் தனமாகவா பெரியோர்கள், 'ஒன்று நினைக்க அது ஒழிந் திட்டொன்ருகும்' என்றும், 'நண்ணிய கருமம் எண்ணித் துணிக' வென்றும் கூறினர்' என்று ஒரு பெரிய சொற்பொழிவு புரிந்து, காலையில் வேலை ஜாஸ்தியிருக்கிற தென்று படுத்துறங்கலானன்.

மறுநாட் காலையில் இருவரும் எழுந்து, காலைக்கடன்களை முடித்துக்கொண்டு, நேராக போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்ருேம். ராம

லிங்கம் ஸ்டேஷன் இன்ஸ்பெக்டருடன் கொஞ்சநேரம் எதோ பேசி விட்டுத் தன்னுடன்கூட இரு கான்ஸ்டேபிள்களை அழைத்துக் கொண்டு வந்தான். எல்லோருமாக ஒரு வண்டியி லேறிக்கொண்டு மேலப் புலிவார் ரோட்டிலுள்ள 6-நெம்பர் வீட்டிற்குச் சென்றோம். ராமலிங்கம், மட மட வென்று ஒரு அறைக்குள் நுழைந்தான்.

அங்கே முந்தின மாலையில் பார்க்கில் பேசிக்கொண் டிருந்த இரு வரும் உட்கார்ந்துகொண் டிருந்தனர். முன்பின் எதிர் பாராமல், திடீரென்று தங்கள் அறையில் போலீஸ்சேவகர்கள் நுழைந்தவுடன், பேந்தப் பேந்த விழித்துக்கொண்டு நாக்குத் தடுமாறி உளரிக் கொண்டே,

'எ....ன்....ன........ ஸா........ர்........எ... ....ன்ன........வி........ சேஷம்' என்றனர்.

உடனே ராமலிங்கம் மிக்க விறைப்புடன் அவர்கள் முன் சென்று, 'உங்கள் இருவரையும் சீனிவாஸைக் கொலை செய்ய சதியாலோசனை செய்த குற்றத்திற்காகக் கைதி செய்கின்றோம்! வாய் திறவாமல் எங்கள்கூடக் கிளம்புங்கள்' என்றான்.

இருவரும் அலறிப் புடைத்து, 'என்ன கொலையா! சீனிவாஸையா! சீனிவாஸ் என்பவர் யார்! ஐயோ! நாங்கள் ஒரு பாவத்தையும் அறியோமே! எங்கள் குலதெய்வத்தின் மேலாணையாக அப்படி நாங்கள் சதியாலோசனை செய்ய வில்லை!' என்றனர்.

'சபாஷ்! பலே பேஷ்! யாரோட்டங்காணும் இந்த அளப்பெல்லாம்! குழந்தைகள், வாயில் விரலை வைத்தால்கூட கடிக்கத்தெரியாதல்லவா! மூடுங்காணும் வாயை. உங்களுடைய வள்ளல்களெல்லாம் தெரிந்துவிட்டது. போலீஷ் ஸ்டேஷனில் வந்து உங்களுக்குத் தெரிந்த ஜகஜால புரட்டல்லாம் செய்து அளக்கலாம் ஜல்தி நடவுங்கள். கான்ஸ்டேபிள்ஸ் என் நிற்கின்றீர்கள். என்று மிக்க ஆத்திரத்துடன் ராமலிங்கம் உரைத்ததும், அவர்கள் வண்டியிலேற்றப்பட்டு, போலீஸ் ஸ்டேஷனுக்கு இட்டுச் செல்லப்பட்டனர்.

போலீஸ் ஸ்டேஷனில் இன்ஸ்பெக்டர் அவர்கள் இருவரையும் பார்த்து 'நீங்கள் இருவரும் நேற்று மாலை ஐந்து மணிக்கு இப்ராஹீம் பார்க்கில் சீனிவாஸ் என்பவரைக் கொலை செய்ய சதியாலோசனை செய்ததுண்டா' என்று வினவினர்.



அவர்கள் இருவரும் உடனே விழுந்து விழுந்து சிரித்து 'ஸார்! ஸார்!! இப்பொழுதல்லவா தெரிந்தது! ஆமாம், நேற்று மாலை நாங்கள் இருவரும் ஒரு கொலையைப் பற்றி சதியாலோசனை செய்ததுண்டு. ஆனால்! நாங்கள் இருவரும் ஒரு துப்பறியும் நாவல் எழுதி வருகின்றோம்! அதில் சீனிவாஸ் என்று ஒருவருடைய பெயர் கதையில் வருகின்றது. கதையை எப்படி கொண்டு போகலாம்! சீனிவாஸ் கொலை செய்யப்படுவதாக எழுதலாமா, அல்லது எப்படி முடிக்கலாமென்றே, நேற்று பார்க்கில் பேசிக் கொண்டோம்! தீவிரமாய் நம்புவதற்கு யாராவது ஒரு ஆளை அனுப்புங்கள். எங்கள் அறையின் மேஜையின் மீது கதை எழுதிய காகிதங்கள் அப்படியே கிடக்கின்றன. அவைகளைக் கொண்டு வந்து தாங்கள் பரிசோதித்துக் கொள்ளலாம்' என்று ஒரு பெரிய கவலை நீங்கியவர்களைப் போல் பெருமூச்சு விட்டனர்.

அப்படியே கதை யெழுதிய காகிதங்களும் வரவழைக்கப்பட்டு அவர்கள் சொல்வது உண்மையென விளங்கியது. இன்ஸ்பெக்டர் அவர்களைத் தவறாக எண்ணிக் கைதி செய்ததிற்காக மன்னிப்பு கேட்டுக் கொண்டார்.

இன்ஸ்பெக்டர் எங்களுக்குத் தங்கத்தோடா இரண்டு கொடுத்தார். பட்டணம் கல்தா கொடுத்தொன்றும் வெளியில் தள்ளவில்லை! நீங்கள் அவ்வாறு கேள்விப்பட்டால் அதெல்லாம் சுத்தப் பொய்! நிரூபிக்க வேணுமென்றால் வந்து பாருங்களேன். எங்கள் சிங்கம் துப்பறி நிபுணர் ராமலிங்கம் பிள்ளை இன்னும் தம் தொழிலை விட்டபாடில்லை!

முந்துங்கள் ! முந்துங்கள் !!

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார்

எழுதிய

அனுபவ வைத்திய நூல்

இரண்டு பாகங்களும் உங்களிடம் இருக்கின்றனவா ? இல்லையேல் உடனே எழுதி வரவழைத்து வைத்துக் கொள்ளுங்கள். இப் புத்தகங்கள் ஒவ்வொரு வீட்டிலும் தவறாது இருக்க வேண்டியது இன்றியமையாததாகும். இந் நூல்கள் வீட்டில் இருப்பது குடும்ப வைத்தியர் ஒருவர் உங்கள் இல்லத்தில் கூடவே யிருப்பதுபோ லாகும். நோய் உண்டான காலத்தில் நீங்களே இந் நூல்களின் உதவியைக் கொண்டு சிகிச்சை செய்து கொள்ளலாம். இந் நூல்களில் எல்லா நோய்களின் விவரமும், அவைகள் உண்டாவதற்கு முன் தோன்றும் குறிகளும், அவைகளைப் போக்கும் சுலபமான வழிகளும், அதற்குரிய எளிய மருந்து வகைகளும் காணக் கிடைக்கும்.

அனுபவ வைத்திய நூலின் இரண்டு பாகங்களையும் வைத்துக் கொண்டே எவரும் ஒரு சிறந்த வைத்திய ராகலாமென்பது திண்ணம். சொற்ப பிரதிகளே கைவச மிருக்கின்றன. முந்துங்கள்.

முதல் பாகம் விலை	ரூபா	1—0—0
இரண்டாம் பாகம்	,,	1—0—0
இரண்டு பாகங்களும் சேர்ந்து	,,	1-12—0

தபால் சார்ஜ் வேறு

சிறந்த வரலாறு உயர்ந்த கருத்துகள்

லெனின்

லெனினது வாழ்க்கை, தோற்றம், செயல், குணம் முதலிய விவரங்கள் அனைத்தையும் இந் நூலில் பரக்கக் காணலாம். அவரது திருவுருவப் படமும் இதில் சேர்க்கப் பட்டுள்ளது. கிளேஸ் காகிதம் 36 பக்கம் விலை அணு 2.

வேண்டுவோர் $2\frac{1}{2}$ அணு தபால் ஸ்டாம்பு அனுப்பவும்.

'தமிழரசு' புத்தகாலயம்,

31, வைத்தியநாத முதலி வீதி, சென்னை.

வெளி வந்துவிட்டது! வெளி வந்துவிட்டது!!

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்கள்

எழுதிய

ஜீவ ரகசியம்

என்ற அரிய ஆராய்ச்சி நூல் வெளிவந்துவிட்டது

உயிரை வளர்ப்பதற்கும், உய்விப்பதற்கும் உரிய வழிகளைப்பற்றி இந்நூலில் பெரிதும் ஆராயப்பட்டிருப்பதால் இதற்கு 'ஜீவரகசியம்' என்ற பெயர் சூட்டப்பட்டுள்ளது.

இதில் டாக்டர். முதலியார் அவர்கள் நீண்ட காலமாக அனேக சாதுக்களிடத்திலும், யோகிகளிடத்திலும், அறிஞர்களிடத்திலும் பழகி அவர்களிடமிருந்து அறிந்து கொண்ட விஷயங்களில் தமது அறிவிற்கும் அனுபவத்திற்கும் உண்மையெனப்பட்ட பல அரிய பொருள்களை ஆராய்ந்திருக்கிறார்கள்.

இந் நூலில் உயிர் வாழ்வதற்கு மிகவும் அவசியமான சுகத்தை—தேக சுகம், மனோ சுகம், ஆன்ம சுகம் என மூன்று பிரிவாக வகுத்து ஒவ்வொரு பிரிவைப் பற்றியும் விரிவுபடுத்தி எழுதப்பட்டிருக்கிறது. நீராடும் நெறி, மூச்சு விடும் வகை, சூரியனால் அடையும் பயன், காற்றின் உபயோகம் சரீர நிலை அறிதல், வழிபாடுகளின் உண்மைத் தத்துவங்கள் முதலான பல இன்றியமையாத பொருள்களைப் பற்றியும் இதில் ஆராயப்பட்டுள்ளது. மற்றும் இப் புத்தகத்தில் சகல மதங்களின் உற்பத்தியைப் பற்றியும், அவற்றின் கருத்துக்களைப் பற்றியும் அறியலாம்.

இந்நூலை ஒவ்வொருவரும் படித்தறிய வேண்டியது மிகமிக அவசியமாகும்.

இதன் விலை ரூபா 1.

தபால் சார்ஜ் வேறு.

'தமிழரசு' புத்தகாலயம்,

31, வைத்தியநாத முதலி வீதி, சென்னை.

காங்க்ரீன்

என்னும்

இரண சஞ்சீவி

இம் மருந்தானது எல்லாவித இரணங்களையும், கட்டிகளையும் ஆற்றும். மதுமேக நோயால் பீடிக்கப்பட்டவர்களுக்குக் காணும் இராஜக் கட்டியானது எவ்வளவு அபாய நிலையில் இருந்தாலும் குணமாய் விடும். ஆஸ்பத்திரிகளில் பார்த்து தீராதென அனுப்பி விட்ட கேசுகளை ஆச்சரியகரமாய் குணம் செய்யும். அநேக ஆங்கில வைத்தியர்கள் இதை உபயோகிக்கின்றனர்.

ஆஸ்பத்திரிகளில் பெரிய டாக்டர்களாக இருக்கும் என் சகோதர வைத்தியர்களுக்குத் தெரிவிப்பதாவது: உங்கள் ஆஸ்பத்திரிகளிலாவது அல்லது தனிப்பட்டாவது பார்க்கப்பட்ட ராஜ கட்டிகள் (சைனஸ்) வைத்து (டையபடிக் கோமா) வந்து இனி இக்கேசு பிழைக்காது என்று நினைக்கும் சமயம் நீங்கள் கைவிட்ட சமயம் உங்கள் (இன்சொலின்) குணம் தராத காலத்திலாவது இதை உபயோகித்து உயிரைக் காப்பாற்றுங்கள். ஆஸ்பத்திரிகளில் ஆப்பரேஷன் செய்யாமல் இரணங்களை ஆற்றி விடுங்கள். உங்களுக்கு இதன் குணம் தெரிந்துக் கொள்ளும் வரையில் உங்களால் முடியாது என்றபோது என்னிடமாவது அனுப்புங்கள். உங்கள் பார்வையும் வைத்துக் கொள்ளுங்கள். முக்கியமாய் ஜெனரல் ஆஸ்பத்திரி, ராயப் பேட்டை ஆஸ்பத்திரி, டிஸ்ட்ரிக்ட் ஆஸ்பத்திரிகளிலிருக்கும் டாக்டர்களுக்கும் டாக்டர் S. ரங்காச்சாரியவர்களுக்கும் கிருஷ்ணசாமி ஐயங்கார் அவர்களுக்கும், பாண்டலே அவர்களுக்கும் ராம ஐயங்கார் அவர்களுக்கும் இந்தியன் மெடிகல் ஸ்கூல் பிரின்சிபால் அவர்களுக்கும் வற்புறுத்தி மறு முறையும் கேட்டுக் கொள்வதாவது உங்களால் முடியாது என்று எண்ணிய பிறகாவது எங்கள் இரண சஞ்சீவியை உபயோகித்துப் பாருங்கள்.

இம்மருந்து சேத்துப்புண், சொரி சிரங்கு, முகத்தில் காணும் மோகப்பருவு இவைகளை நீக்கும்.

ஆராத மேகப்புண், மேகப்படை கட்டி இவைகளுக்குப் பூச இரணம் ஆறும். மூல வியாதிக்கு மேல் பூசினால் இரணம் ஆறிவிடும்.

இம்மருந்து ஒவ்வொரு வீட்டிலும் டாக்டர்களிடத்திலும், அவசியம் இருக்க வேண்டியது. உலகில் ஒப்பற்றதாய் விளங்கும் மருந்து. விலை புட்டி 1-க்கு ரூபா 1.

விலாசம்:—

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார்,

31, வைத்தியநாத முதலி தெரு, சென்னை.

இனி நீங்கள் கவலைப்பட வேண்டாம்

நீங்கள் பசி யின்றி கஷ்டப்பட்டாலும், இருதய வியாதி, பித்த சோகை, வீக்கம், மதுமேகம், பாரிச வாய்வு, க்ஷய இருமல் சுரம் இவற்றில் எந்த நோயால் நீங்கள் பீடிக்கப்பட் டிருந்தாலும்,

இன்பசாரம்

புருஷத் தன்மையைத் தரும்

புத்திர உற்பத்தியை யளிக்கும்

என்ற எங்கள் ஒப்பற்ற உயரிய மருந்தை வர வழைத்து உபயோகியுங்கள். உங்கள் நோய் உடனே பரிதி முன் பனிபோல் நீங்கி விடும்.

இன்பசார மாத்திரையை இரவில் படுக்கைக்குப் போகும்போது தூள் செய்து வாயில் போட்டுக்கொண்டு பால் சாப்பிட்டுவரின் பசி அதிகரிக்கும்; நரம்புகளுக்கு உணர்ச்சி ஏற்படும்; இரத்த விருத்தி யுண்டாக்கும். இம் மாத்திரையானது தங்கம் ஒன்றையே செந்தூரம் செய்து பவளம், முத்து, காரோபா முதலான சத்து வஸ்துக்களுடன் விதை தினுசுகளும் சேர்த்துத் தயார் செய்யப்பட்டது.

இன்பசாரம் ஆணுக்கு இழந்துபோன ஆண் தன்மையை அதிகரிக்கச் செய்வதோடு இரு பாலர்களின் இச்சையையயும் பூர்த்தி

செய்து கொள்ள வேண்டிய வலிமையை அளிக்கும். நெடுநாள் குழந்தை யில்லாத தம்பதிகளுக்குப் புத்திர சந்தானத்தையும் உதவும்.

இன்பசார மாத்திரையானது க்ஷய இருமலையும் சுரத்தையும் 10 நாளில் குறைத்து விடுகின்றது. க்ஷயரோகத்தைப் போக்குவதில் இதற்கு நிகரான மருந்து இல்லை என்பது நிச்சயம்.

இன்பசார மாத்திரைகள் ஒடிந்த எலும்பைக் கூட்டுவதிலும் சொர்ப்பன ஸ்கலிதத்தை நீக்குவதிலும், சரீரத்திலுள்ள இரணத்தை ஆற்றுவதிலும் சிறந்தது. நூற்றுக் கணக்கான நல்லுரைகள் பெற்றுள்ளது. ஒரே வேளையில் குணம் தெரியும்.

விளம்பர மருந்துகளைப் போல் இம்மருந்தை நினைத்தலாகாது. இதன் அரிய குணத்தை டாக்டர்களும்; நோயாளிகளும் ஏராளமாக அனுபவித்துப் புகழ்ந்திருக்கிறார்கள்.

இன்பசார மாத்திரையைப்பற்றிய
சில நற்சாக்ஷிப் பத்திரங்கள்

குழந்தை பிறந்தது

கனம் டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு,

நான் இருபது வருஷமாக காசி, இராமேஸ்வரம் முதலான இடங்களுக்குச் சென்று பல தானங்களைச் செய்தும் எனக்குப் புத்திர சந்தான மில்லாத காரணத்தால் தங்கள் மருந்தால் புத்திர உற்பத்தி யுண்டானால் இருபது ஆயிரம் கொடுப்பதாய் வாக்களித்தேன். தங்களுடைய இன்பசார மாத்திரையின் பெருமையை என்னென்று புகழ்வேன்.

எனக்கு உள்ள சொத்து ஒன்பதாயிரம் தாளக்கூடிய வீடு ஒன்றுதான். என்னிடம் வேறு பணம் கிடையாது. வேண்டுமானால் கிருஷ்ண அண்டு கம்பெனியாரையும் கங்கிபாட்டி சுப்பிரமணியம் செட்டியாரையும் கேட்டுக் கொள்ளுங்கள்.

தங்களுடைய மருந்தால் எனக்கு ஆண் குழந்தை ஒன்று பிறந்தது. இத்துடன் 4 சவரன் அனுப்பி யிருக்கிறேன். பெற்றுக் கொண்டு என்னை மன்னிக்கவும்.

தங்கள் அன்புள்ள,

தேவரப்பட்டு அப்பய்ய செட்டியார்.

ஆண் தன்மை அடைந்தேன்

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்கட்கு,

அன்புள்ள ஐயா, தாங்கள் கொடுத்த இன்பசாரம் என்னும் மருந்து என்னை வீர புருஷனைச் செய்து விட்டதை நோக்க நான் அடைந்த சந்தோஷம் சொல்லுந் தரத்த தன்று.

எனது முதல் மனைவி 10 வருட மிருந்து காலமானாள். இரண்டாவது மனைவியை எனக்கு என் உறவினர்கள் கட்டி வைத்தார்கள். விவாகமானதி லிருந்து என் மனம் அடைந்த துன்பம் அளவிலடங்காது. எனது நண்பர் திண்டுகுறத்தி எதிராஜுலு செட்டியாரால் தங்களிடம் வந்து இன்பசாரம் என்னும் மருந்தை உட்கொண்டதால் எனக்கும் என் குடும்பத்திற்கும் ஆனந்தம் கிடைத்தது.

என்னுடைய நாயகிக்குச் சரீரம் உஷ்ணமாயும் நீர் இறங்கும்போது பாதையாயும் இருப்பதாய்த் தெரிகின்றது. அதற்குத் தாங்கள் எண்ணெய் கொடுக்கும்படிக் கோருகிறேன்.

லேட் மோவலஸ் கம்பெனி
கொத்தா கிருஷ்ணசாமி செட்டியார்.

க்ஷயரோகம் நீங்கிற்று

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு: என்னுடைய நாயகிக்கு ஏற்பட்டிருந்த க்ஷயரோகம் காரணமாய் அதிகமாய்க் காய்ந்து கொண்டிருந்த சுரமும், இருமலும் தங்கள் இன்பசாரம் என்னும் மாத்திரைகளில் சில புட்டி சாப்பிட்டவுடன் நீங்கிவிட்டது. இப்போது நிறையிலும் அதிகப்பட் டிருக்கின்றது. இருமலும், சுரமும் இருந்த இடம் தெரியாமல் போய்விட்டது. தங்களுடைய இன்பசார மாத்திரை ஆச்சரியகரமான மருந்து என்பதில் சந்தேகமேயில்லை. இதை க்ஷயரோகத்தால் துன்பப்படும் என்னுடைய சிநேகிதர்களுக்குச் சொல்லி வருகின்றேன்.

வி. ராமநாத ஐயர்,

7—5—32 கார்ட்டன் வூட்ராப் கம்பெனி, மதராஸ்.

அன்பார்ந்த டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு,

இதுவரையிலும் 6 புட்டி இன்பசார மாத்திரையை என் மனைவிக்குக் கொடுத்துள்ளேன். அதனால் நான் எதிர் பார்க்காத வண்ணம்

குணம் கண்டிருக்கிறேன். இரத்த விருத்தியும் நல்ல பசியும் எடுக்கின்றது. என் மனைவி பிழைத்தது ஆச்சரியமே!

வேறொரு பெண்மணிக்கு இதைக் கொடுத்திருக்கிறேன். அவர்களுக்கு இரத்த மில்லாமல் வெளுத்திருந்த உடம்பு இப்போது இரத்தம் பரவிவிட்டது. இன்னும் இரண்டு புட்டி வி. பி. யில் அனுப்பவும்.

இப்படிக்கு

28—4—33, காஞ்சிபுரம். Dr. T. N. நடராஜன். L. M. P.

ஒரு மாதம் சாப்பிடக்கூடிய 30 மாத்திரைகள் அடங்கிய

புட்டி 1-க்கு விலை ரூபா 5.

தைலாமிர்தம்

இத் தைலம் பலவித உயர்ந்த பச்சிலைகளின் ரசமும் பசுவின் பால் கோரோசனை முதலாண உயர்ந்த வஸ்துக்களும், மூளையைக் குளிரச் செய்யும் வித்துத் தினுசுகளும் மற்றும் பல கடைச் சரக்குகளும் சேர்த்துத் தயார் செய்யப்பட்டது.

இத் தைலத்தைத் தேய்த்து ஸ்நானம் செய்து வர, கண் எரிச்சல், கண் சிவப்பு, கண்ணில் நீர் வடிதல், கண் குத்தல், கண்ணில் பூ விழுதல், பார்வை மந்தம், கண் கூசல் முதலான சகல நேத்திர ரோகங்களையும், மூளைக் கொதிப்பு, தலை சுத்தல், மயக்கம், புத்தி மந்தம், சோம்பல் முதலானவைகளையும் நீக்கி மூளைக்குக் குளிர்ச்சியைத் தந்து, புத்தித் திட்சண்யத்தை உண்டு பண்ணும். ஒத்தைத் தலைவலி, கழுத்து நரம்பு வலி, மண்டைக் குத்தல் இவைகள் போம். மூளையின் கொதிப்பால் உண்டாகும் பைத்தியம் நீங்கும்.

5 பலம் கொண்ட டின் ரூபா 1. தபால் சார்ஜ் பிரத்தியேகம்.

காஸ்டோலின்

(இது சர்வ படையையும் சம்மரிக்கும்)

சரீரத்தில் இடுப்பிலும், கழுத்துப் பட்டைகளிலும், துடையின் இடுக்கிலும், சாமான் கூட்டின் மேலும் படரும் படையானது இரவுபகலாக மானாபிமானம் விட்டு பலர் முன்னிலையில் சாமான் கூட்டில் கையைவைத்து நமை நீங்க சொறிந்துக் கொள்ளச் செய்கின்றது.

சிலர்க்கு முகத்திலும் கழுத்திலும் படர்ந்து விகாரத்தை உண்டு பண்ணுகின்றது. சிற்சிலருக்கு முழங்காலுக்குக் கீழ், கணுக்காலுக்குமேல் படர்ந்து எந்நேரமும் நீர் கசிந்துகொண்டு இரணமாய் இருக்கின்றது.

இத்தகைய வியாதிக்கு இங்கிலீஷ் மருந்தில் ஆசிட்சாலிசிலிக் என்னும் பவுடரை மெதிலேடட் ஸ்பிரிட் என்னும் திரவத்துடன் கலந்து பலர் படை மருந்து என்று விற்கின்றார்கள். இம் மருந்தை வாங்கி பூசினவுடன் எரிச்சல் கொடுத்து உதிர்வதுபோல் காணப்பட்டு மீண்டும் திரும்பி விடுகின்றது. எரிச்சலும் பொறுப்பது கஷ்டமாகின்றது. சிலருக்குக் குணமே கிடைப்பதில்லை. ஆதலால் அத்தகைய மருந்தைக் காட்டிலும் தமிழ் மருந்தே வேருடன் களையக்கூடியது. ஆகையால் எங்களால் தயார் செய்யப்பட்டுள்ள காஸ்டோலின் என்னும் விளக்கெண்ணெயினால் தயார் செய்த படை மருந்தை உபயோகித்துப் பாருங்கள்.

வேண்டுவோர் 6 அணா தபால் தலை அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

Rangoon,
Dated 24th August 1933

Dear Doctor

I have the pleasure to inform you that your GASTOLINE has got a very good effect in curing all kinds of skin diseases as the stock previously recieved by V. P. P. is nearly finished, and there is a good demand for it, I request you to send ½ dozen bottles by earliest V. P. P. & oblige.

Thanking you in anticipation, yours fai hfully
E. K. Panchanatham,
c/o The Rangoon Electric Tramway & Supply Co. Ltd.
Merchant Street, Rangoon.

எமது விலாசம்:—

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார்,
31, வைத்தியநாத முதலித் தெரு, சென்னை.

208531

சந்தா நேயர்களுக்கு

1. சந்தாத் தொகையை முன்னதாக மணியார்டர் மூலம் அனுப்ப வேண்டும். வி. பி. யில் பெறுவதென்றால் ரிஜிஸ்டர் சார்ஜ 3 அணு, மணியார்டர் கமிஷன் 2 அணு, வி. பிக்குத் தபால் சார்ஜ ½ அணு, ஆக 5½ அணு சேர்த்து ரூபா 1-5-6 கட்டி வி. பி. யைப் பெற நேரிடும். மணியார்டர் அனுப்பினுல் ரூ. 1-2-0 மட்டுமே யாகும். ஆதலால் முன்னதாக மணியார்டர் அனுப்பிப் பத்திரிகை பெற்றுக்கொள்வதே இரு சாராருக்கும் நலமாகும். இது முக்கிய மாய்க் கவனிக்க வேண்டிய விஷயம்.

2. இடம் மாறும் சந்தாதாரர்கள் தங்கள் புதிய விலாசத் தோடு சந்தா எண்ணையும் குறிப்பிட்டு எழுத வேண்டும்.

3. சந்தாதாரர்கள் கடிதம் எழுதும்பொழுதும் மணியார்டர் அனுப்பும் பொழுதும் சந்தா நம்பரை அவசியம் குறிப்பிட்டு எழுத வேண்டும். இன்றேல் பதில் செய்ய இயலாது. பதிலை விரும்புவோர் ரிப்ளை கார்டாவது தபாற் பில்லையாவது அனுப்ப வேண்டும்.

வியாசம் எழுதுவோர்க்கு

'தமிழா'சில் வெளியிட வியாசங்கள் அனுப்புவோர் தயவு செய்து பின் வரும் விதிகளைக் கவனித்தல் அவசியமாகும்:—

1. இலகுவான இனிய செந்தமிழ் நடையில் படிக்கப் படிக்க இன்ப மூட்டும், நினைக்க நினைக்க ஆவேச முண்டாக்கும் அரிய சரித் திரங்களும், நெஞ்சை அள்ளும் சிறு கதைகளும், விடா நகைப்பை விளைவிக்கும் விகடத் துணுக்குகளும், உள்ளத்தை உருக்கும் வாழ்க்கை வரலாறுகளும், நாட்டுப்பற்றும், மொழிப்பற்றும், உரிமை வேட்கையும் உண்டாக்கும் உயர்தர வியாசங்களும், சீர்திருத்த விஷ யங்களும் அன்போடு அங்கீகரிக்கப்படும்.

2. வியாசம் எழுதுவோர் எளிய இனிய தமிழ் நடையில் இலக்கண வழுவில்லாமல் ஒரே பக்கத்தில் மிகத் தெளிவாக மையி ஞல் எழுதி அனுப்புதல் வேண்டும்.

3. எந்தக் கட்டுரையும் நான்கு அல்லது ஐந்து பக்கத்திற்குள் அடங்கக் கூடியதாக இருப்பதே நலம். இத்தகைய வியாசங்களே முதன்மையாகக் கருதப்படும்.

4. அங்கீகாரமாகாத கட்டுரைகளைத் திருப்பி அனுப்பவேண்டு மானுலும், அனுப்பிய கட்டுரைகளைப்பற்றி அபிப்பிராய மறிய வேண்டு மானுலும் அவற்றோடு தபால் தலைகளும் அனுப்ப வேண்டும்.

5. கிடைக்கப்பெறும் கட்டுரைகளைக் கூட்டவும் குறைக்கவும் நிறுத்தவும் ஆசிரியருக்கு அதிகார முண்டு.

 Rgd. M. No. 2559.

கார்டோலின்

ஆஸ்தமாவுக்கு அரிய ஔடதம்

30, 40 வருடங்களாகக் காசநோயால் கஷ்டப்பட்டவர்களை இம் மருந்து காப்பாற்றி இருக்கிறது.

விலை புட்டி 1-க்கு ரூபா 10. விபரமான கேட்லாக்குக்கு எழுதவும்.

சளி இருமல், சுவாச காசம், காச இருமல், மந்தார காசம் முதலிய நோய்களுக்குச் சிறந்த மருந்து.

விலாசம்:—31, வைத்தியநாத முதலி வீதி, சென்னை.

Edited, Printed and Published by Dr. M. Masilamani Mudaliar at Meenatchi Press, 31, Vaithiyanatha Mudali Street, Madras.